www.onlineuthayan.com

பக்கங்கள் : 32

# உதயன்

சுடர் 27
கதிர் 238

வள்ளுவர் ஆண்டு 2043 ஆடி 06 சனிக்கிழமை (21/07/2012) UTHAYAN - A Lively National Tamil Daily

## கரையொதுங்கிய ஆணின் சடலம்

யாழ்ப்பாணம், ஜூலை 21
மாதகல் கடற்கரையில் உருக்குலைந்த நிலையில் சடலமொன்று இளவாலைப் பொலிஸாரால் நேற்றுப் பிற்பகல் மீட்கப்பட்டுள்ளது.

பொது மக்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் குறித்த 04↘

# ரிஷாத்துக்கு எதிராக நாடெங்கும் நீதித்துறையினர் நேற்று போர்க்கொடி

யாழ்ப்பாணம், ஜூலை 21
மன்னார் நீதிவான் அச்சுறுத்தப்பட்டமை மற்றும் மன்னார் நீதிமன்றக் கட்டடத்தொகுதி தாக்கப்பட்டமை ஆகியவற்றைக் கண்டித்து நாடளாவிய ரீதியில் சட்டத்தரணிகள் பணிப்புறக் கணிப்பில் ஈடுபட்டனர். நீதிபதிகளும் பணிகளைப் புறக்கணித்தனர். இதனால் நாட்டின் பல பாகங்களிலும் நீதிமன்றங்களில் பணிகள் முற்றாக முடங்கின.

மன்னார் நீதிவான் அந்தோனிப்பிள்ளை ஜுட்சனுக்குத் தொலைபேசி மூலமாக அச்சுறுத்தல் விடுத்து, நீதிமன்றத்தின் சுதந்திரமான செயற்பாட்டுக்கு இடையூறு விளைவித்ததாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ள அமைச்சர் ரிஷாத் பதியுதீனுக்கு எதிராக உடன் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனச் சட்டத்தரணிகள் சங்கம் கோரியுள்ளது. இந்தவிடயம் குறித்து இலங்கை நீதிபதிகள் சங்கத்தினரும் கவனம் செலுத்தியுள்ளனர்.

இதேவேளை, மன்னார் நீதிமன்றத்தின் மீதான தாக்குதல் மற்றும் நீதிபதிகள் மீதான அச்சுறுத்தலைக் கண்டித்து வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், பருத்தித்துறை, மல்லாகம், சாவகச்சேரி, ஊர்காவற்றுறை நீதிமன்றங்களிலும் இரண்டாவது நாளாகவும் சட்டத்தரணிகள் மற்றும் நீதிமன்ற ஊழியர்கள் ஆர்ப்பாட்டத்திலும் பணிப்புறக் 04↘

### நீதிமன்றங்கள் அனைத்தும் முற்றாக முடங்கின



## ரிஷாத் பதியுதீனை உடன் கைது செய்க

வவுனியா, ஜூலை 21
நீதிமன்றத்தை அவமதித்த அமைச்சர் ரிஷாத் பதியுதீனை உடனடியாக கைது செய்து சட்டத்தின் முன்னால் நிறுத்த வேண்டும். இல்லையேல் வவுனியா சட்டத்தரணிகளின் போராட்டம் தொடரும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் வவுனியா சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் அன்ரன் புனிதநாயகம்.

இதுவரை இலங்கையிலேயே எந்தவொரு நீதிமன்றத்தின் நீதிபதியும் மன்னாரில் அவமதிக்கப்பட்டது போன்று அவமதிக்கப்படவில்லை.

மாவட்ட நீதி மன்றத்தின் தீர்ப்பில் திருப்தியில்லாது விட்டால் மேல் நீதிமன்றத்தில் முறையீடு செய்து உரிய தீர்ப்பினைப் பெற்றுக் கொள்ள முடியும். இதை விடுத்து நீதிபதியை 04↘

## நீதியமைச்சரும் கண்டனம்

கொழும்பு, ஜூலை 21
மன்னார் நீதிமன்றம் மீதான தாக்குதல், மன்னார் நீதிபதியை அமைச்சர் ரிஷாத் பதியுதீன் அச்சுறுத்தியமை ஆகியவற்றை நீதியமைச்சரும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீம் கண்டித்துள்ளார்.

நேற்று கொழும்பில் அமைச்சர் நடத்திய ஊடகவியலாளர் 04↘

## மன்னார் நீதிவானுக்கும், ஆயருக்கும் எதிராக வவுனியாவில் ஆர்ப்பாட்டம்

### அமைச்சர் ரிஷாத்தை ஆதரித்தும் கோஷம்

வவுனியா, ஜூலை 21
'விடுதலைப் புலிகள் செய்த வேலையை நீயும் செய்யாதே' என்று முழங்கியவாறு வவுனியா நகரில் நேற்று முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டனர்.

மன்னார் நீதிவானின் தீர்ப்பைக் கண்டித்தும், மன்னார் ஆயருக்கு எதிராகவும், அமைச்சர் ரிஷாத் பதியுதினுக்கு ஆதரவாகவும் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

நேற்றுப் பிற்பகல் ஒரு மணியளவில் நகர பள்ளிவாசலில் தொழுகையில் ஈடுபட்ட முஸ்லிம்கள் இறுதியில் பள்ளிவாசலுக்கு முன்பாக வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்துக்கு நீதிமன்றம் ஏற்கனவே தடை உத்தரவு பிறப்பித்திருந்த நிலையில் பள்ளிவாசலுக்கு முன்பாக கூடிய நூற்றுக்கணக்கான முஸ்லிம்கள் ஆயருக்கு எதிராக 04↘

## நீதிமன்ற தாக்குதல் சம்பவம் மன்னாரில் 15 பேர் கைது

மன்னார், ஜூலை 21
மன்னார் நீதிமன்றம் மீதான தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களில் 15 பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாக்குதல் நடத்தினர் எனச் சந்தேகிக்கப்படும் நபர்களைக் கைது செய்வதில் பொலிஸாரும், புலனாய்வுத் துறையினரும் ஈடுபட்டு வருகின்றனர். கைது செய்யப்பட்ட 15 04↘

## பருத்தித்துறை நீதிபதியின் வீடு தாக்கப்பட்டமைக்கும் கண்டனம்

யாழ்ப்பாணம், ஜூலை 21
பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரனின் வாசஸ்தலம் மீது தாக்குதல் நடத்தப்பட்டதை யாழ். மாவட்ட சட்டத்தரணிகள் சங்கம் வன்மையாகக் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளதுடன் நேற்று இந்தச் சம்பவத்தைக் கண்டித்தும் போராட்டத்தில் ஈடுபட்டது.

மன்னார் நீதிவான் அச்சுறுத்தப்பட்டமை மற்றும் மன்னார் நீதிமன்றக் கட்டடத் தொகுதி மீதான தாக்குதல் ஆகியவற்றைக் கண்டித்து சட்டத்தரணிகள் நேற்று நடத்திய பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தின்போது பருத்தித்துறை நீதிபதியின் வீடு தாக்கப்பட்டமைக்கு எதிராகவும் கண்டனக் கோஷங்கள் 04↘

## நிமலரூபனின் சடலம் திங்களன்று வவுனியாவுக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 21
சிறைச்சாலையில் தாக்கப்பட்டு, உயிரிழந்த கைதியான நிமலரூபனின் சடலத்தை நாளைமறுதினம் திங்கட்கிழமை அவரது பெற்றோரிடம் கையளிக்குமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

உயிரிழந்த நிமலரூபனின் சடலத்தை மகரவில் புதைக்குமாறு உத்தரவிடப்பட்டிருந்தது. எனினும் இதனை எதிர்த்து தம்முடைய மகனின் சடலத்தை தம்மிடம் ஒப்படைக்குமாறு அவரது பெற்றோர் உயர் நீதிமன்றத்தை நாடியிருந்தனர்.

இந்த நிலையில் குறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவிருந்தது. எனினும் அமைச்சர் ரிஷாத் பதியு 04↘

## கிழக்கில் கூட்டமைப்பினருக்கு வழிவிட்டுச் செயற்படத் தயார்

### ஹக்கீம் அதிரடி அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 21
கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் தீர்மானிக்கும் சக்தியாக நாம் மாத்திரமல்ல, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் மாறியுள்ளது. எனவே, தமிழ்க் கூட்டமைப்பினர் கிழக்கில் அதிக ஆசனங்களைக் கைப்பற்றினால் அவர்களுக்கு வழிவிட்டு செயற்பட நாம் தயாராகவுள்ளோம்.

- இவ்வாறு முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் நேற்று தெரிவித்துள்ளார்.

அத்துடன், கிழக்குத் தேர்தலில் எமது அரசியல் பலத்தைக் காண்பிப்பதற்காகவே நாம் தனித்துக் களமிறங்கியுள்ளோம். இதனால் அத் தேர்தல் முடிவுகள் எவ்வாறு அமையும் என்பதில் கேள்விகள் எழுந்துள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

முஸ்லிம் கட்சிகள் மூன்றும் ஒன்றிணைந்து கிழக்குத் தேர்தலில் களமிறங்குவது குறித்து 04↘

## படை அதிகாரிகள் பலர் வெளிநாடுகளில் தஞ்சம்

### விவரம் திரட்டுகிறது பாதுகாப்பு அமைச்சு

கொழும்பு,ஜூலை 21
இலங்கையில் போர் முடிவுக்கு வந்த பின்னர் படை அதிகாரிகள் பலர் வெளிநாடுகளில் அரசியல் தஞ்சம் கோரியுள்ளனர் என்ற விவரம் பாதுகாப்புத் தரப்புக்குத் தற்போதே தெரியவந்துள்ளது.

கொமடோர் குருபரன் என்ற இலங்கைக் கடற்படையின் முன்னாள் அதிகாரி கனடாவில் அரசியல் தஞ்சம் மறுக்கப்பட்ட விவகாரம் அனைத்துலக ஊடகங்களில் வெளியான பின்னரே, அது பற்றி இலங்கைக் கடற்படைக்குத் தெரியவந்துள்ளது.

கொமடோர் குருபரன் பற்றிய 04↘



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிதைந்த அமெரிக்க உறவை சீர்செய்ய இலங்கை முயற்சி

## கூறுகிறார் அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர்

நியூயோர்க்,ஜூலை 21

இலங்கை தற்போது அமெரிக்காவுடன் அனைத்து இராஜதந்திர ரீதியான உறவுகளையும் பலப்படுத்தும் வகையில் வலுவான பொருளாதார உறவைக் கட்டியெழுப்பி வருவதாக அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் ஜாலிய விக்கிரமசூரிய தெரிவித்துள்ளார். இரு நாடுகளுக்கும் இடையில் மிகப் பலமான பொருளாதார உறவைக் கட்டியெழுப்புவதன் மூலம் சிதைந்து போயுள்ள இராஜ தந்திர ரீதியான உறவைச் சீர்செய்து கொள்ள முடியும் எனவும் அவர் கூறியுள்ளார்.

அமெரிக்கா கூறுகின்ற எல்லாவற்றுக்கும் நாங்கள் உடன்படவில்லை அல்லது அமெரிக்கா கூறுகின்றவற்றை நாங்கள் மறுக்கவுமில்லை. எதிர்காலத்தில் அமெரிக்காவுடன் சிறந்த உறவைக் கட்டியெழுப்ப நாம் விரும்புகின்றோம் எனவும் விக்கிரமசூரிய மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்காவானது இலங்கையின் சிறந்த வர்த்தகப் பங்காளியாகக் காணப்படுகின்றது. இந்த இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார உறவு பலப்படுத்தப்படும் போது, அரசியல் சார் உறவுகளும் முன்னேற்றமடையும் என விக்கிரமசூரிய சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையில் பணிபுரிவோருக்கான தொழில்சார் உரிமைகள் போதியளவில் வழங்கப்படவில்லை என குற்றஞ்சாட்டப்பட்ட பின்னர், தொழிலாளர்களின் பிரச்சினைகளை முதன்மைப்படுத்தும் நோக்கில் அமெரிக்கா இந்த ஆண்டின் ஆரம்பத்தில் இலங்கையுடன் இணைந்து நிகழ்ச்சித் திட்டம் ஒன்றைச் செயற்படுத்தி வருகிறது.

எமது நாட்டிலுள்ள தொழிற்சாலைகள் எவ்வாறு செயற்படுத்தப்படுகின்றன என்பது தொடர்பாகவும், நாட்டில் நிலவும் தொழில் உரிமைகள் தொடர்பாகவும் இரு ஆண்டுகளாக நாம் கலந்துரையாடல்களை மேற்கொண்டோம். அமெரிக்க அதிகாரிகள் இலங்கைக்கு வருகை தந்து இது தொடர்பான உண்மைத்தன்மைகளை கண்டறிந்துள்ளனர்'' எனவும் விக்கிரமசூரிய தெரிவித்தார்.

இலங்கையில் தொழிலாளர் பிரச்சினைகள் கண்டறியப்பட்டுச் சரியான முறையில் தீர்க்கப்படுவதாகவும், தொழிலாளர் உரிமைகள் நன்றாக உள்ளதாகவும் அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர் எனவும் அமெரிக்க நிறுவனங்கள் தமது முதலீடுகளை மேற்கொள்வதற்கு இலங்கை தற்போது பாதுகாப்பான நாடாக காணப்படுகின்றது எனவும் விக்கிரமசூரிய தெரிவித்துள்ளார். (த)

# கிழக்கில் 37 ஆசனங்களுக்கு 1470 வேட்பாளர்கள் போட்டி

மட்டக்களப்பு,ஜூலை 21

எதிர்வரும் செப்ரெம்பர் 8 ஆம் திகதி மூன்று மாகாண சபைகளுக்கு நடக்கவுள்ள தேர்தலில் 114 ஆசனங்களைக் கைப்பற்றுவதற்காக 3,073 வேட்பாளர்கள் களத்தில் குதித்துள்ளனர். கிழக்கு மாகாணசபைக்கான தேர்தலில் மொத்தம் 1470 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

கிழக்கு, வடமத்திய, சப்ரகமுவ மாகாணசபைகளுக்கான தேர்தலுக்கு வேட்பாளர் பட்டியல் கையேற்பு நேற்று முன்தினம் நண்பகலுடன் நிறைவடைந்ததை அடுத்து, தேர்தல் திணைக்களம் இந்த விவரங்களை வெளியிட்டுள்ளது.

இந்தத் தேர்தலில் 86 சுயேட்சைக் குழுக்கள் சார்பாக 1454 வேட்பாளர்களும், அரசியல்கட்சிகளின் சார்பாக சமர்ப்பிக்கப்பட்ட 89 பட்டியல்களின் கீழ் 1619 வேட்பாளர்களும் போட்டியிடுகின்றனர்.

கிழக்கு மாகாணசபைக்கான தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 13 கட்சிகளும், 21 சுயேச்சைக் குழுக்களும் போட்டியிடுகின்றன. இவற்றின் சார்பில் 476 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்

அம்பாறை மாவட்டத்தில் 16 கட்சிகளும், 18 சுயேச்சைக் குழுக்களும் போட்டியில் குதித்துள்ளன. இங்கு மொத்தம் 578 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

திருகோணமலை மாவட்டத்தில் 16 அரசியல் கட்சிகளும், 16 சுயேச்சைக் குழுக்களும் போட்டியிடுகின்றன. இவற்றின் சார்பில் 416 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

இந்தத் தேர்தலின் மூலம் மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து 11 உறுப்பினர்களும், அம்பாறை மாவட்டத்தில் இருந்து 14 உறுப்பினர்களும், திருகோணமலை மாவட்டத்தில் இருந்து 10 உறுப்பினர்களும் நேரடியாகத் தெரிவு செய்யப்படுவர்.

### 114 ஆசனங்களைக் கைப்பற்றுவதற்காக 3,073 வேட்பாளர்கள் களத்தில்

இவர்கள் தவிர, மேலும் இரு மேலதிக உறுப்பினர்கள் கட்சிகள் பெறும் வாக்குகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு மொத்தம் 37 பேர் கிழக்கு மாகாணசபைக்குத் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

கிழக்கு மாகாணசபைக்கான தேர்தலில் வாக்களிக்க மொத்தம் 10, 33,749 வாக்காளர்கள் தகுதி பெற்றுள்ளனர்.

அதேவேளை, வடமத்திய மாகாணசபைக்கான தேர்தலில் வாக்களிக்க 9,00,87 வாக்காளர்களும், சப்ரகமுவ மாகாணசபைக்கான தேர்தலில் வாக்களிக்க 14, 01,794 வாக்காளர்களும் தகுதி பெற்றுள்ளனர்.

இந்த மூன்று மாகாண சபைகளுக்கும் வரும் செப்ரெம்பர் 08ஆம் திகதி நடைபெறும் தேர்தல் மூலம் 114 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர். (த)

# அகதிகள் சென்ற படகுகளை தீயிட்டது ஆஸி. கடற்படை

கான்பரா,ஜூலை 21

இலங்கையில் இருந்தும் இந்தோனேசியாவில் இருந்தும் அகதிகளை ஏற்றிச் சென்ற இரண்டு படகுகளை ஆஸ்திரேலியக் கடற்படையினர் நேற்று முன்தினம் தீயிட்டு எரித்துள்ளனர்.

கிறிஸ்மஸ்தீவில் இருந்து 20 கடல் மைல் தொலைவில் வைத்து இந்தப் படகுகள் தீயிட்டு எரிக்கப்பட்டுள்ளன. இவற்றில் ஒன்று 51 இலங்கை அகதிகளுடன் நேற்றுமுன்தினம் கிறிஸ்மஸ் தீவை அடைந்திருந்தது. மற்றொரு படகு இந்தோனேசியாவில் இருந்து 65 அகதிகளை ஏற்றிச் சென்றிருந்தது.

அகதிகள் அனைவரும் பாதுகாப்பாகத் தரையிறக்கப்பட்ட பின்னரே, இந்தப் படகுகள் தீயிட்டு அழிக்கப்பட்டன. இவை எரிந்து கொண்டிருந்தபோது மற்றொரு அகதிகள் படகு இலங்கையில் இருந்து 25 அகதிகளுடன் நேற்றுமுன்தினம் காலை கிறிஸ்மஸ் தீவை அடைந்தது.

அகதிகளை ஏற்றிவரும் படகுகளை ஆஸ்திரேலியக் கடற்படை எரிப்பது வழக்கமான நடவடிக்கையே என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

> படகுகள் எரிந்து கொண்டிருந்தபோது மற்றொரு அகதிகள் படகு இலங்கையில் இருந்துநேற்றுமுன் தினம் காலை கிறிஸ்மஸ் தீவை அடைந்தது.

இதற்கிடையே நேற்றும் இரண்டு படகுகள் அகதிகளுடன் ஆஸ்திரேலியக் கடல் எல்லையை அடைந்துள்ளன. நேற்றுக் காலை அஸ்மோர் தீவுக்கு அப்பால் இடைமறிக்கப்பட்ட ஒரு படகில் 44 அகதிகளும் 3 மாலுமிகளும் இருந்தனர்.

அதேவேளை, நேற்று பிற்பகல் கொகோஸ் தீவுக்கு அப்பால் இடைமறிக்கப்பட்ட மற்றொரு படகில் 15 அகதிகள் இருந்தனர். நேற்று இடைமறிக்கப்பட்டவர்கள் எந்த நாட்டவர்கள் என்ற விபரம் உடனடியாகத் தெரியவரவில்லை.

எனினும் கொகோஸ் தீவை அடைந்துள்ள படகு பெரும்பாலும் இலங்கையில் இருந்தே புறப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது. (த)

# 280 கோடி ரூபா செலவில் கட்சியின் தலைமையகம்

## அமைக்கிறார் நாமல் ராஜபக்ஷ

கொழும்பு,ஜூலை 21

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்புக்கு எனத் தலைமைக் காரியாலயம் ஒன்றை ஸ்ரீ ஜயவர்த்தன புர கோட்டைக்கு அருகில் அமைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜயவர்த்தன புர கோட்டைக்கு அருகில் 280 கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ள இந்த தலைமைக் காரியாலயம் 7 மாடிக் கட்டடங்கள் கொண்டதாக அமையவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

# தாக்குதலுக்குள்ளான சிறைக் கைதிக்கு பிணை வழங்கும் தீர்ப்பு 25 ஆம் திகதி

வவுனியா, ஜூலை 21

வவுனியா சிறைச்சாலையில் கடுமையாகத் தாக்கப்பட்டதாகக் கூறப்படும் தடுப்புக்காவல் கைதியான பெருமாள் வேலாயுதம் என்பவரின் பிணை விண்ணப்பம் மீதான தீர்ப்பு வவுனியா மேல்நீதிமன்றத்தில் எதிர்வரும் 25ஆம் திகதி வழங்கப்படவிருக்கின்றது.

அவசரகாலச் சட்டத்தின் கீழ் அதிசக்தி வாய்ந்த வெடிபொருள்களுடன் கைது செய்யப்பட்ட மேற்படி எதிரியான பெருமாள் வேலாயுதம் மீதான குற்றச்சாட்டுப் பத்திரம் வவுனியா மேல்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு, மேல்நீதிமன்ற நீதிபதி சந்திரமணி விஸ்வலிங்கம் முன்னிலையில் விசாரணை நடைபெற்றுவருகின்றது.

வழமையாக நடந்து வந்த நீதிமன்ற விசாரணையில் பங்குகொண்ட எதிரி பெருமாள் வேலாயுதம் சில தினங்களுக்கு முன்னர் மேல் நீதிமன்ற விசாரணைக்கு சக்கரநாற்காலியில் கொண்டு வரப்பட்டார்.

சட்டவைத்தியரிடம் வவுனியா சிறைச்சாலைக்குள் வைத்து விசேட அதிரடிப்படையினரின் தாக்குதலுக்குள்ளானதாக வாக்குமூலமளித்துள்ள இவர், இந்தத் தாக்குதல் காரணமாக இடுப்பு எலும்பு முறிக்கப்பட்டும், இடது கை மற்றும் உடலின் பின்பகுதியில் கண்டல்காயங்கள் ஏற்பட்டும் உடல் வலுவிழந்து அங்கவீனமுற்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதுடன், மருத்துவச் சிகிச்சை பெறவேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளதால் அவரைப் பிணையில் விடுதலை செய்யுமாறு அவர் சார்பில் நீதிமன்றத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டது.

ஏற்கனவே மேல்நீதிமன்றக் கட்டளையின் பேரில் இவரது நிலை தொடர்பான ராஹம போதனா வைத்தியசாலை சட்டவைத்திய அதிகாரியின் அறிக்கை மேல்நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் எதிரி சார்பாக விடுக்கப்பட்ட பிணை தொடர்பான கோரிக்கையைக் கவனத்தில் கொண்ட மேல்நீதிமன்ற நீதிபதி சந்திரமணி விஸ்வலிங்கம்,

கைதியை வவுனியா வைத்தியசாலையில் அனுமதித்து, தற்போதைய அவரது உடல் நிலை பற்றியும், அவருக்கான மருத்துவச் சிகிச்சை எப்படி அமைய வேண்டுமென்பது பற்றியும் மன்றுக்கு மருத்துவ அறிக்கை சமர்ப்பிக்கப்படல் வேண்டுமென உத்தரவிட்டார்.

அத்துடன் எதிரியின் சார்பிலான விண்ணப்பத்தின் பேரில் பிணை வழங்கும் தீர்ப்பை எதிர்வரும் 25ஆம் திகதிக்கும் ஒத்திவைத்தார். (த-30)






மன்னார் நீதிமன்றம் தாக்கப்பட்டமை, நீதிவான் அச்சுறுத்தப்பட்டமை ஆகியவற்றைக் கண்டித்து நேற்று [illegible] நீதிமன்றம் முன்பாகவும் பருத்தித்துறை நீதிமன்றம் முன்பாகவும் சட்டத்தரணிகளும் நீதிமன்ற உத்தியோகத்தர்களும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (த-4-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படையினர் 2000 வீடுகள் கட்டிக்கொடுத்தனர்

# அரசியல்வாதிகள் தமிழருக்கு என்ன செய்துள்ளீர்கள்?

## யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி இப்படிக் கேட்கிறார்

யாழ்ப்பாணம், ஜூலை 21

யாழ்.மாவட்டத்தில் இராணுவம் அவசியமற்றது என்று கூறும் அரசியல்வாதிகள் வறிய மக்களுக்காக என்ன செய்துள்ளீர்கள் .நாங்கள் இரண்டாயிரம் வீடுகள் வரையில் மக்களுக்கு நிர்மாணித்து வழங்கியுள்ளோம்.

இவ்வாறு யாழ். மாவட்ட இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க கேள்வியெழுப்பினார்.



கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் ஜே/279 கிராம சேவகர் பிரிவில் வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட குடும்பமொன்றுக்கு இராணுவத்தினால் நிர்மாணிக்கப்பட்ட வீடு கையளிக்கப்பட்டது.

3 ஆவது பிரிவு விஜயபாகு காலாட்படையினரால் இந்த வீடு நிர்மாணிக்கப்பட்டது . இரண்டரை லட்சம் ரூபாய் வரை செலவாகும் என்று மதிப்பிடப்பட்ட போதும் இராணுவத்தின் உழைப்பின் மூலம், இராணுவமுகாமிலிருந்த பொருள்களையும் பயன்படுத்தி 75 ஆயிரம் ரூபா செலவில் இந்த வீடு கட்டப்பட்டுள்ளது .

இந்த வீடு கையளிக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. இதில் கோப்பாய் பிரதேச செயலர் ம. பிரதீபன் மற்றும் அந்தப் பகுதி கிராம சேவகர் ஆகியோர் கலந்து கொண்டனர் .

வீட்டைத் திறந்து வைத்த பின்னர் உரையாற்றும் போதே இராணுவத் தளபதி இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது;

தற்போதைய கால கட்டத்தில் யாழ்ப்பாணத்தில் நிலவும் அமைதியை விரும்பாதவர்கள், நாங்கள் மேற்கொள்ளும் இவ்வாறான முயற்சிகளை விரும்பாத அரசியல் தரப்பினர் யாழ். மாவட்டத்தில் இராணுவம் அவசியமில்லை என்று கூறுகின்றனர் .

இங்கு அதிகரித்த இராணுவப்பிரசன்னம் இருப்பதாகவும் தெரிவிக்கின்றனர் . அத்துடன் இராணுவத்தினரால் பொது மக்களுக்கு சிரமம் ஏற்படுவதாகவும், அன்றாட வாழ்க்கை பாதிப்படைவதாகவும் இந்த அரசியல் தரப்பினர் தெரி விக்கின்றனர்.

நான் அவர்களுக்கு கூறக்கூடிய பதில், இங்குள்ள எமது இராணுவத்தினர் மக்களுக்கு சிறந்த சேவையையும் , நன்மை பயக்கும் காரியங்களையுமே செய்கிறார்கள் என்பது தான் .

நாங்கள் இதுவரையில் இரண்டாயிரம் வீடுகள் வரையில் அமைத்துக் கொடுத்துள்ளோம். இராணுவத்தினர் இங்கு அவசியமில்லை என்று குறைகூறும் அரசியல் கட்சியினர் வறியமக்களுக்கு ஏதாவது உதவி செய்துள்ளனரா?

இத்தகைய பலதரப்பட்ட கருத்துக்களை கணக்கில் எடுக்காது , பொது மக்களது தேவை குறித்து கவனம் செலுத்தி அவர்களுக்குரிய தேவைகளை அறிந்து அவற்றை நிறை வேற்றிக் கொடுக்க இராணு வத்தினர் எந்த வேளையிலும் தயாராக இருப்பார் கள் - என்றார் .

(ம-5)

# பொருள்கள் வழங்கி மீள்குடியமர்வுப் பணி



வலி.வடக்கில் மக்கள் மீளக்குடியமர்வதற்கு கடந்த வருடம் அனுமதிக்கப்பட்ட பிரதேசங்களில் இதுவரையில் மீளக்குடியமராத மக்களில் ஒரு தொகுதியினருக்கு உதவிப் பொருள்கள் நேற்றைய தினம் வழங்கப்பட்டு மீளக்குடியமர்த்தப்பட்டனர்.

வலி.வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மாவிட்டபுரம், மாவிட்டபுரம் தெற்கு, தந்தை செல்வாபுரம், கொல்லன் கலட்டி ஆகிய 4 கிராம சேவகர் பிரிவுகளில் கடந்த வருடம் மே மாதம் மீள்குடியமர்வு நடைபெற்றது.

இந்த நிலையில் குறித்த பகுதிகளில் மக்கள் மீளக்குடியமர்வதற்குரிய அடிப்படை வசதிகள் எதுவுமில்லாததால் மக்கள் அந்தப் பகுதிகளில் வந்து மீளக்குடியமரவில்லை.

இந்த நிலையில் மீளக்குடியமராத மக்களைச் சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தும் நோக்குடன் அவர்களுக்கான ஒரு சில உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டு நேற்றையதினம் மீளக்குடியமர்த்தப்பட்டனர்.

பளை வீமன்காமம் பாடசாலையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, மக்களுக்கான உதவிப் பொருள்களை வழங்கி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

இந்திய அரசினது உதவிப் பொருள்கள் மற்றும் யு.என்.எச்.சி.ஆரின் உணவல்லாத பண்டங்கள், திவிநெகும திட்ட பயனாளிகளுக்கு வழங்கப்படும் பயன்தரு மரங்கள், வாளிகள், மண்ணெண்ணெய் விளக்குகள் என்பன மீளக்குடியமர்ந்த மக்களுக்கு வழங்கப்பட்டன. மேலும் வித்தகபுரம், தந்தை செல்வாபுரம் ஆகிய கிராமங்களின் ஒரு தொகுதிக்கு மின்சார வழங்கலும் நேற்றைய தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. (ம-5)

## மின்சாரம் தடைப்பட்டதும் பஸிலுக்கு பிறந்தது ஞானம்

*யாழ்ப்பாணம், ஜூலை 21*

*கைதடி பனை ஆராய்ச்சி நிலையத் திறப்புவிழா நிகழ்வில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் உரையாற்றிக் கொண்டிருந்தபோது திடீரென மின்சாரம் தடைப்பட்டது.*

*இதனால் விழித்துக்கொண்ட அமைச்சர் உரையில் திருப்பத்தை ஏற்படுத்தி, யாழ்ப்பாணத்துக்கு 24 மணி நேரம் மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.*

*யாழ்ப்பாணத்தில் அடிக்கடி மின்தடை இடம்பெற்று வருகின்றமை நாம் அறிந்ததே.*

*லக்ஷபானா மின்சாரம் வவுனியாவில் இருந்து கிளிநொச்சி வரை கொண்டுவரப்பட்டுள்ளது.*

*விரைவில் சுன்னாகம் வரைக்கும் லக்ஷபானா மின்சாரம் கொண்டுவரப்பட்டு 24 மணிநேர மின்விநியோகத்துக்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினார்.*

*மின் தடைப்பட்டதால் சுமார் 5 நிமிடம் வரை ஒலி பெருக்கி சாதனங்கள் செயற்படாத நிலையில் உரையாற்றினார்.*

*(ம-13)*

# ஏனைய உற்பத்திப் பொருள்களுடன் பனை உற்பத்தி போட்டியிட வேண்டும்

ஆராய்ச்சி நிலையத் திறப்பு விழாவில் பஸில் தெரிவிப்பு





யாழ்ப்பாணம், ஜூலை 21

பனைசார் உற்பத்திப் பொருள்கள் ஏனைய உற்பத்திகளுடன் போட்டியிடத் தக்க வகையில் அமைய வேண்டும்.

இந்திய அரசின் நிதி உதவியுடன் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ள பனை ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆய்வு கூடங்களில் உள்ள இயந்திரங்களைப் பார்வையிட்டபோது இலங்கையில் மட்டுமல்ல உலகத்திலேயே இருக்கக்கூடிய ஆராய்ச்சி நிலையங்களிலே உள்ள உயர்மட்ட இயந்திர உபகரணங்கள் இருப்பது மனதுக்கு மகிழ்வளிக்கிறது.

இவ்வாறு கைதடி பனை ஆராய்ச்சி நிலைய நினைவுக் கல்லைத் திறந்து வைத்து உரையாற்றும் போது பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ கூறினார்.

பனை ஆராய்ச்சி நிலையத்தினை திறந்து வைத்த பின், அங்குள்ள ஆய்வு கூடங்கள் கட்டடங்களைப் பார்வையிட்டார். இந்த ஆராய்ச்சி நிலையம் பெரும்பாலும் வடக்கு, கிழக்கு சமூக மக்களுக்கு ஒரு ஆதாரமாக இருக்கும். அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தக் கூடியதாக இந்த நிறுவனம் செயற்படும் என்று நம்புகிறேன்.

சமாதானம் ஏற்பட்ட பின்னர் கடந்த இரண்டரை வருடங்களுக்கு முன்னர் பனை மரங்களை வடக்கு கிழக்கில் நட்டு வைத்தோம்.

போர் முடிந்தபின்னர் யாழ். மாவட்டத்தில் முதலாவதாக இடம்பெற்ற அபிவிருத்திக் கூட்டத்தில் பருவமழைக்கு முன்னராக பனை நடுகை ஆரம்பிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பனை உற்பத்தியில் பெரியளவில் தொழிலை விஸ்தரிக்க வேண்டும் என்ற நோக்குடன் இந்த நிலையம் திறக்கப்படுகிறது.

நவீன உலகில் ஏனைய உற்பத்திகளுக்குப் போட்டியாக பனை உற்பத்திகளும் விளங்கவேண்டும்- என்று அமைச்சர் மேலும் கூறினார்.

இந்த நிகழ்வில் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அசோக் கே.காந்தா, பனை அபிவிருத்திச் சபை தலைவர் பசுபதி சீவரத்தினம், பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, செயலாளர் சிவஞானசோதி, யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் [illegible] மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

(ம-13-17)

## பனை அபிவிருத்திக்கு இந்தியாவும் கைகோர்க்கும்

யாழ்ப்பாணம்,ஜூலை 21

இந்தியாவில் உள்ள பனை அபிவிருத்தி நிலையங்களுடன் கைதடி பனை ஆராய்ச்சி நிலையமும் இணைக்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்படும்.

இவ்வாறு இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அசோக் கே. காந்தா நேற்று பனை ஆராய்ச்சி நிலையத்தைத் திறந்து வைத்து உரையாற்றும்போது கூறினார்.

வடக்கு, கிழக்கில் முக்கிய தொழில் வளமாகப் பனைவளம் உள்ளது. போர்க்காலத்துக்கு முன்னர் இங்கு 60 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாரம்பரியமாக பனை சார்ந்த தொழிலையே மேற்கொண்டு வந்தன.

போர்க்காலங்களில் பனை சார்ந்த உற்பத்திகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தன.

இனி இது குறித்துக் கவலையடையத் தேவையில்லை. இதில் உச்சக்கட்ட அபிவிருத்தியை மேற்கொள்ளமுடியும். இன்று திறந்து வைக்கப்படும் இந்தக் கட்டடம் இதற்கு உதவியாக அமையும்.

இதனை மேலும் பலப்படுத்த இந்தியா நிச்சயம் உதவும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(ம-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிகழ்வுகள் இன்று

### சட்டமுகாம்

தேசியமொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு வாரத்தை முன்னிட்டு அமைச்சின் சமூக ஒருமைப்பாட்டு யாழ்ப்பாணம் சட்ட உதவி ஆணைக்குழுவால் நடத்தப்படும் சட்டமுகாம் யாழ்ப்பாணப் பிரதேச செயலக மண்டபத்தில் பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பொது மக்கள் குடும்பம், காணி மற்றும் தொழில் தொடர்பான இலவச ஆலோசனைகளை சட்டத்தரணிகளிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம் என யாழ். மாவட்ட செயலக மேலதிக அரச அதிபர் ரூபிணி வரதலிங்கம் தெரிவித்துள்ளார்.(ம-14)

### பரிசளிப்பு விழா

புலோலி புற்றளை மகா வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா காலை 8 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பாடசாலை அதிபர் மு.அனந்தேஸ்வரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் கலந்து கொள்வார். (ம-14)

***

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா காலை 9.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பாடசாலை அதிபர் திருமதி செல்வமலர் சுந்தரேசன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் கலந்து கொள்வார். (ம-8)

***

மல்லாகம் மகாவித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா முற்பகல் 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பாடசாலை அதிபர் ந.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தெல்லிப்பழை கோட்டக்கல்விப் பணிப்பாளர் கு.சண்முககுலகுமாரன் கலந்து கொள்வார். (ம-51)

## கரையொதுங்கிய ஆணின் சடலம்

சடலம் பொலிஸாரால் மீட்கப்பட்டு பிரேத பரிசோதனைக்காக நேற்று மாலை 6 மணியளவில் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

50 தொடக்கம் 55 வயது மதிக்கத்தக்க ஆணொருவரின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது. இதுவரை குறித்த சடலம் அடையாளம் காணப்படவில்லை என இளவாலைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (த-16-78)

## ரிஷாத் பதியுதீனை உடன் கைது செய்க

அச்சுறுத்துவதும் நீதிமன்றத்தின் மீது தாக்குதல் நடத்துவதும் வன்மையாக கண்டிக்கத் தக்கது. நீதிபதியை அவமதித்த அமைச்சர் ரிஷாத் பதியுதீன் உடனடியாக கைது செய்யப்பட்டு நீதியின் முன்னால் நிறுத்தப்படல் வேண்டும். இல்லையேல் வவுனியா சட்டத்தரணிகளின் புறக்கணிப்புப் போராட்டம் தொடரும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (க-400)

## மன்னார் நீதிவானுக்கும், ஆயருக்கும் எதிராக வவுனியாவில் ஆர்ப்பாட்டம்

பல்வேறு கோஷங்களை எழுப்பியதுடன் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு எதிராகவும் சுலோக அட்டைகளைத் தாங்கி இருந்தனர்.

அங்கு ஒலித்த கோஷங்கள் வருமாறு:-

'விடுதலைப் புலிகள் செய்த வேலையை நீயும் செய்யாதே', 'ஆயர் அவர்களே அரச நிர்வாகத்தில் தலையிடாதே', 'முஸ்லிம் மக்களின் மீள்குடியேற்றத்தை தடை செய்யாதே', 'ஆயரே தமிழ் - முஸ்லிம் இனங்களுக்கு இடையிலான உறவைச் சீர்குலைக்காதே'.

1990ஆம் ஆண்டளவில் முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்டது போல 2012ஆம் ஆண்டிலும் முஸ்லிம் மக்களை வெளியேற்ற சில சமயத் தலைவர்கள் முயற்சி செய்து வருவதாகவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை இந்த ஆர்ப்பாட்டத்தின்போது அசம்பாவிதங்கள் ஏற்படாது தடுக்கும் வகையில் பள்ளிவாசலைச் சுற்றிவரவுள்ள முக்கிய சந்திகளில் சுமார் 500 மேற்பட்ட கலகம் அடக்கும் பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர். இந்த ஆர்ப்பாட்டம் மட்டக்களப்பிலும் நேற்று முஸ்லிம்களால் முன்னெடுக்கப்பட்டது. (த-400)

## படை அதிகாரிகள் பலர் வெளிநாடுகளில் தஞ்சம்

தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில், பாதுகாப்பு அமைச்சு கடந்த சில ஆண்டுகளுக்குள் ஓய்வுபெற்ற படை அதிகாரிகள் பற்றிய விவரங்களைச் சேகரிக்கத் தொடங்கியுள்ளது. குறிப்பாக, இறுதிப்போரில் பங்கேற்ற பின்னர் ஓய்வுபெற்ற படை அதிகாரிகளின் தற்போதைய விவரங்களே சேகரிக்கப்படுகின்றன.

போரின் இறுதிக்கட்டத்தில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் பற்றிய தகவல்களை இவர்கள் வெளியிட்டு விடலாம் என்ற கலக்கம் பாதுகாப்புத் தரப்புக்கு ஏற்பட்டுள்ளது,

போர் முடிவுக்கு வந்த சில மாதங்களில் சரத் பொன்சேகா ஓய்வுபெற்ற போது, பெருமளவு இராணுவ அதிகாரிகள் ஓய்வு பெற்றனர் அல்லது கட்டாயமாக ஓய்வுபெற வைக்கப்பட்டனர். இவர்களில் பலரும் வெளிநாடுகளில் அடைக்கலம் தேடியுள்ளனர். இவர்கள் போர்க்குற்றங்களுக்கான சாட்சிகளாக மாறக்கூடும் என்ற கவலை இலங்கை அரசுக்கு ஏற்பட்டுள்ளது.

கனடாவில் கொமடோர் குருபரனின் அடைக்கலக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டதை அடுத்து, பாதுகாப்பு அமைச்சு விழிப்படைந்துள்ளது. இதனால், இவ்வாறு எத்தனை பேர் வெளிநாடுகளில் அடைக்கலம் கோரியுள்ளனர், எங்கெங்கே உள்ளனர் என்ற விவரங்களைத் திரட்டும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இலங்கை அரசு மீதான வெறுப்புடன் இராணுவத்தில் இருந்து வெளியேறிய இவர்கள் தமது அரசியல் தஞ்சக் கோரிக்கைகள் நிராகரிக்கப்படுவதைத் தவிர்க்கவோ அல்லது, பணத்துக்கு ஆசைப்பட்டோ வெளிநாட்டு அரசுகள் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு போர்க்குற்ற ஆதாரங்கள் மற்றும் தகவல்களை அளிக்கலாம் என்ற கலக்கம் பாதுகாப்பு அமைச்சுக்கு ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. (த)

## நீதிமன்ற தாக்குதல் சம்பவம் மன்னாரில் 15 பேர் கைது

பேரில் அரச அதிகாரிகள், பாடசாலை அதிபர், அரசியல்பிரமுகர்கள், ஓட்டோ சாரதிகள் எனப் பலரும் அடங்குகின்றனர். இதேவேளை மன்னார் நீதிமன்றத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவத்தில் ஒரு பொலிஸ் அதிகரிக்கும் தொடர்பிருப்பதாக விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது. அமைச்சர் ஒருவரின் பொலிஸ் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்தவரெனத் தன்னை அடையாளப்படுத்திய மன்னாரைச் சேர்ந்த பொலிஸ் அதிகாரி ஒருவரே ஆர்ப்பாட்டக்காரர்கள் சிலரை நீதிமன்றத்தின் பின்புறமாக உள்ளே அழைத்துச் சென்றதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த பொலிஸ் அதிகாரியின் அன்றைய தின நடவடிக்கைகள் தொடர்பில் ஆராயப்பட்டு வருவதாகவும் தெரியவருகின்றது. (க-12)

## நிமலரூபனின் சடலம் திங்களன்று வவுனியாவுக்கு

தீனைக் கண்டித்து நீதித்துறையினர் போராட்டத்தில் ஈடுபட்டதால் நீதிமன்றப் பணிகள் பாதிப்புற்றிருந்தன. எனினும் குறித்த வழக்கின் அவசியத்தைக் கருத்தில் கொண்டு இது தொடர்பான விசாரணைகள் உயர்நீதிமன்ற நீதிபதி அறையில் நடைபெற்றது. இதன்போதே திங்கட்கிழமை நிமலரூபனின் சடலத்தை அவரது பெற்றோரிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்ட நீதிபதி, நிமலரூபனின் பெற்றோர் இது விடயத்தில் பொலிஸாரின் அறிவுறுத்தலுக்கு அமையச் செயற்படுமாறும் தெரிவித்தார்.

திங்கட்கிழமை சடலம் மகர வைத்தியசாலையில் இருந்து ஒப்படைக்கப்பட்ட பின் அன்றிரவு அல்லது செவ்வாய் அதிகாலை வவுனியாவுக்கு நிமலரூபனின் சடலம் எடுத்து வரப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. (ங)

## நீதியமைச்சரும் கண்டனம்

மாநாட்டின் போதே அவர் இதனைத் தெரிவித்தார். மன்னார் நீதிவான் அச்சுறுத்தப்பட்ட விடயம் குறித்து உங்களது நிலைப்பாடு என்ன என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையில், இந்தச் சம்பவத்திற்கு தாம் கவலை தெரிவிக்கிறார் எனவும், அதேவேளை, இதைத் தான் வன்மையாகக் கண்டிக்கிறார் எனவும் அமைச்சர் தெரிவித்தார். அத்துடன், இது விடயம் தொடர்பில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (த-2)

## பருத்தித்துறை நீதிபதியின் வீடு தாக்கப்பட்டமைக்கும் கண்டனம்

எழுப்பப்பட்டன. கடந்த புதன்கிழமை இரவு 10 மணியளவில் நீதிபதி வாசஸ்தலம் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இது தொடர்பாக பொலிஸிலும் முறைப்பாடு செய்யப்பட்டது.

நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரனின் வாசஸ்தலம் மீது தாக்குதல் நடத்தப்பட்டமைக்கு யாழ். மாவட்டச் சட்டத்தரணிகள் சங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாகச் சட்டத்தரணி ஒருவர் ஆர்ப்பாட்டத்தின்போது கருத்துத் தெரிவிக்கையில்,

நில அபகரிப்புக்கு எதிராக நெல்லியடியில் கடந்த 18ஆம் திகதி நடத்திய ஆர்ப்பாட்டத்துக்குத் தடை விதிக்க பருத்தித்துறை நீதிமன்றம் மறுத்து கட்டளை வழங்கியமையே நீதிபதியின் வாசஸ்தலம் தாக்கப்பட்டமைக்குக் காரணம் எனச் சங்கம் கருதுகிறது.

இதனைச் சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது. குற்றவாளிகளைக் கைது செய்து உரிய சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சங்கம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது - என்றார். (த-4)

# ரிஷாத்துக்கு எதிராக நாடெங்கும் நீதித்துறையினர் நேற்று போர்க்கொடி

கணிப்பிலும் ஈடுபட்டனர். கொழும்பு உயர்நீதிமன்றம், கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றங்களிலும் வழக்குகளைப் பிற்போடவேண்டிய நிலைமை நேற்று ஏற்பட்டது. அநேகமான நீதிமன்றங்களில் அமர்வுகள் கூட இடம்பெறவில்லை.

நாடெங்கிலுமுள்ள நீதிமன்றங்களைச் சேர்ந்த சட்டத்தரணிகளும் பணிபுறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அநேகமான சட்டத்தரணிகள் தத்தமது நீதிமன்றங்களின் முன்பாக ஒன்றுகூடி கண்டனங்களை வெளிப்படுத்தும் சுலோகங்களை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பினர். அமைச்சர் ரிஷாத் பதியுதீனுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு அவர்கள் வேண்டுகோள் விடுத்தனர். அதேபோன்று நீதிபதிகளும் நீதிமன்ற அமர்வுகளை புறக்கணித்தனர். இதனால் நாடெங்கும் உள்ள நீதிமன்றங்கள் அனைத்தும் முற்றாக முடங்கின.

மன்னார் சம்பவத்தைக் கண்டித்து யாழ். மாவட்ட சட்டத்தரணிகளும் நேற்று முன்தினம் தொடக்கம் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இந்தச் சம்பவத்தில் சம்பந்தப்பட்ட அமைச்சர் ரிஷாத் பதியுதீன் உட்பட அனைவரையும் கைது செய்து அவர்களுக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அதுவரை தமது பணிப்புறக்கணிப்புப் போராட்டம் தொடரும் என்றும் அவர்கள் அறிவித்துள்ளனர்.

**யாழ். நீதிமன்றத்தில்**

யாழ். நீதிமன்றக் கட்டடத் தொகுதியின் முன்பாக கண்டனச் சுலோகங்களை ஏந்திய வண்ணம் புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அரசியல் வாதிக்கு நீதிமன்றில் என்ன வேலை? ரிஷாத் எங்கள் பொறுமைக்கும் எல்லையுண்டு, எங்களோடு மோதாதே முகவரி இழப்பாய், நீதித்துறைக்கே சவாலா?, ரிஷாத்தே எங்கள் பொறுமையைச் சோதிக்காதே, நீதித்துறையில் தலையிட ரிஷாத் யார், நீதிமன்றம் என்ன என் கைப்பொம்மையா? என்ற வாசகங்கள் பொறிக்கப்பட்ட சுலோகங்களுடன் அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதில் மல்லாகம், சாவகச்சேரி, ஊர்காவற்றுறை நீதிமன்றங்களை மையப்படுத்தும் சட்டத்தரணிகளும் இணைந்து கொண்டனர். இவர்களுடன் யாழ். நீதிமன்றக் கட்டடத் தொகுதியிலுள்ள நீதிமன்றங்களின் உத்தியோகத்தர்கள் ஊழியர்களும் சட்டத்தரணிகளுடன் சேர்ந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

**பருத்தித்துறை நீதிமன்றத்தில்**

பருத்தித்துறை நீதிமன்றச் சட்டத்தரணிகளும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். மன்னார் நீதிபதி மீதான அச்சுறுத்தல், பருத்தித்துறை நீதிபதியின் வாசஸ்தலம் மீதான தாக்குதல் ஆகியவற்றைக் கண்டித்து இவர்கள் கோஷம் எழுப்பினர். குற்றவாளிகளை உடன் கைது செய்யவேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தனர்.

**கிளிநொச்சி நீதிமன்றத்தில்**

கிளிநொச்சி நீதிமன்ற சட்டத்தரணிகள், நீதிமன்ற உத்தியோகத்தர்கள், ஊழியர்களுடன் பொது மக்களும் இணைந்து கிளிநொச்சி நீதிமன்றின் முன்பாக நேற்று மு.ப. 9.30 மணி தொடக்கம் மதியம் 12.30 மணி வரை ஏ-9 வீதியை மூடி போராட்டத்தில் ஈடுபட்டனர். அதனால் அந்த வீதியூடான போக்குவரத்துத் தடைப்பட்டது. இந்த நிலைமையைக் கட்டுப்படுத்த பொலிஸார் முயற்சி மேற்கொண்ட போதும் அது தோல்வியில் முடிவடைந்தது.

**முல்லைத்தீவு நீதிமன்றத்தில்**

முல்லைத்தீவு நீதிமன்ற திறந்த நீதிமன்றும் பூட்டப்பட்ட நிலையிலேயே இருந்தது. சட்டத்தரணிகளும் உத்தியோகத்தர்களும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். இதனால் முல்லைத்தீவு நீதிமன்றத்தின் பணிகள் எதுவும் இடம்பெற வில்லை.

**மன்னார் நீதிமன்றத்தில்**

மன்னார் நீதிமன்றச் சட்டத்தரணிகளும் சுமார் 20 நிமிடங்கள் கண்டனங்களை தெரிவிக்கும் சுலோகங்களை ஏந்திய வண்ணம் நீதிமன்றின் முன்பாக ஒன்றுகூடி போராட்டத்தில் ஈடுபட்டனர். பின்னர் உள்ளே சென்று தமது பணிப்புறக்கணிப்பைத் தொடர்ந்தனர்.

யாழ். நீதிமன்றக் கட்டடத் தொகுதியிலுள்ள நீதிமன்றங்களுக்கு வழக்குகளுக்காகச் சென்றிருந்த பொது மக்களும் வழக்குகள் எதுவும் நடைபெறாததனால் நீதிமன்றின் வெளியே நெடுநேரமாகக் கூடிநின்று சட்டத்தரணிகள், உத்தியோகத்தர்களது போராட்டத்தை பார்த்துக் கொண்டிருந்தனர்.

**வவுனியா நீதிமன்றத்தில்**

வவுனியா நீதிமன்ற சட்டத்தரணிகளும் போராட்டத்தில் ஈடுபட்டனர். நீதித்துறை மீதான அச்சுறுத்தல்களுக்கு எதிராக உடன் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனக்கோரி சுலோகங்களைத் தாங்கியவாறு அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன், பணிப்புறக்கணிப்பையும் மேற்கொண்டனர். இதே போல கொழும்பு நீர்கொழும்பு, திருகோணமலை, அனுராதபுரம், நுவரேலியா ஆகிய நீதிமன்றங்களிலும் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டது.

நாடு முழுவதும் நடைபெற்ற நீதித்துறையின் போராட்டம் காரணமாக வழக்குகள் அனைத்தும் பிறிதொரு தினத்துக்கு பிற்போடப்பட்டன. (த-4-6-8-9-400)

## கிழக்கில் கூட்டமைப்பினருக்கு வழிவிட்டுச் செயற்படத் தயார்

சரியான அணுகுமுறையைக் கடைப்பிடித்திருந்தால் நாம் அது தொடர்பில் சாதகமானதொரு தீர்மானத்தை எடுத்திருப்போம் எனவும் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடுவது குறித்து கடந்த இருவாரகாலமாக நாம் மிகவும் ஆழமாக ஆராய்ந்தோம். கிழக்குத் தேர்தலில் போட்டியிடுவதற்காக இரு மாற்றுவழிகள் தொடர்பில் கலந்துரையாடினோம்.

முதலாவது, அரசின் பங்காளிக் கட்சியாகவே இருந்து அதனுடன் இணைந்து போட்டியிட்டு எமக்குக் கிடைக்கும் ஆசனங்களுக்கேற்ப ஆட்சி அமைப்பது. இரண்டாவது, தனியாகப் போட்டியிட்டு எமது அரசியல் பலத்தைக் காண்பித்து கிடைக்கும் ஆசனங்களுக்கேற்ப அரசுடன் இணைந்து செயற்படுவது.

இந்த இரண்டு தீர்மானங்களிலும் முதலாவது தீர்மானம் குறித்து கடந்த இருவார காலமாக எமது கட்சி உயர்பீடம் அரசுடன் இணைந்து மிகவும் ஆழமாகவும் தீவிரமாகவும் பேச்சு நடத்தியது. அரசுடன் இணைந்து போட்டியிடுவதால் எமக்குரிய இட ஒதுக்கீட்டை அரசின் வேட்பாளர் பட்டியலில் வழங்கவேண்டும்.

இதனடிப்படையில் நாம் அரசுடன் இணைந்து நடத்திய பேச்சுகள் சாதகமாக முடியவில்லை. இதன் பின்னரே தேர்தலில் தனித்துப் போட்டியிடுவது குறித்துத் தீர்மானித்தோம்.

தேர்தலில் தனித்துப் போட்டியிடுகிறோமே தவிர, அரசுக்கும் எமக்கும் இடையிலான உறவில் எந்தப் பிளவும் ஏற்படவில்லை. தேர்தலின் பின்னர் மறுபடியும் அரசுடன் இணைந்தே செயற்படுவோம். அதற்கு எமது ஒத்துழைப்பை வழங்குவோம்.

எந்த விடயத்திலும் நான் தனித்து எதையுமே செய்யமுடியாது. எமது கட்சிக்கும் அரசியல் அந்தஸ்துக்கும் எதுவித பங்கமும் ஏற்படாத வகையிலேயே முடிவெடுத்திருக்கிறோம். கிழக்குத் தேர்தலில் நாம் தனித்துப் போட்டியிடுவதால் அத்தேர்தலைத் தீர்மானிக்கும் ஒரு சக்தியாக மாறியுள்ளோம்.

கிழக்குத் தேர்தல் விடயத்தில் எனது மனச்சாட்சிக்கு உண்மையாகவே முடிவுகளை எடுத்தேன். தனியாகப் போட்டியிடுவது என நாம் அறிவித்த பின்னர் கட்சி ஆதரவாளர்கள் தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். இறுதி நேரத்தில் நாம் எடுத்த தீர்மானம்தான் மக்களின் ஏகமனதான தீர்மானமாக அமைந்தது.

கிழக்குத் தேர்தலில் இம்முறை நாம் மட்டுமல்ல, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் போட்டியிடுகின்றனர். அவர்கள் கிழக்கில் அதிகமான ஆசனத்தைப் பெற்று வெற்றி பெற்றால் இன நல்லிணக்கத்தைக் கருதி நாம் அவர்களுக்கு வழிவிட்டுச் செயற்படுவோம் - என்றார். (த-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மன்னாரில்
நீதிமன்றில்
தாக்குதல்
பின்னணி!

**அமைச்சர் றிஷாத்தின்
பங்கு என்ன?**



நெல்லியடியில்
புலிகள் கொடியை
பறக்கவிட்ட
மர்மநபர்கள் யார்?

**ஒரு விசாரணை அறிக்கை**

**சின்னப்பல்லவராயன் கட்டு
காணிகளைத் தாரைவார்க்க
அரச அதிகாரிகள் முயற்சியா?**



வடக்கு – கிழக்கு,
தமிழர் முஸ்லிம்களின்
அசைக்க முடியாத
தாயகம்
– யாரும் எமக்கு
கட்டளையிட முடியாது!

**மு.கா. செயலாளர் ஹசன் அலி
உதயனுக்கு சிறப்பு,பரபரப்புப் பேட்டி**

# ஞாயிறு சூரியகாந்தி யில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31 ஆம் நாள் ஞாபகார்த்த ஆராதனை

தாயின் மடியில்
19 * 10 * 1965



ஆண்டவன் அடியில்
22 * 06 * 2012

அமரர் அன்ரனி தவராசா சாந்தி

அன்னாரின் கர்த்தருக்குள் நித்திரை அடைந்த செய்திகேட்டு உடன் பலவழிகளிலும் உதவி புரிந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன் எமது தலைவியின் 31 ஆம் நாள் ஞாபகார்த்த ஆராதனையானது நாளை (22.07.2012) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற உள்ளது. அந்நினைவு ஆராதனையில் கலந்து அன்னாருக்காக ஜெபிக்கவும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

புலோலி வடகிழக்கு,
புலோலி,
பருத்தித்துறை.

T.P- 0213205571

தகவல்
குடும்பத்தினர்.

(18695)(3.14)

## நல்லூர் பிரதேச சபை வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்- 2012

கீழ்வரும் வேலைகளிற்கான கேள்விகள் நல்லூர் பிரதேச சபையினால் கோரப்படுகின்றன. கீழ்குறித்த வேலைகளுக்கான கேள்வி வைப்பு பணத்தையும், கேள்விப்பத்திரக்கட்டணத்தையும் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் செலுத்தி படிவத்தை பெற்றுக்கொள்ளலாம்

01) கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி: 23.07.2012 தொடக்கம் 03.08.2012 பி.ப 4 மணிவரை
02) கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித்திகதி 06.08.2012 மு.ப 10. 00 மணிவரை
03) கேள்வி திறக்கப்படும் திகதி: 06.08.2012 மு.ப 10.30 மணிக்கு (திறக்கப்படும் சமயத்தில் கேள்வி சமர்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்)
04) கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச்சபைக்கு உரிமை உண்டு.
05) இக்ராட் (ICTAD) வழிகாட்டல்களின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதிய கல்வி ஆற்றலை கொண்டிருக்க வேண்டும்.
06) கேள்வி ஆவணங்கள் வழங்குவதற்கு முன் ஒப்பந்தக்காரர் வலுவுள்ள இக்ராட் (ICTAD) பதிவுப்புத்தகத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.
07) கேள்விப் பத்திரத்தின் ஒரு பிரதியை 'தலைவர்/செலாளர், நல்லூர் பிரதேசசபை, கருவப்புலம் வீதி, கொக்குவில் என்ற விலாசத்திற்கு பதிவுத் தபால் மூலமோ அல்லது அலுவலகத்தில் காணப்படும் கேள்விப் பெட்டியிலோ இடவேண்டும். மறு பிரதியை, 'பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித்திணைக்களம், யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு 2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைக்கு அமைவாக கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்
08) மேலதிக விவரங்களை நல்லூர் பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்லாம்.

| தொ. இல | வேலைவிவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரக் கட்டணம் (VAT,NBT நீங்கலாக) | இருக்க வேண்டிய ஆகக்குறைந்த ICTAD தரம் |
|---|---|---|---|---|
| 01 | உதய புரம் கடற்கரை வீதி (கிரவல் வீதி) | 18820.00 | 500.00 | M08/C09 |
| 02 | திருநெல்வேலி சந்தை, மாடிப் படிக்கு கைபிடி அமைத்தல் (Hand Rail work) | 3855.00 | 500.00 | M10/C10 |

நல்லூர் பிரதேசசபை,
கொக்குவில்.

திரு.ப.வசந்தகுமார்,
தவிசாளர்

(சி/1607) (15-14)

### வீடு காணி விற்பனைக்கு

சுன்னாகம் சபாபதிப்பிள்ளைவீதி, கேன் புற்றுநோய் காப்பகத்திற்கு முன்பாக உள்ள 4½ பரப்பு வீடு, கடையுடன் கூடிய காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:-
0777750216, 0217902846
(20659) (15)

### கணினி திருத்தம் (Computer Repair)

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து உரிய முறையில் திருத்தித் தருகிறோம் அழையுங்கள்.
0779086737
GUNAA BEST PC
(20612) (14.3)

### கணினி மலிவு விற்பனை



IBM 3.2 GHz Full Set (LCD Monitor)
அதனுடன் கூடிய
அனைத்துப் பொருள்களும்
Free: Web Cam/4GB Pendrive / Head Phone 24,750/=
ஒரு வருட உத்தரவாதம்
St. Antony's.com
187, K.K.S. Road, Jaffna. 222 4865 / 0750698608
(சத்திரசந்திக்கு அருகில்)
Digital Camara, Computer Repair
(556/3)

### கார் விற்பனைக்கு

வைத்தியரின் பாவனையிலுள்ள JX தொடரிலக்க சிவப்பு நிற மாருதி கார் 800 C லீசிங் வசதியுடன் விற்பனைக்குண்டு.
தொ.பே.0772963262
(சனி, ஞாயிறு மட்டும் பார்வையிடலாம்)
(20651)(2-6-7)

### புகைப்படப் பிடிப்பாளர்களிற்கான இலகுசேவை

இந்தியாவில் PhotoEditing இல் விசேட பயிற்சி பெற்ற வடிவமைப்பாளர்களால் புகைப்படங்கள் குறித்ததினத்தில் குறைந்த கட்டணத்தில் யாழ்ப்பாணத்திலேயே Graphics and Editing செய்து தரப்படுகின்றன.
தொடர்பு 077 9086737 (Gunaa)
(20662) (15-14)

### தளபாடங்கள் விற்பனைக்கு

கட்டில்கள், அலுமாரிகள், வாங்குகள், கதிரைகள், மேசைகள், ஸ்கிறீன், தையல்மெசின்கள் விற்பனைக்குண்டு.
தொடர்பு:- க.தருமகுலசிங்கம்,
414/5, கோயில் வீதி, நல்லூர்.
தொ.பே.021 222 9389
(20657)(2-6-7)

### தேவை

யாழ். வைத்தியசாலை வீதியில் இயங்கும் பல்வைத்திய நிலையத்திற்கு பெண் உதவியாளர் தேவை
(20656) (15) தொடர்பு: 021 2229053

### மாபிள் பதித்தல்

10 வருடங்கள் மத்திய கிழக்கு நாட்டில் வேலை செய்தவர்களால் உங்கள் விருப்பப்படி குறுகிய காலத்தில் மாபிள் பதித்துக் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு:
0773824871 - பாபு.
(18121)(2-6-7)

### வீடு, காணி விற்பனைக்கு

மட்டுவில் வடக்கு முத்துமாரி அம்மன் கோயிலடி சாவகச்சேரியில் சகல வசதிகளுடன் கூடிய வீடும் 12 ½ பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 0774654982
(20652) (15-14)

## மரண அறிவித்தல்



### கந்தையா கார்த்திகேசு

குடத்தனையை பிறப்பிடமாகவும் நாகர்கோயில் தெற்கை வசிப்பிடமாகவும் தற்போது வலிகண்டி குடத்தனையில் வசித்துவந்தவருமாகிய கந்தையா கார்த்திகேசு (18.07.2012) புதன்கிழமை அதிகாலை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னையா- முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் அரியமலரின் பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான வீரகத்தி, பார்வதிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான பெரியதம்பி, நாகம்மா மற்றும் நல்லம்மா, தணிகாசலம் காலஞ்சென்ற சரஸ்வதி ஆகியோரின் மைத்துனரும் கணேசலிங்கம் (ஜேர்மனி), கமலகுமாரி, யோகலிங்கம், ஜெயலிங்கம் (ஜேர்மனி), ஜோதிலிங்கம் (பிரான்ஸ்), சிவநேசன், சிவதாசன் (பிரான்ஸ்), பகீரதன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பூபாலசிங்கம் (முகாமைத்துவ உதவியாளர்), உதயராணி (ஜேர்மனி), கினயா, குணமலர் (ஜேர்மனி), செல்வராணி (பிரான்ஸ்), சுகன்யா, சுரேஜினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும் பிரதீப் (ஜேர்மனி), பிரசன்னா (ஜேர்மனி), அபிசன் (ஜேர்மனி), வாகீசன்(பிரான்ஸ்), சஞ்சீவன் (தவிசாளர்- பருத்தித்துறை பிரதேசசபை), பூங்கோதை, கீர்த்தனன், ஜனார்த்தனன், அனுஷாந் (பிரான்ஸ்), யதுசன் (பிரான்ஸ்), தனுசாந் (பிரான்ஸ்), சாஜிகன், கோபீசன், அனோசன், நிஷானி (ஜேர்மனி), ரிஷானி (ஜேர்மனி), சாருஜா (பிரான்ஸ்) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.07.2012) ஞாயிற்றுக்கிழமை மு.ப 11 மணியளவில் வலிகண்டி குடத்தனையிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக குடத்தனை பண்டியாமணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வலிக்கண்டி,
குடத்தனை.

தகவல்:
குடும்பத்தினர்.

(சி/1612) (15-14)



CIMA, BIT சாதனைச்சித்திகள் MCS இல்! F.M(67%), F.O(80%), P.O(70%),E.O(66%)
BIT,CIMA-Certificate/Operational/Management/Strategic levels- 22nd Sunday July 8.00 A.M
324,Palaly road,Parameswara Junction, Jaffna T.P 772395895
Supported by UNDP/JRRP

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# இந்திய எதிர்காலப் பிரதமர் நேருவின் கொள்ளுப்பேரன் ?

இந்திய ஜனாதிபதித் தேர்தல் முடிந்து அதன் முடிவுகள் திங்கட்கிழமையளவில் வெளிவர இருக்கும் நிலையில் இந்தியப் பிரதமர் பதவியிலும் மாற்றம் வரக்கூடும் என்று செய்திகள் அடிபடத் தொடங்கியுள்ளன.

இந்தியப் பிரதமராகத் தற்போது பதவி வகித்துவரும் டாக்டர் மன்மோகன்சிங், அவரது பதவிக் காலம் முடியும் வரை பதவியில் இருப்பார் என்று காங்கிரஸ் கட்சியின் தலைவியும் மத்திய அரசின் கொள்கை வகுப்பாளர்களில் முக்கியமானவருமான சோனியா காந்தி அண்மையில் கூறியிருந்தார். மன்மோகன்சிங் சர்வதேச அரங்கில் கற்றறிந்த பெருமகனாக மதிக்கப்படும் ஒருவர். ஆனால் அவர் அந்தப் பதவிக்குரிய உறுதியான ஆளுமை கொண்டவராக இல்லை என்பதாக எதிர்க்கட்சிகள் குறிப்பாக பாரதீய ஜனதா கட்சியினர் விமர்சித்து வந்துள்ளார்கள். வெளிநாட்டு பத்திரிகை ஒன்று நிழல் பிரதமர் என்று அண்மையில் விமர்சித்திருந்தது.

கடந்த தேர்தலின் போது காங்கிரஸ் கட்சி ஏனைய மாநில கட்சிகளின் ஆதரவுடன் அரசு அமைக்கும் நிலைக்கு வந்த போது கட்சியின் தலைவரான சோனியா காந்தி அம்மையாரே பிரதமர் பதவியை ஏற்பார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் காங்கிரஸ் கட்சிக்குள்ளேயே சிலர் அதற்கு உடன்பட மறுத்தார்கள். எதிர்த்தரப்பில் சுஷ்மா சுவராஜ், சோனியா பிரதமரானால் தலையை மொட்டையடிப்பேன் என்று அறிவித்தார். மற்றும் தமிழ்நாட்டில் செல்வி ஜெயலலிதா போன்றவர்களும் கடும் எதிர்ப்பைக் காட்டினார்கள். சோனியா காந்திக்கு மக்கள் ஆதரவு எவ்வளவு இருந்த போதிலும் நாடாளுமன்றத்தில் கட்சிகளின் எதிர்ப்பு அதிகரித்ததனால் தமது கட்சிக்குள் இருந்தே ஒருவரைத் தெரிவுசெய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. அந்த வகையில் மன்மோகன்சிங் கல்வி அறிவில் சிறந்தவராகவும் வயதிலும் அனுபவத்திலும் உயர்ந்தவராகவும் இருந்தமையால் அவரை எல்லோரும் ஏற்றுக்கொண்டார்கள். காங்கிரஸ் கட்சியை விட்டு செல்ல முயன்ற சரத்பவார் போன்றவர்களும் மீண்டும் இணைந்து கொண்டார்கள்.

சோனியா காந்தி வெளிநாட்டில் பிறந்து வளர்ந்து ராஜீவ் காந்தியை மணமுடித்தமையால் இந்தியாவுக்கு வந்து இந்தியப் பிரஜையானவர் என்பதுவே அவருக்கு எதிராக முன் வைக்கப்பட்ட கருத்து. மற்றது நேரு குடும்பத்தைச் சேர்ந்த வர்களே கட்சிக்கும் நாட்டுக்கும் தலைமை வகிப்பதான குடும்ப ஆட்சிமுறை வளர்வதற்கு இடம்தரலாகாது என்ற கருத்தும் வலுப்பெற்றமையாகும்.

எதுவானாலும் ராஜீவ் காந்தி கொல்லப்பட்டதன் பின்னர் சரியான தலைமை இல்லாமல் சிதறிப்போகும் நிலையில் இருந்த காங்கிரஸ் கட்சியை தனது ஆளுமையாலும் ராஜீவ் காந்தியின் மனைவி என்ற அனுதாப அலையினாலும் கட்டிக்காத்து ஒருங்கிணைத்தவர் சோனியா காந்தியே. அதனால் காங்கிரஸ் கட்சியின் தலைமைப் பதவியிலிருந்து எவராலும் அவரை அசைக்க முடியவில்லை. அத்துடன் காங்கிரஸ் தலைமையிலான அரசின் கொள்கைகளிலும் செயற்பாடுகளிலும் அவருக்கு பெரும் பங்கும் ஈடுபாடும் இருந்து வருகின்றன.

இவையெல்லாம் சரியாக இருந்த போதிலும் காங்கிரஸ் கட்சி சமீபகாலமாக பெரும் சரிவை எதிர்கொண்டு வருகிறது. அண்மையில் நடந்து முடிந்த இடைத் தேர்தல்களில் எதிர் பார்த்த அளவில் காங்கிரஸ் கட்சி முன்னேற்றத்தைக் காட்ட வில்லை. ஊழல், நுகர்வுப் பொருள்களின் விலை உயர்வு மற்றும் பொருளாதாரச் சரிவு என்பவற்றால் காங்கிரஸ் அரசு மக்கள் ஆதரவை இழந்து வருகின்றது.

இந்தப் பின்னணியில் காங்கிரஸ் தலைவர்கள் கட்சியின தும் அரசினதும் தோற்றத்தை மாற்றி அமைப்பது பற்றி சிந்தித்து வருகிறார்கள். பழுத்த அரசியல் வாதியும் அனுபவ சாலியுமான பிரணாப் முகர்ஜி ஜனாதிபதி பதவிக்காக நிதி அமைச்சர் பதவியிலிருந்து விலகிக் கொண்டதால் அந்தப் பதவிக்கு பொருத்தமான ஒருவர் நியமிக்கப்பட வேண்டியிருக் கிறது. ஆனால் மிக விரைவிலேயே காங்கிரஸ் கட்சியின் தலைமை நிர்வாகத்திலும் அமைச்சரவையிலும் புதிய மாற்றங் கள் வரலாம் என்ற எதிர்பார்ப்பு வலுப்பெற்றுள்ளது. குறிப் பாக கட்சியின் இளைய தலைமுறையினரை முன்னுக்குக் கொண்டுவரும் உத்தேசம் இருப்பதாகக் கருதப்படுகின்றது. அந்த வகையில் ராஜீவ்-சோனியா காந்தி தம்பதியினரின் புதல்வரும் இளைஞர் காங்கிரஸின் தலைவருமான ராகுல் காந்தி பெரும்பாலும் அமைச்சர் அவையில் இடம்பெறுவது நிச்சயம். அண்மையில் ஊடகங்களுக்கு அவர் அளித்துள்ள பேட்டியொன்றில் எதிர்காலத்தை திட்டமிட்டுவிட்டேன். கட்சியில் அல்லது அரசில் உயர் பதவிப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளவும் முடிவுசெய்துவிட்டேன் என்று அறிவித்துள்ளார். எனவே ராகுல் காந்தி விரைவிலேயே காங்கிரஸ் கட்சியின் தலைமைப் பொறுப்பில் அல்லது முக்கிய அமைச்சர் பொறுப்பில் அமர்வது நிச்சயமாகிவிட்டது.

மன்மோகன்சிங் பதவிக் காலம் முடியும் வரை பிரதமராக நீடிப்பாரென்றால் அதுவரை ராகுல் காந்திக்கு அமைச்சர் பதவியொன்று வழங்கப்பட்டு அதன் மூலம் அரச நிர்வாகத் துறையில் பயிற்சிபெற அனுமதிக்கப்படலாம். அதற்குள் காங்கிரஸ் கட்சி தான் இழந்துவிட்ட மதிப்பையும் செல்வாக் கையும் நிலைநாட்டிக்கொள்ள பகீரதப்பிரயத்தனம் செய்ய வேண்டியிருக்கும்.

சுதந்திரம் கிடைத்ததன் பின்னர் ஜவகர்லால் நேரு பிரதமரானார். அவருக்குப் பின் அவரது புதல்வி இந்திரா காந்தி பிரதமர் பதவியில் அமர்ந்தார். அவர் கொலையுண்டதன் பேரில் மகன் ராஜீவ் காந்தி பிரதமரானார். ராகுல் காந்தியும் பிரதமர் பதவியில் அமரும் சந்தர்ப்பம் வருமானால் அந்த வரிசையில் நான்காவது தலைமுறையைச் சேர்ந்த பிரதமராக இவர் இருப்பார்-அதாவது ஜவகர்லால் நேருவின் கொள்ளுப் பேரன்!

# நிவாரணங்கள் மற்றும் நலனோம்பு செலவினம் 600 கோடியால் உயர்வு

கொழும்பு, ஜூலை 21

இந்த ஆண்டின் முதல் ஐந்து மாத காலத்துள் நலனோம்புச் செலவினங்கள் மற்றும் நிவாரணங் கள் தொடர்பாக அரசின் செல வினம் கடந்த ஆண்டின் முதல் ஐந்து மாதங்களுடன் ஒப்பிடும் போது 600 கோடி ரூபாவால் உயர்வடைந்துள்ளது.

அது 22 வீதமான அதிகரிப்பு எனவும் நிதி அமைச்சு வெளியிட் டுள்ள ஆண்டின் நடுக்கூற்றில் அரச நிதி நிலவரம் சம்பந்தப்பட்ட அறிக்கையில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

கடந்த ஆண்டின் முதல் ஐந்து மாத காலத்துள் நிவாரணங்கள் மற்றும் நலனோம்புச் செலவினங்கள் தொடர்பாக அரசு செலவு செய்துள்ள தொகை 2 ஆயிரத்து 657 கோடி ரூபாவாகும்.

இந்த ஆண்டின் முதல் ஐந்து மாத காலத்தில் அந்தச் செலவினம் 3 ஆயிரத்து 257 கோடி ரூபா ஆகும் என்று அந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

சமுர்த்தி நிவாரணங்கள், வெள்ள நிவாரணங்கள் மற்றும் வரட்சி நிவாரணங்கள் என்பவை தொடர் பாக அரசு 540 கோடி ரூபா வரையில் செலவழித்துள்ளது எனவும் அந்த அறிக்கை தகவல் வெளியிட்டுள்ளது.

காயங்களுக்கு உள்ளான மற்றும் உயிரிழந்த படையினருக்கு நட்ட ஈடுகளை வழங்குவது தொடர்பாக அரசு இந்த ஐந்து மாத காலத்துள் 611 கோடி ரூபாவை செலவிட்டுள்ளது.

கடந்த ஆண்டில் இந்தக்கால கட்டத்துக்குள் அது தொடர்பாக செல விட்டுள்ள தொகை 550கோடி ரூபா எனவும் நிதி அமைச்சின் அறிக்கை தெரிவிக்கிறது. (ம-22)

## நுகர்வோருக்கான பால் விநியோகம் நிறுத்தம்

தென்மராட்சி,ஜூலை 21

சாவகச்சேரி கால்நடை வளர்ப் போர் சங்கத்தில் நுகர்வோருக்கான பால் விநியோகம் நிறுத்தப் பட்டுள்ளது குறித்து பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள பண்ணையாளர்கள் பாலைச் சங்கத்தின் பால் சாலைக்கு வழங்கி வருகின்றனர்.

சங்கத்தில், நுகர்வோருக்குப் பால் தினமும் விற்பனை செய்யப் பட்டு வந்தது.

அண்மையில் பாடசாலை களுக்கு பால் விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதை அடுத்து சங்கத்தால் கொள்வனவு செய் யப்படும் பால் நுகர்வோருக்கு விற்பனை செய்யப்படுவதை நிறுத்தி பாடசாலைக்கு வழங்கப் பட்டு வருகின்றது.

பால்சாலையில் பால் கொள் வனவு செய்த நுகர்வோர் அண் மைக்காலமாக தமது தேவைக்குக் கிடைக்காததால் புதிய திட்டத்தை நம்பி நுகர்வோரைக் கைவிட்டது குறித்து விசனம் தெரிவித்துள்ள னர்.

இந்த விடயம் தொடர்பாகச் சங்கத் தலைவர் செ.சுப்பிர மணியத்திடம் கேட்டபோது; ''குறிப்பிட்ட அளவு பாலே கிடைக்கிறது. இதனால் எதுவும் செய்ய முடியாது'' என்று கூறி னார். (ம-9)

## இலவசக் கல்விக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஜூலை 21

இணுவில் பொதுநூலக சன சமூக நிலையத்தின் ஏற்பாட்டில் உயர்தர மாணவர்களுக்கான இல வசக் கல்விக் கருத்தரங்கு, இணு வில் பொதுநூலக கலாசார மண்ட பத்தில் இன்றும் நாளையும் எதிர் வரும் புதன்கிழமையும் நடை பெறும்.

இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அரசறிவியல், முற்பகல் 11.30 மணிக்குச் சித்திரம் ஆகிய பாடங்கள் தொடர்பான கருத்தரங் கும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு இந்து நாகரிகம், முற்பகல் 10 மணிக்கு அரசறிவி யல், முற்பகல் 11 மணிக்கு சித்தி ரம் மற்றும் புதன்கிழமை பிற் பகல் 3 மணிக்கு புவியியல் ஆகிய பாடங்களுக்கான போத னைகள் நடைபெறவுள்ளன.

இந்தக் கருத்தரங்கில் யாழ். பல் கலைக்கழக பேராசிரியை கலை வாணி இராமநாதன், எம்.அசோக் குமார், பீ.குமரன், க.ஸ்ரீஸ்கந்த மூர்த்தி ஆகியோர் வளவாளர்களா கக் கலந்துகொள்வர்.

இதில் மாணவர்கள் கலந்து கொண்டு பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (ந)

## சிறைச்சாலைத் திணைக்களத்துக்கு மேலும் 3 ஆயிரம் உத்தியோகத்தர்

கொழும்பு,ஜூலை 21

சிறைச்சாலைகள் திணைக்களத் துக்கு புதிதாக 3 ஆயிரம் ஊழியர் கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

அதற்கமைய தற்போதுள்ள 6 ஆயிரம் பேர் வரையிலான ஊழியர்கள் 9 ஆயிரம் வரையில் அதிகரிப்புச் செய்யப்படவுள்ளனர் என்று புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் புனரமைப்பு அமைச்சின் செயலாளர் ஏ.திஸா நாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த ஆள்சேர்ப்பு சம்பந்தமாக ஊழியர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க ஆணைக்குழுவின் அனு மதி கோரப்பட்டுள்ளது.

தற்போது நாடு முழுவதிலுமுள்ள 34 சிறைச்சாலைகளிலும் 27 ஆயிரம் கைதிகளை நிர்வகிக்க 6 ஆயிரம் உத்தியோகத்தர்களே உள்ளனர். 6 பேருக்கு ஒருவர் என்ற இந்த விகிதா சார புதிய ஆள்சேர்ப்பின் கீழ் 3 பேருக்கு ஒருவர் என்ற விகிதாசார மாக மாற்றுவதே அமைச்சின் எதிர் பார்ப்பாக உள்ளது என்றும் தெரிவிக் கப்பட்டது. (ம-22)

## திங்களன்று ஆடிப்பூரம்

யாழ்ப்பாணம்,ஜூலை 21

ஆடிப்பூரம் வழமைபோல் ஆடி மாதத்தில் அம்மன் கோயில்களில் விமரிசையாகக் கொண்டாடப்படும் ஓர் உற்சவமாகும். இதன்படி இம்முறை ஆடிப்பூரத் திருவிழா நாளை மறுதினம் திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது. வாக்கிய பஞ்சாங்கத்தினரும் ஆடிப்பூரம் நாளைமறுதினம் திங்கட் கிழமையே என்று 'உதயனு'க்குத் தெரிவித்துள்ளனர்.

வாக்கிய பஞ்சாங்கத்தில் நாளை 22 ஆம் திகதி ஞாயிறு ஆடிப்பூரம் என்று தவறுதலாகப் பிரசுரமாகியுள்ளது.

## ஆசிரியமணி விநாயகரத்தினத்தின் பவளவிழா

யாழ்ப்பாணம்,ஜூலை 21

ஆசிரியமணி ச.விநாயகரத்தினத் தின் பவளவிழா எதிர்வரும் முத லாம் திகதி தெல்லிப்பழை மகாஜ னக் கல்லூரியின் பாவலர் துரையப்பா பிள்ளை மண்டபத்தில் நடைபெற வுள்ளது.

சப்ரகமுவ பல்கலைக்கழக முன்னாள் மொழித்துறைத் தலைவர் கனகசபாபதி நாகேஸ் வரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அதிபர் கு.வேல்சிவானந்தன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள் வார்.

நிகழ்வில் ஆசியுரையை சிவஸ்ரீ மகாலிங்கக் குருக்களும், வாழ்த்துரைகளை பேராசிரியர் நா.சண்முகலிங்கன், பேராசிரியர் சி.சிவலிங்கராஜா, பேராசிரியர் மா.வேதநாதன், பேராசிரியர் கி.விசா கரூபன், மருத்துவர் த.பேரானந் தராஜா, மருத்துவர் எஸ்.சிறீபவா னந்தராஜா ஆகியோர் நிகழ்த் துவர்.

பணிநயப்புரையை முன்னாள் விரிவுரையாளர் ச.விநாயகமூர்த்தி, கலாநிதி ஆறு.திருமுருகன், சிரேஷ்ட சட்டத்தரணி, இ.செல்வஸ்கந்தன், சட்டத்தரணி நடராஜா காண்டீபன், சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங் கம், ஸ்ரீமதி நாகதர்ஷினி கருணா கரன், தி.இராஜபாலன் ஆகியோர் நிகழ்த்துவர்.

நிகழ்வில் ஆசிரியமணி ச.விநாய கரத்தினத்துக்கும், துணைவியா ருக்கும் கிரீடம் சூட்டுதல், மாலை அணிவித்தல், பொன்னாடை போர்த்துதல், பொற்கிழி வழங்குதல் போன்ற நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. (ம-14)

## வட்டு. வைத்தியசாலை வாகனம் பழுது

### நோயாளர்கள் சிரமம்

கொழும்பு, ஜூலை 21

வட்டுக்கோட்டை அரசினர் வைத்தியசாலையின் அம்புலன்ஸ் வாகனம் கடந்த மாதத்தில் இருந்து பழுதடைந்து உள்ளமை யால் வைத்தியசாலை பெரும் சிரமங்களை எதிர் நோக்கி யுள்ளது.

இந்த அம்புலன்ஸ் வாகனம் பழுதடைந்துள்ளதால் இங்குள்ள நோயாளர்களை மேலதிக சிகிச்சைக் காக யாழ்.போதனா வைத்திய சாலைக்கு அனுப்பி வைப்பதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டது.

சங்கானை அரசினர் வைத்திய சாலை அம்புலன்ஸ் வாகனமே வட்டுக்கோட்டை வைத்தியசா லைக்கும் சென்று நோயாளர்களை ஏற்றி இறக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றது.

வைத்தியசாலைக்கு வருகை தரும் அவசர நோயாளர்களை விரைவாக அம்புலன்ஸ் வாகனத் தில் போதனா வைத்திய சாலைக்கு அனுப்ப முடியாமல் திண்டாடும் நிலை வைத்திய சாலை நிர்வாகத்துக்கு ஏற்பட் டுள்ளது. (த-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாண்டிக்குளம் கொல்கள சீர்கேடு சீராகாவிட்டால் நீதிமன்றை நாடவேண்டி வரும்

## வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி எச்சரிக்கை

வவுனியா, ஜூலை 21
தாண்டிக்குளம் சோயா வீதியில் அமைந்துள்ள மாடுகள் வெட்டப்படும் கொல்களம் தொடர்பாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படாது விட்டால் நீதிமன்றத்தை நாடவேண்டி வரும். இவ்வாறு தெரிவித்திருக்கிறார் வவுனியா சுகாதார வைத்திய அதிகாரியான மருத்துவர் பி.சத்தியலிங்கம்.

தாண்டிக்குளத்தில் அமைந்துள்ள மாடுகள் வெட்டப்படுவதற்கான கொல்களம் சுகாதாரத்துக்குக் கேடான வகையிலும், சட்டதிட்டங்கள் மற்றும் விதிமுறைகளை மீறும் வகையிலும் இயங்குவதாகப் பொது மக்கள் தெரிவித்ததையடுத்து இது தொடர்பாக கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த சில நாள்களுக்கு முன்னர் தாண்டிக்குளத்திலுள்ள மாடுகள் வெட்டப்படும் கொல்களத்தைச் சென்று பார்வையிட்டேன். அங்கு சுகாதார விதிமுறைகளுக்கு முரணான வகையில் மாடுகள் கொல்லப்பட்டு இறைச்சியாக மாற்றப்படுவதை என்னால் நேரில் அவதானிக்க முடிந்தது.

மாடுகள் கொல்லப்படுவதற்கு முன்னர் அவற்றுக்கு நோய் உண்டா எனப் பரிசோதிக்க வேண்டும். இதற்காக இவை கொல்லப்படுவதற்கு முன்னர் குறிப்பிட்ட மணித்தியாலங்களுக்கு முன்பாக இவற்றைப் பரிசோதிப்பதற்கான ஒழுங்குகளை மேற்கொள்ள வேண்டும்.

மேலும் மாடுகளுக்குக் குறைவின்றித் தண்ணீர் வழங்க வேண்டும். ஆனால் நான் கூறியதன் பின்னரே தண்ணீர் வழங்கப்பட்டது. இது எனக்கு மிகுந்த வேதனையைக் கொடுத்தது.

பெருமளவான மாடுகள் சிலமணி நேரத்துக்கு முன்பாகக் கொண்டுவரப்பட்டு உடனடியாகவே கொல்லப்பட்டுகின்றன.

கொல்களச் சுவர்களுக்கு வெள்ளை வர்ணம் தீட்டப்படல் வேண்டும். ஆனால் சுகாதார விதிமுறைகளுக்கு மாறாகச் சிவப்புநிற ரத்தம் படிந்து காணப்பட்டது. மாடுகளின் சாணம் நீண்ட நாள்களாக அகற்றப்படாமல் உள்ளது. அங்கு கொல்வதற்கென ஒரு பசு மாடும் கொண்டு வரப்பட்டுக் கட்டப்பட்ட நிலையில் காணப்பட்டது. பசு வதையை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன்.

மேலும் இந்தக் கொல்களத்தில் வெட்டப்படும் மாடுகளின் இறைச்சி வவுனியாவிலேயே விற்பனை செய்யப்படல் வேண்டும். ஆனால் பெருமளவு மாடுகள் இங்கு வெட்டப்பட்டுத் தென்னிலங்கைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. இது உடனடியாகத் தடுக்கப்படல் வேண்டும்.

இந்த விடயங்கள் தொடர்பாக வவுனியா நகரசபையினருக்குத் தெரிவித்தேன். ஆனால் அவர்களால் எந்த வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மேலும் பல தடவைகள் அவர்களுடன் தொடர்பு கொண்ட போதிலும் சாதகமான பதில் எதுவும் கிடைக்கவில்லை.

இது தொடருமேயானால் நீதிமன்றம் சென்று இந்தப் பிரச்சினையைத் தெளிவுபடுத்தவுள்ளேன் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(க-402)

# வவுனியா மின்சார மயான திறப்புவிழா இழுபறியில்

## புறக்கணிக்கப்படுவதாக அபி.சங்கம் கடிதம்

வவுனியா, ஜூலை 21
வவுனியா பூந்தோட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள மின்சாரத்தில் எரியூட்டப்படும் மயானத்தின் திறப்புவிழா தொடர்பாகத் தாம் புறக்கணிக்கப்படுவதாகப் பூந்தோட்டம் இந்துமயான அபிவிருத்திச் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

இது தொடர்பாக மேற்படி சங்கத்தினால் வவுனியா மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்குக் கடிதம் ஒன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அதிலேயே நகரசபைக்கு எதிராக இந்தக் குற்றச்சாட்டுத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பூந்தோட்டம் பகுதியில் பல லட்சம் ரூபா செலவில் புதிதாக மின்சாரத்தில் சடலங்களை எரியூட்டும் மயானம் அமைக்கப்பட்டுள்ளது. இதன் வேலைகள் அனைத்தும் பூரணமாக நிறைவடைந்து பல மாதங்களாகியும் மக்களின் பயன்பாட்டிற்கெனத் திறந்து வைக்கப்படவில்லை

இது தொடர்பாக மயான அபிவிருத்திக் குழுவுடன் கலந்துரையாடாமல் நகர சபையானது தன்னிச்சையாக செயற்பட்டு வருகின்றது .

கடந்த வருடம் பங்குனி மாதம் நகரசபைத் தலைவரால் இந்த மயானத்துக்கு அடிக்கல் நட்டு வைக்கப்பட்டு அவற்றின் பணிகளும் செவ்வனே நிறைவேறியுள்ளன. இதனைத் திறப்பதற்கென நகரசபையால் பல திகதிகள் அறிவிக்கப்பட்டுள்ள போதும் இன்றுவரை திறந்து வைக்கப்படவில்லை. இது தொடர்பாக நகரசபை நிர்வாகத்துடன் தொடர்பு கொண்ட போதும் அதற்குரிய பதில் தரப்படவில்லை

மயானத்தின் அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்த எமது அமைப்பை நகர சபை புறக்கணித்துச் செயற்படுவது ஏனென்று புரியவில்லை. என்றும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(க- 400)



வவுனியா தமிழ்ச் சங்கம் நடத்திய உரை ஓவியம் நிகழ்ச்சியில் சிவஸ்ரீ சி.திவாகரக்குருக்கள் வாழ்த்துரை வழங்குகின்றார், தமிழருவி த. சிவகுமாரன் தலைமையுரை ஆற்றுகின்றார், த.நிறைமதி, மு.முகுந்தன், கி.உதயகுமார், பிரதேச செயலாளர், கவிஞர் அ.சிவபாலசுந்தரன் ஆகியோர் மேடையில் அமர்ந்திருக்கின்றனர். (க-400)

# தமிழ்ச்சங்கத்தின் கவிதைக்களம் ஞாயிறுறன்று வவுனியாவில்

வவுனியா தமிழ்ச்சங்கம் நடத்தும் கவிதையால் கதை கேட்போர் கவிதைக்களம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் வைரவபுளியங்குளம் ஆதி விநாயகர் ஆலயக் கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

தமிழ்ச்சங்கத்தலைவர் தமிழருவி த.சிவகுமாரன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் மங்கல விளக்கை ஓய்வுபெற்ற அதிபர் இ.தர்மகுலசிங்கம், வவுனியா திருச்சபைத் தமிழ் வித்தியாலய அதிபர் சரோஜினி தர்மகுலசிங்கம் ஆகியோர் ஏற்றிவைப்பர்

வாழ்த்துரையை சிவஸ்ரீ மகாதர்மகுமாரக்குருக்கள் நிகழ்த்துவார்.

தொடர்ந்து கவிஞர் குரும்பையூர் தம்பித்துரை ஐங்கரன் தலைமையில் கவிதைக் களம் இடம்பெறும். இன்றைய உலகின் நிலைகண்டு இவை பேச வாய்திறந்தால் என்ற தலைப்பில் - கைத்தொலைபேசி என்ற உபதலைப்பில் சி.வரதராஜன், கதிரை என்ற உப தலைப்பில் மீரா ஐங்கரன் கணினி என்னும் உபதலைப்பில் மணிபுரம் சுந்தரசிவா, புத்தகம் என்னும் உபதலைப்பில் சிவயோகஞானி பாலச்சந்திரன் ஆகியோரும் கவி பாடவுள்ளனர். இறுதியில் இலங்கைத் திருச்சபை தமிழ் மகாவித்தியாலய மாணவர்களின் கரகாட்டம் இடம்பெறவுள்ளது. (க- 400)

# இராணுவ கவச வாகனம் மோதி பஸ்ஸுக்குச் சேதம்

மன்னார், ஜூலை 21
மன்னாரில் தனியார் பஸ்ஸுடன் இராணுவக் கவச வாகனம் மோதியதில் பஸ்ஸின் ஒருபகுதி சேதமடைந்தது.

நேற்று வியாழக்கிழமை மன்னார் பஸார் பகுதியூடாகப் பயணிகளை ஏற்றிச் சென்று கொண்டிருந்த தனியார் பஸ் ஒன்றுடன் இராணுவக் கவச வாகனம் ஒன்று மோதியது.

பஸ்ஸின் ஒருபக்கம் சேதமடைந்த போதிலும் பயணிகளுக்குப் பாதிப்பு ஏற்படவில்லை

விபத்துடன் தொடர்புடைய இராணுவ வாகனத்தை இராணுத்தினர் உடனடியாகவே அந்த இடத்திலிருந்து எடுத்துச்சென்று விட்டனர்.

வீதிப் போக்குவரத்துப் பிரிவுப் பொலிஸார் இதனை வேடிக்கை பார்த்தவாறு நின்றதைக் காணமுடிந்தது.

பின்னர் மக்கள் அந்த இடத்தில் குவிந்த பின்னரே பொலிஸார் அங்கு வந்து விசாரணைகளை மேற்கொண்டனர்.

குறித்த இராணுவ வாகனம் அருகிலுள்ள இராணுவக்காவலரணுக்குள் கொண்டு செல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது .

(க- 12)

# எஞ்சியுள்ள பொருள்களும் நாளாந்தம் அபகரிப்பு

## மீளக்குடியமர்ந்த ஆசாமிகள் கைவரிசை

மீளக்குடியமர்வு இடம்பெறாத பகுதிகளில் எஞ்சியுள்ள வீட்டுப் பொருள்கள் நாளாந்தம் களவு போய்க் கொண்டிருப்பதாக மீளக்குடியமர்த்தப்படாத பகுதி மக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

இறுதிக்கட்டப் போர் நடவடிக்கைகள் காரணமாக இடம்பெயர்ந்த புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த பல பகுதிகளில் மீளக் குடியமர்வுப் பணிகள் முற்றாக நிறைவுற்றுள்ளன.

ஆனால், ஆனந்தபுரம், மந்துவில், புதுக்குடியிருப்பு மேற்கு, புதுக்குடியிருப்பு கிழக்கு ஆகிய பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் இதுவரை மீளக்குடியமர்த்தப்படவில்லை. இப்பகுதியிலுள்ள வீடுகளிலேயே எஞ்சியுள்ள வீட்டுப் பொருள்கள் மீளக்குடியமர்த்தப்பட்ட ஒரு சிலரால் சூறையாடப்படுகின்றன என்று அப்பகுதிக்குரிய மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த திங்கட்கிழமை மீளக்குடியர்வு செய்யப்பட்ட பகுதியில் இதுவரை மீளக் குடியமர்வு செய்யப்படாத வீட்டு உரிமையாளர்கள் செவ்வாய்க்கிழமை தாம் வீடுகளுக்குச் செல்லும் போது இருந்த பொருள்களை மறுநாள் போகும் போது காணவில்லை என்று தெரிவிக்கின்றனர். தாம் தமது பகுதிகளில் மீளக்குடியமர்த்தப்படும் வரை தமது வீட்டுப் பொருள்கள் களவாடப்படுவதைத் தடுக்க உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-400)

# 350 மாணவர்களுக்கு பிரியாவிடை

முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியில் தமது கல்வியை நிறைவு செய்து வெளியேறும் சுமார் 350 மாணவர்களுக்குப் பிரியாவிடை வழங்கப்பட்டது.

தரம் 6 இலிருந்து கல்வி கற்றுத் தமது கல்வியை நிறைவு செய்து வெளியேறும் இந்த மாணவர்களை கௌரவிக்கும் இந்த நிகழ்வு கடந்த 14 ஆம் திகதி நண்பகல் 12 மணியளவில் பாடசாலை அதிபர் பி.கே.சிவலிங்கம் தலைமையில் ஆரம்பமானது.

முல்லைத்தீவு அரசஅதிபர் நா. வேதநாயகன், வலயக் கல்விப்பணிப்பாளர் கோ.வரதராஜமூர்த்தி, 592 ஆவது படைப் பிரிவின் இராணுவத் தளபதி சமரசிங்க ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொண்டதுடன் மாணவர்களை வாழ்த்தி உரையாற்றினர். (க-435)

# வவுனியா பிரதேச செயலகத்தில் 57 பட்டதாரிகள் கடமையேற்பு

வவுனியா,ஜூலை 21
வவுனியா பிரதேச செயலகத்தில் 57 பேர் பட்டதாரிப் பயிலுநர்களாக கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர்.

எனினும் இவர்களுக்கான பணிகள் இதுவரையும் குறித்தொதுக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது வவுனியா பிரதேச செயலர் அ.சிவபாதசுந்தரன் தலைமையில் கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்ட பட்டதாரிப் பயிலுநர்களைத் திசைமுகப்படுத்தும் பயிற்சி நெறிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

பட்டதாரிப் பயிலுநர்களுக்குத் தலைமைத்துவப் பயிற்சி, சமூக விழிப்புணர்வுகள் தொடர்பான பயிற்சிகள் வழங்கப்பட்டு வருவதுடன் இவர்களின் ஆங்கில அறிவை விருத்தி செய்வதற்கான ஆங்கில வகுப்புக்களும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

இவை நிறைவடைந்ததும் பட்டதாரிப் பயிலுநர்களுக்குப் பொருத்தமான பணிகள் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(க-400)

# வவுனியாவில் சிறப்பான வெங்காயச் செய்கை

வவுனியாவிலுள்ள கிராமப் பகுதிகள் பலவற்றில் வெங்காயச் செய்கை சிறந்த முறையில் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. நிறுவனம் ஒன்று வெங்காயச் செய்கையை ஊக்குவிக்கும் வகையில் விதை வெங்காயம் மற்றும் நீரிறைக்கும் இயந்திரம் ஆகியவற்றை வழங்கியுள்ளது.

இதைத் தொடர்ந்து கிராமங்களிலுள்ள பயிர்ச் செய்கையாளர்கள் மிகுந்த ஆர்வத்துடன் வெங்காயச் செய்கைகளில் ஈடுபட்டுள்ளனர். இதேவேளை வீட்டுத் தோட்டங்களிலும் வெங்காயச் செய்கை ஆர்வத்துடன் மேற்கொள்ளப்படுவதைக் காணமுடிகின்றது. அறுவடையின் போது நியாயமான விலை கிடைக்குமாயின் தாம் அதிக இலாபத்தைப் பெறமுடியுமெனவும் வெங்காயச் செய்கையாளர்கள் கூறுகின்றனர். (க-421)

# பயணிகளுக்கு உபயோகமில்லாத ஓமந்தை மலசலகூடங்கள்

வவுனியா, ஜூலை 21
ஓமந்தை சோதனைச் சாவடியில் பயணிகளுக்கென அமைக்கப்பட்டுள்ள மலசலகூடங்கள் பயணிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யமுடியாத நிலையில் காணப்படுவதாகப் பயணிகள் தெரிவித்துள்ளனர்.

இங்கு சோதனைகளுக்கென வாகனங்கள் நிறுத்தப்படும் போது பயணிகள் அவசரத்தில் மலசலகூடங்களைநோக்கி ஓடிச்செல்வதைக் காணமுடிகின்றது. ஆனால் மலசலகூடங்களின் மோசமான நிலை காரணமாகப் போன வேகத்தில் அவர்கள் முகத்தைச் சுளித்தவாறு திரும்பிச் செல்வதையும் காணமுடிகின்றது.

இவர்கள் தமது இயற்கை உபாதைகளை வவுனியா செல்லும் வரை அடக்கி வைத்திருக்க வேண்டிய அவல நிலையில் உள்ளனர்.

தினமும் ஏராளமான பயணிகள் செல்லும் ஓமந்தைச் சோதனைச் சாவடியிலுள்ள மலசலகூடங்களை உரிய முறையில் பராமரிக்குமாறு பாதிக்கப்பட்ட பயணிகள் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க- 18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கப்பூர் வீதிகளின் தரத்துக்கு ஸ்ரான்லி வீதியை மாற்ற திட்டம்

## வர்த்தகர்களிடம் அனுமதி கோரும் மாநகர சபை

யாழ்ப்பாணம், ஜூலை 21

சிங்கப்பூர் வீதிகளின் தரத்துக்கு யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியையும் மாற்றியமைக்க யாழ். மாநகர சபை அந்த வீதியில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களிடமும் யாழ்.வணிகர் கழகத்திடமும் அனுமதி கோருகின்றது.

யாழ். மாநகர முதல்வர் தலைமையில் யாழ். வணிகர் கழகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் இவ்வாறு கேட்கப்பட்டுள்ளது.

காப்பெற் வீதியாக மாற்றப்பட்டுள்ள ஸ்ரான்லி வீதியில் மேலும் திருத்த வேலைகளை முன்னெடுப்பதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்படும்.

**வணிகர் கழகமும், வர்த்தகரும் ஒத்துழைக்கும் பட்சத்தில் விரைவில் வேலைகளை ஆரம்பிக்க முடியும்.**

இந்த வேலைத் திட்டங்களை நல்ல முறையிலும் துரிதமாகவும் செயற்படுத்த வணிகர் கழகமும், வர்த்தகரும் ஒத்துழைக்கும் பட்சத்தில் விரைவில் வேலைகளை ஆரம்பிக்க முடியும்.

யாழ். ஸ்ரான்லி வீதியில் இருக்கும் வர்த்தக நிலையங்களில் இடையூறுகளின்றி வாகனங்களை நிறுத்தவும் பாதசாரிகள் சிரமம் எதுவுமின்றிப் போக்குவரத்துக்களை மேற்கொள்ளவும் அபிவிருத்தி அவசியம்.

மழை காலங்களில் கடைகளில் வெள்ளம் புகுவதைத் தடுக்கக் கூடியதாக வடிகால் அமைக்கப்பட்டு வீதியின் மண் பகுதிக்குத் தாரிடவும் வர்த்தகர்களின் உதவிகள் எதிர்பார்க்கப்படுகிறது.- என்று தெரிவிக்கப்பட்டது.

இது குறித்த வர்த்தகர்களின் ஆலோசனைகளும் கேட்கப்பட்டது. கூட்டத்தில் யாழ்.மாநகர சபை ஆணையாளர் எஸ்.பிரணவநாதன், வணிகர் கழகத் தலைவர் இ.ஜெயசேகரம் உட்பட நகர அபிவிருத்தி அதிகாரசபை உத்தியோகத்தர்கள், வர்த்தகர்களும் கலந்துகொண்டனர். (ம-7- 86)

## அபிவிருத்தியின் வேகம்...?





யாழ்.மனோகராச் சந்திக்கும் தட்டா தெருச் சந்திக்கும் இடைப்பட்ட கே.கே.எஸ். வீதியில் அமைக்கப்பட்டிருந்த ஜனாதிபதியின் 'கட் அவுட்' கடந்த சில வாரங்களுக்கு முன்னர் கிழிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் புதிய 'கட் அவுட்' கடந்த வாரம் மீளவும் வைக்கப்பட்டுள்ளது. இந்த வேகத்தை அபிவிருத்தியிலும் காட்டுங்கள் என்று பல தரப்பட்டோரும் கருத்துக் கூறுகின்றனர். (ம-5)

## நடைபாதையில் மரக்கறி மூடை: இனி நடவடிக்கைதான்

யாழ்ப்பாணம்,ஜூலை 21

திருநெல்வேலி மரக்கறிச் சந்தைக் கட்டடப் பகுதியின் நடைபாதைகளில் மரக்கறி மூடைகளை வைத்திருக்கும் வியாபாரிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று நல்லூர் பிரதேச சபையின் தலைவர் ப.வசந்தகுமார் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மரக்கறிச் சந்தையின் நடைபாதைகளில் மூடைகளை வைத்துள்ளதால் மரக்கறி கொள்வனவு செய்ய வரும் நுகர்வோர் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இந்த மரக்கறி மூடைகளை நடைபாதைகளில் வைத்திருக்க வேண்டாம் என்று பல தடவைகள் அவர்களுக்குக் கூறப்பட்டுள்ளது.

ஆயினும் சில வியாபாரிகள் அதைக் கேட்பதாக இல்லை. இது தொடர்பாக எமக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இவ்வாறு நடைபாதைகளில் மூடைகள் மற்றும் பொருள்களை வைத்திருக்கும் சந்தை வியாபாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் -என்றார். (த-17)

## உள்ளூர் தபால்கள் தாமதமின்றி விநியோகம்

யாழ். மாவட்டத்தில் உள்ளூர் தபால் சேவைகள் வழமைபோன்று துரித கதியில் நடைபெற்று வருவதாக யாழ். பிரதம தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறியதாவது:-

குடாநாட்டில் சகல பிரதேசங்களுக்குமான தபால்கள் வடபிராந்திய போக்குவரத்து சபை பஸ்களில் காலையில் அனுப்பி வைக்கப்படுகின்றன.

இந்தத் தபால்கள் உரிய பிரதேசங்களுக்குச் சுமார் அரைமணி நேரத்துக்குள் சென்றடைகின்றன.பின்னர் அவை தபாலகங்களினூடாக உரியவர்களுக்கு விநியோகிக்கப்படுகின்றன.

இந்த உள்ளூர்த் தபால் விநியோகத்தில் எந்தவித தாமதமும் ஏற்படவில்லை. வடமராட்சி, தென்மராட்சி, தீவகம் ஆகிய பகுதிகளுக்கும் தபால் விநியோகம் சீராக இடம்பெறுகிறது என்றார். (த-17)

## மதில்கள், 'கேற்'றுகளுக்கும் தார் பூசும் பணியாளர்கள்

யாழ்ப்பாணம்,ஜூலை 21

யாழ்.மடத்தடிப் பகுதியில் வீதித் திருத்தப் பணிகளை மேற்கொள்ளும் ஊழியர்கள் வீதிக்கு தாரிடும் போது வீட்டு மதில்கள், கேற்றுகள் மீதும் தாரைப் பூசி அசிங்கப்படுத்துவதாக அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

யாழ்.ஏ-9 வீதியில் மடத்தடியை அண்டிய பகுதிகளில் கடந்த சில தினங்களாக வீதித் திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன் போது வீதிக்கு தார் போட்டுச்செப்பனிடும்போது எஞ்சும் தாரை வீட்டு மதில்கள், கேற்றுகள், வீதியில் அருகில் இருந்த மரங்கள் மீதும் பூசி அசிங்கப்படுத்தியுள்ளனர்.

இதன் காரணமாக புதிதாக வீட்டு மதில்கள், கேற்றுகளுக்கு பெயின்ற் அடித்தவர்களும், வீதித்திருத்தப் பணிகளால் மதில்களை இடமாற்றி புதிதாககட்டியவர்களும் பெரும் விசனம் தெரிவித்துள்ளனர்.

மதில்கள், கேற்றுகள் மீது பூசப்பட்ட தாரை அழிக்க முடியாத காரணத்தால் மீண்டும் புதிதாக பெயின்ற் அடிக்க வேண்டியுள்ளதாகத் தெரிவித்துள்ளனர். (ம-7-14)

## மக்கள் முன்னணி ஆதரவாளர் வீட்டுக்கு கழிவு ஒயில் வீச்சு

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வடமராட்சியைச் சேர்ந்த மற்றொரு ஆதரவாளரின் வீட்டுக்கும் நேற்று முன்தினம் அதிகாலை 2 மணிக்கு போத்தல்களால் வீசி கழிவு ஒயிலும் ஊற்றப்பட்டுள்ளது. வதிரி நெல்லியடி வடக்கைச் சேர்ந்த பி.வசந்தராஜா என்பவரின் வீட்டுக்கே போத்தல்களால் எறிந்தும் கழிவு ஒயிலும் ஊற்றப்பட்டதாக முன்னணியிடம் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே இரண்டு ஆதரவாளர்களது வீட்டுக்கு இவ்வாறு கழிவு ஒயில் வீசப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-8)



பொலிஸாரின் அணிவகுப்பு மற்றும் உடை என்பன வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் பரிசோதிக்கப்பட்டன. வல்வெட்டித்துறை திருவில் விளையாட்டு மைதானத்தில் பொலிஸ் நிலையப் [illegible] காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்சகர் காமினி [illegible] னைகளை மேற்கொண்டனர். (ம-253)

## 3 பிள்ளைகளின் தந்தையை காணவில்லையென முறையீடு

யாழ்ப்பாணம்,ஜூலை 21

கொடிகாமம் வெள்ளாம் போக்கட்டியைச் சேர்ந்த 33 வயதுடைய 3 பிள்ளைகளின் தந்தையை கடந்த 7 நாள்களாக காணவில்லை எனத் தெரிவித்து அவரது மனைவியால் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய கிளையில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகப் பிராந்திய ஆணையாளர் த.கனகராஜ் தெரிவித்தார்.

கொடிகாமம் வெள்ளாம் போக்கட்டியைச் சேர்ந்த 33 வயதுடைய ரதிகுமார் என்பவரே கடந்த 11ஆம் திகதி முதல் காணாமற் போயுள்ளார் என்று அவரது மனைவியால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 10 ஆம் திகதி வீட்டிலிருந்து சென்றுள்ளார். மறுநாள் 11 ஆம் திகதி அநுராதபுரம் நீதிமன்றில் உள்ள வழக்கு ஒன்றுக்காகவே சென்றிருந்தார்.

இருப்பினும் இவர் குறித்த வழக்குக்கும் சமுகமளிக்கவில்லை என்றும் இதுவரை வீட்டுக்கும் திரும்பவில்லை என்றும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து புதன் கிழமை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய கிளையிலும் கொடிகாமம் பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் கோப்பாயைச் சேர்ந்த பெண்ணொருவர், காணாமற் போன குறித்த நபர் தன்னை திருமணம் செய்வதாகக் கூறி லட்சக்கணக்கான ரூபாய்களை வாங்கிச் சென்றதாக கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் 17 ஆம் திகதி முறைப்பாடு செய்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸ் நிலையத்துடன் பலமுறை தொடர்புகொள்ள முயற்சித்த போதும் தொடர்பு கிடைக்கவில்லை. (ம-5-9)

## கருத்தடை மருந்துக்கு தனியான பிரிவு

தென்மராட்சி,ஜூலை 21

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை வெளிநோயாளர் மருந்தகத்தில் கர்ப்பத் தடைக்கான மருந்துகள் வழங்குவதற்கான விசேட கருமபீடம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கர்ப்பத் தடைக்கான தற்காப்பு மாத்திரைகள் ஆணுறை போன்றவற்றை வெளிநோயாளர் மருந்தகத்தில் பெற்றுக்கொள்ளலாமென்றும் கூறப்பட்டுள்ளது.

அண்மைக் காலமாக குடாநாட்டில் இளவயதில் கர்ப்பமடையும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. இவற்றைத் தடுப்பதற்கு பாதிக்கப்படும் பெண்கள் சம்பவம் இடம்பெற்று 72 மணி நேரத்தினுள் இந்த மாத்திரைகளை பயன்படுத்தித் தேவையற்ற கர்ப்பங்களை தவிர்த்துக்கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)

## பெண்நோயியல் சிகிச்சைப் பிரிவு சாவகச்சேரியில் நேற்று ஆரம்பம்

தென்மராட்சி,ஜூலை 21

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் முதன்முறையாக பெண்நோயியல் சிகிச்சைப் பிரிவு நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

இந்தச் சிகிச்சைப் பிரிவு பிரதி வெள்ளிக்கிழமைகளில் வைத்தியசாலை கிளினிக் அறையில் இடம்பெறும்.

பெண்களுக்கு இறப்பை ஏற்படுத்தக்கூடிய கர்ப்பப்பை புற்றுநோய், கர்ப்பப்பை வாசல் புற்றுநோய் போன்றவற்றால் பாதிக்கப்படும் பெண்களுக்காக பெண் வைத்திய அதிகாரியால் இந்தச் சிகிச்சைப் பிரிவு நடத்தப்படவுள்ளது.

பெண் நோயால் பாதிக்கப்பட்டுள்ள பெண்கள் நேரடியாகப் பிரதி வெள்ளிக்கிழமைகளில் காலை 8.00 மணி தொடக்கம் நண்பகல் வரை நடத்தப்படும் சிகிச்சைப் பிரிவில் கலந்துகொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-9)

## நல்லூர் ஆலய சுற்றாடலில் மணல் பரவல்

யாழ்ப்பாணம், ஜூலை 21

நல்லூர் கந்தன் உற்சவம் ஆரம்பமாகவுள்ள நிலையில் ஆலயச்சூழலில் தற்போது புதிதாக மணல் பரவும் பணிகளில் தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

ஏற்கனவே ஆலய வெளிச் சுற்றாடலில் இருந்த மணல் அகற்றப்பட்டு அதற்குப் பதிலாகத் தற்போது புதிய மணல் பரவும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஆலய உற்சவத்தில் பக்தர்கள் அங்கப் பிரதிஷ்டை செய்வதற்கு வசதியாக இந்த மணல் பரவப்படுகிறது.(த-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்மோகனைச் சாடியது 'ரைம்' பதிலடி கொடுத்தது 'அவுட்லுக்'




சென்னை, ஜூலை 21

அமெரிக்காவின் 'ரைம்' பத்திரிகையின் முகப்பில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை 'தி அன்டர் அச்சீவர்' என்ற தலைப்பிட்டு கட்டுரை வெளியிட்டதற்குப் பதிலடியாக இந்தியாவின் 'அவுட்லுக்' பத்திரிகை தமது இதழின் முகப்பில் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா 'தி அன்டர் அச்சீவர்' என்ற தலைப்பிட்டு கட்டுரை வெளியிட்டிருக்கிறது.

அண்மையில் மன்மோகன் சிங்கின் செயற்பாடுகளை விமர்சித்து 'ரைம்' பத்திரிகை கட்டுரை வெளியிட்டிருந்தது. அதில் பிரயோசனமாக எதையும் சாதிக்காதவர் மன்மோகன் சிங் என்றும் நிழல் மனிதர் என்றும் விமர்சித்திருந்தது. பொருளாதார சீர்திருத்தங்களுக்கு இந்தியா தம்மைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அதில் வலியுறுத்தப்பட்டிருந்தது. ஆளும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் செயற்பாடுகளை மிகவும் கடுமையாகத் தாக்கியிருந்தது.

இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் வெளிவரவுள்ள 'அவுட்லுக்' பத்திரிகையில் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவை கடுமையாகச் சாடியுள்ள கட்டுரை ஒன்றை பிரசுரித்துள்ளது. அட்டையின் முகப்பில் எப்படி மன்மோகன்சிங் படத்தைப் போட்டு விமர்சித்திருந்ததோ அதேபோல் ஒபாமா படத்தைப் போட்டு விமர்சித்திருக்கிறது 'அவுட்லுக்'.

மன்மோகன்சிங் படத்தைப் போட்டு 'முதலில் இருந்து ஆரம்பிக்க வேண்டியிருக்கிறது' என்று எப்படி விமர்சித்திருந்ததோ அதே பாணியில் ஒபாமா படத்தின் கீழ் ''முதலில் இருந்து தொடங்க வேண்டியிருக்கிறது. வாக்குறுதிகளை நிறைவேற்றாதவர் ஒபாமா'' என்றும் குறிப்புப் போட்டு சாடியுள்ளது 'அவுட்லுக்'.

இந்தியாவின் நேரடி அந்நிய முதலீட்டுக்கான கதவுகளைத் திறந்தாக வேண்டும் என்ற தொனியில் அண்மையில்கூட அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா கூறியிருந்தார். அமெரிக்காவைப் பொறுத்தவரையில் அதன் விருப்பத்திற்கு ஏற்ற பொருளாதாரக் கொள்கைகளை இந்தியா உருவாக்க வேண்டும் என்று கருதியே அவர் முதல் ஊடகங்கள் வரை கருத்துப் பரப்பலை மேற்கொண்டு வருகின்றன. ஆனால் கொள்கை முடிவுகள் விடயத்தில் இந்தியா தன்னிச்சையாகவே செயற்படும் என்று அண்மையில் தொழில் துறை அமைச்சர் ஆனந்த் சர்மா கூறியிருந்தார்.

(வ)

## கேரள அரசின் மனு நிராகரிப்பு

முல்லைப் பெரியாறு அணைக்கு பதிலாக புதிய அணை கட்டும் முகமாக சுற்றுச்சூழல் குறித்து ஆய்வு நடத்த அனுமதிக்கக்கோரி மத்திய வனம் மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சகத்திடம் கேரள அரசு தாக்கல் செய்த மனு நிராகரிக்கப்பட்டுள்ளது.

கேரள அரசு தனது அறிக்கையில், 116 ஆண்டுகாலப் பழைமை வாய்ந்த முல்லைப் பெரியாறு அணை உடையும் அபாயம் உள்ளதாகவும், அணை உடைந்தால் பல்லாயிரக்கணக்கான மக்கள் உயிரிழக்கும் அபாயம் இருப்பதாகவும் கூறி புதிய அணை கட்ட அனுமதி வழங்க வேண்டும் எனக் கூறியிருந்ததுடன், இதனால் சுற்றுச்சூழல் குறித்து ஆய்வு நடத்த அனுமதி கோரி இந்த மனுவை தாக்கல் செய்திருந்தது.

தற்போது இந்த அறிக்கை நிராகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து புதிய விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்க கேரள நீர்வளத்துறை அமைச்சகம் முனைப்புடன் செயற்பட்டு வருகிறது. முல்லைப் பெரியாறு அணை குறித்த விசாரணை மீண்டும் நாளை மறுதினம் திங்கட்கிழமை மீண்டும் வரும்போது இந்த அறிக்கை தாக்கல் செய்யப்படும்.

## திகார் கைதிகள் உற்பத்திசெய்யும் உணவுகளுக்கு டில்லியில் கிராக்கி



டில்லி, திஹார் சிறைக் கைதிகள் உற்பத்தி செய்யும் உணவுப் பொருள்களுக்கு டில்லியில் நல்ல வரவேற்புக் கிடைத்துள்ளது.

திகார் சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் அதிகமான கைதிகள் அங்கு உணவுப் பொருள்கள் தயாரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்கள் தயாரிக்கும் உணவுப் பொருள்கள், சிறைக் கைதிகளின் உணவுக்குப்போக டில்லி சந்தையில் கிடைப்பதால் டில்லி மக்கள் இதற்கு நல்ல வரவேற்பு அளித்துள்ளதாகத் தெரிகிறது.

திகார் சிறைக் கைதிகள் உற்பத்தி செய்யும் பேக்கரி பொருள்கள், மற்றும் வேறு வகை உணவுப் பொருள்கள் சிறைக் கைதிகளின் தேவைக்குப் பயன்படுத்துவதுபோக மீதியை வெளியில் கடைகளுக்கு சிறை நிர்வாகம் கொடுப்பது உண்டு. அந்தவகையில் இந்த உணவுப் பொருள்கள் மிகவும் தரமாகவும் ருசியாகவும் இருப்பதாகக் கூறி பொது மக்கள் ஆர்வத்துடன் வாங்கி உண்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதையடுத்து பிரபல ரிலையன்ஸ் நிறுவனம், இந்த உணவுப்பொருள்களுக்குக் கிடைக்கும் வரவேற்பை உணர்ந்து, திகார் சிறைக் கைதிகளின் தயாரிப்பு உணவுப் பொருள்களை வாங்கி டில்லி சந்தையில் விற்க முடிவு செய்துள்ளதாகத் தெரிகிறது. அதன்படி, இனிமேல் திகார் சிறைக் கைதிகளின் உணவுத் தயாரிப்பு பொருள்கள், மற்றும் பேக்கரி உணவுகள் டில்லி ரிலையன்ஸ் கடைகளில் கிடைக்கும் என்று தெரிய வருகிறது.

## 'ஜெ' கையெழுத்து போட்டு மோசடி செய்தவர் கைது

சென்னை, ஜூலை 21

தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் கையெழுத்தை தானே எழுதி மோசடியில் ஈடுபட்ட நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சென்னை ஆயிரம் விளக்குப் பகுதியைச் சேர்ந்த பிரின்ஸ் என்பவர் இந்த மோசடியில் ஈடுபட்டுள்ளார்.

இவர், ஆசிரியர் இடமாறுதல் சான்றிதழை போலியாகத் தயாரித்து அதில் ஜெயலலிதாவின் கையெழுத்தைப் போட்டுள்ளார்.

பின்பு, இதற்கான விசாரணையில் மாட்டிக்கொண்ட பிரின்ஸை பொலிஸார் கைது செய்தனர்.



புதுடில்லி வந்த ரஷ்ய துணை பிரதமர் டிமிட்ரி ரேகோஷின் இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவைச் சந்தித்தார்.

## பாலியல் குற்றத்தில் சிக்கினால் இனிமேல் ஆயுள்கால சிறை

இந்தியாவில் இனி யாராவது பாலியல் குற்றத்தில் சிக்கினால் அவருக்கு ஆயுள் தண்டனை விதிக்க வகை செய்யும் சட்டத் திருத்தத்துக்கு மத்திய அமைச் சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

பிரதமர் மன்மோகன் சிங் தலைமையில் மத்திய அமைச்சரவைக் கூட்டம் நேற்று முன்தினம் அவரது இல்லத்தில் நடைபெற்றது. இதில், பாலியல் குற்றங்களில் ஈடுபடும் சமூக விரோதிகளுக்கு ஆயுள் தண்டனை விதிக்கும் வகையில் குற்றவியல் நடைமுறைச் சட்டம் மற்றும் இந்திய தண்டனைச் சட்டத்தைத் திருத் துவதற்கு ஒப்புதல் தரப்பட்டது.

அத்துடன் அசிட் வீசும் நபர் களுக்கு 10 ஆண்டு கடுங்காவல் தண்டனை மற்றும் ரூ.10 லட்சம் அபராதம் விதிக்கவும் பெண்களை பாலியல் பலாத்காரம் செய்வோருக்கு 3 ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கவும் இந்தச் சட்டத் திருத்தத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.

## அமைச்சரவையிலிருந்து விலகுகிறார் சரத்பவார்



தேசியவாத காங்கிரஸ் கட்சித் தலைவர் சரத்பவார் மத்திய அமைச்சரவையில் இருந்து விலக முடிவு செய்துவிட்டதாகத்தெரிவிக்கப்படுகிறது.

இது சம்பந்தமாக ஆலோசனை நடத்தவே காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியை அவரது இல்லத்தில் நேற்றுக் காலை சரத்பவார் சந்தித்ததாக தகவல் வெளியாகியுள்ளது.

மத்திய அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் சரத்பவாருக்கு, பிரதமருக்கு அடுத்தபடியான இடத்தை தனக்கு வழங்கவில்லை என்கிற அதிருப்தியில் மத்திய அமைச் சரவையிலிருந்து விலக முடிவெடுத்திருப்பதாகவும் தெரிகிறது.

இது தொடர்பான கடிதத்தை பிரதமருக்கு அனுப்பி வைத்து விட்ட சரத்பவார், பிரதமர் மன்மோகன் சிங்கையும் சந்திக்க இருப்பதாகத் தெரிகிறது. மேலும் சரத்பவாரின் இல்லத்தில் தேசியவாத காங்கிரஸ் தலைவர்கள் சந்தித்து ஆலோசனை நடத்த உள்ளதாகவும் அதிகார பூர்வத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## இந்திரா காந்தியின் முதன்மை ஆலோசகர் பிருத்வி இறப்பு



இந்தியாவின் முதல் பெண் பிரதமர் இந்திரா காந்தியின் முதன்மை ஆலோசகரும், பொருளாதார நிபுணருமாகிய பிருத்வி நாத் தார் (வயது 94) நேற்று முன்தினம் காலமானார்.

கடந்த சில காலமாக உடல் நலக் குறைவால் அவதிப்பட்டு வந்தார். இந்த நிலையில் நேற்று முன்தினம் இவர் உயிரிழந்தார்.

பிருத்வி நாத் தார், டில்லி பல்கலைக்கழகத்தில் பொருளாதார பேராசிரியராகப் பதவி வகித்தவர்.

டில்லி ஸ்கூல் ஒஃப் எக்கோனமிக்ஸ் நிறுவுநர்களில் [illegible] 1976 – 1978 [illegible] காலகட்டத்தில் ஐக்கிய நாடுகள் அமைப்பின் துணைச் செயலாளராக பதவி வகித்துள்ளார்.

ஐ.ஏ.எஸ் அல்லது ஐ.எஃப்.எஸ் போன்ற நிர்வாகப்பணிகளுக்கான படிப்பு படிக்காமல், பிரதமர் அலுவலகத்தில் பணியாற்றிய முதல் நபர் பிருத்வி நாத் தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிரீன்லாந்தில் மிகப்பெரிய பனிப் பாறையில் பிளவு



கிரீன்லாந்தில் மிகப் பெரிய பனிப்பாறை ஒன்று பிள வடைந்துள்ளதை, நாசா விஞ்ஞானிகள் உறுதிப்படுத்தி உள்ளனர். கிரீன்லாந்தின் பீற்றர்மான் கிளாஸியர் என்ற பனிப்பிரதேசத்திலேயே இந்த வெடிப்பு நிகழ்ந்துள்ளதாக செய்மதிப் படங்கள் மூலம் நாசா விஞ்ஞானிகள் உறுதிப் படுத்தி உள்ளனர். கனடாவின் மேற்கே கிரீன்லாந்து உள்ளது. பீற்றர்மான் கிளாஸியர் என்ற பகுதி கிரீன்லாந்தின் ஐஸ் வலயத்தையும், ஆர்ட்டிக் சமுத்திரத்தையும் இணைக்கும் பனி மூடிய நிலப்பரப்பாக உள்ளது.

இது சுமார் 250 சதுர கிலோ மீற்றர் பரப்பளவு கொண் டது. கடந்த 2010ஆம் ஆண்டு பீட்டர்மன் கிளாசியர் வெடிப்புக்குள்ளான போது 30 கிலோ மீற்றர் நீளமுடைய புதிய பனித்தீவு உருவாகி இருந்தது.

தற்போது திடீரென குறுகிய காலத்தில் ஏற்பட்டுள்ள இந்த வெடிப்பு விஞ்ஞானிகளிடையே அதிர்ச்சியை ஏற்ப டுத்தி உள்ளது. இதுகுறித்து நாசாவின் எரிக் ரிஒங்னொட் என்ற ஆய்வாளர் கூறுகையில், இது வெடிப்பு அல்ல, வரப்போகும் முக்கிய நிகழ்வுக்கான அறிகுறி என்று தெரிவித்தார். (வ)

# படகு கவிழ்ந்து 38 பேர் சாவு

### சடலங்கள் மீட்பு; 120 பேரைக் காணவில்லை

தன்சானியாவில் 290 பேருடன் சென்று கொண் டிருந்த படகு நீரில் மூழ்கி யது. இதன்போது நீரில் மூழ்கி உயிரிழந்தவர்களில் 38 பேரின் சடலங்கள் மீட் கப்பட்டுள்ளன. 120 பேரைக் காணவில்லை.

தன்சானியா தலைநகர் தார்-எஸ்- சலாமிலிருந்து ஜான்ஜிபார் தீவுக்குப் பயணி கள் கப்பல் கடந்த 18ஆம் திகதி சென்றது. அதில் 251 பெரியவர்கள், 31 குழந் தைகள் மற்றும் 9 கப்பல் பணியாளர்கள் இருந்தனர். ஜான்ஜிபார் அருகே சென்று கொண்டிருந்த போது கப் பல் திடீரென நீரில் மூழ் கியது.

மீட்புக் குழுவினர் இது வரை 38 பேரின் சடலங் களை மீட்டுள்ளனர். 140 பேரை உயிருடன் மீட்டுள்ளனர். ஏனையோரைத் தேடும் பணி நடைபெற்று வருகின்றது.

எனினும், அவர்களில் பலர் உயிரோடு இருக்க வாய்ப்பில்லை என்று ஜான் ஜிபார் பொலிஸ் செய்தித் தொடர்பாளர் முகமது மினா தெரிவித்துள்ளார்.





மேலும் அந்தக் கப்பலில் வெளிநாட்டுப் பயணிகள் 16 பேர் இருந்ததாகவும், அவர் களில் 14 பேர் மீட்கப்பட்டு விட்டதாகவும் தெரிவித்தார்.

தன்சானியாவின் ஜனா திபதி ஜகாயா கிக்வீட் தெரி விக்கையில், ''இது போன்ற சம்பவங்கள் எம்மை துயரத் தில் ஆழ்த்துகின்றன. உயி ரிழந்தவர்களின் குடும்பத் தினருக்கு ஆழ்ந்த அனுதா பங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்'' என்றார்.

கடந்தாண்டு செப்ரெம் பரில் இதே போன்று பயணி கள் கப்பல் மூழ்கியதில் 200 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. படகு விபத்தில் இறந்தவர்களுக் காக ஜான்ஜிபாரில் மூன்று நாள் துக்கம் அனுசரிக்கப்ப டுகிறது. (வ)



ஜப்பானுக்கு பயணம் செய்த ஸிம்பாப்வே பிரதமர் மோர்கன் சிவான் கிரைய்யை ஜப்பான் பிரதமர் யோசிகிகோ நேடா வரவேற்கிறார்.

## சீனக் கப்பல்கள் மீது ரஷ்யா துப்பாக்கிச் சூடு

ரஷ்யாவின் கடற்பகுதி யில் அத்துமீறி நுழைந்து மீன் பிடித்த சீனர்களை, ரஷ்ய கடற்படையினர் கைது செய்துள்ளதாக சீன அரசு தெரிவித்துள்ளது.

இந்தச்சம்பவம் குறித்து ரஷ்யா, முதலில் எச்சரிக்கை தரும் நோக்கில் சுட்டதாகவும், ஆனால் அந்த குண்டு சீனக் கப்பலில் பாய்ந்து விட்டதா கவும் தெரிவித்துள்ளது. இந் தத் துப்பாக்கிச் சூட்டில் உயி ரிழப்போ, காயமோ ஏற்பட வில்லை.

பிடிபட்ட சீனக் கப்பல் ஒன்றில் 22.5 மெற்றிக் தொன் சிப்பி மீன்களும், 17 மீனவர் களும் இருந்தனர். மற்றொரு கப்பலில் 19 மீனவர்கள் இருந் தனர். ஆனால் அவர்களிடம் ரஷ்யாவின்பிரத்தியேகப்பொரு ளாதார மண்டலத்தில் மீன் பிடிக்கும் அனுமதி இல்லை.

பிரத்தியேகப் பொருளா தார மண்டலம் என்பது ஒரு நாட்டின்கடற்கரையில் இருந்து 200 மைல் தூரமாகும். இந் தப் பகுதியில் உள்ள கடல் வளம் முழுவதும் அந்த நாட்டுக்கே சொந்தமாகும்.

1983ஆம் ஆண்டு ரஷ்யா, கொரியாவின் பயணிகள் விமானத்தைச் சுட்டது. தற் போது சீனாவின் பயணிகள் கப்பலைச் சுட்டுள்ளது. ரஷ் யாவின் இந்த முரட்டுத்தன மான நடவடிக்கை சீனா- ரஷ்யா நட்பு உருவாகுவ தைப் பாதிக்கும் என்று பத் திரிகைகள் தகவல் வெளி யிட்டுள்ளன. (வ)

## கிலானியின் மகன் தேர்தலில் வெற்றி



பாகிஸ்தானில் முல்தான் நாடாளுமன்றத் தொகுதி இடைத்தேர்தலில், முன்னாள் பிரதமர் கிலானி யின் மகன் அப்துல் காதிர் கிலானி வெற்றி பெற்றார்.

நீதிமன்ற அவமதிப்பு வழக்கின் கீழ் கிலானி தகுதி நீக்கம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து, அவரது தொகு தியில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை தேர்தல் நடை பெற்றது.

இந்தத்தேர்தலில் பாகிஸ் தான் மக்கள் கட்சியின் சார் பில் போட்டியிட்ட, கிலா னியின் மகன் அப்துல் காதிர் கிலானி 64,628 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார்.

அவரை எதிர்த்துப் போட் டியிட்ட பாகிஸ்தான் முஸ் லிம் லீக்(நவாஸ் ஷெரீப்) மற்றும் தெஹ்ரிக்- இ- இன்சாப் கட்சிகளின் ஆதரவு பெற்ற சுயேச்சை வேட் பாளர் சௌகத் போஸன் 30,532 வாக்குகள் பெற்று தோல்வியடைந்தார். (வ)

## பாகிஸ்தானுக்கான உதவியில் வெட்டு

வொஷிங்டன், ஜூலை 21

பாகிஸ்தானுக்கான நிதி யுதவியை விரைவில் அமெ ரிக்கா குறைக்கவுள்ளது.

அமெரிக்க நாடாளுமன் றத்தில் பாகிஸ்தானுக்கு இரா ணுவ நிதியுதவியாக வழங்கி வரும் 1.3 மில்லியன் டொலரை ரத்து செய்ய வேண்டும் என்ற கோரிக்கை வலுத்து வந்தது. இந்த நிலை யில், நேற்று முன்தினம் நடைபெற்ற கூட் டத்தில் பாகிஸ்தானுக்கு வழங் கும் நிதியில் 650 மில்லியன் டொலரை ரத்து செய்யகுரல் வாக்கெடுப்பு மூலம் முடிவு செய்யப்பட்டது. இந்த முடிவு அறிக்கை செனட் டின் ஒப்புதலுக்கு அனுப் பப்பட்டுள்ளதாகவும் தெரிகி றது.

இதுகுறித்து பேசிய அமெரிக்க வெளியுறவுக் குழுவின் உறுப்பினர் டெட் போவ், அமெரிக்காவின் வேண்டுகோளுக்கு இணங்கி பாகிஸ்தான் தீவிரவாதத்தை ஒழிப் பதற்கான எவ்வித நடவடிக்கையிலும் ஈடுபட வில்லை. இத்தகைய நடத் தையால் பாகிஸ்தான் அமெ ரிக்காவின் நம்பிக்கையை இழந்துவிட்டது.

பாகிஸ்தானுக்கு நிதியு தவி அளித்து வந்தால், எதி ரிக்குப் பணம் கொடுத்து அமெரிக்கர்களைக் கொல்வ தற்கு ஈடாகும். எனவே அமெரிக்கா இனி மேல் பாகிஸ்தானுக்கு செலவு செய்ய வேண்டும் என்பது அவசியமில்லை என்று தெரிவித்தார். (வ)

## சூரிய ஒளியில் இயங்கும் பஸ் சீனாவில் ஆரம்பம்



சூரிய ஒளியின் மூலமாக இயங்கும் பஸ் சேவையை சீனா ஆரம்பித்துள்ளது.

சீனாவின் ஹெய்லான்ஜியாங் மாகாணத்தில், 'லாங்குவா நியூ எனர்ஜி ஓட்டோமொபைல்' நிறுவ னத்தினரால் சோலர் சக்தியின் மூலம் இயங்கும் பஸ் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த பஸ் 100 பயணிகளைக் கொண்ட முதல் சேவையை, நாட்டின் வடக்குப் பகுதியில் உள்ள நகரத்தில் ஆரம்பித்துள்ளது.

சோலர் சக்தியைப் பயன்படுத்துவதன் மூலம் வித்தியம் பேட்டரியின் ஆயுள்காலம் 35 சதவீதம் வரை அதிகரிப்பதாகவும், இந்த பஸ் ஒரு கிலோமீற்றருக்கு 0.6 முதல் 0.7 கிலோவாற்ஸ் சக்தியைப் பயன்படுத்து வதாகவும் தொழில்நுட்ப நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். (வ)

## பல்கேரிய தற்கொலை குண்டுத் தாக்குதல்

### சந்தேகநபரைக் காட்டிக் கொடுத்த சிசி ரீ.வி கமரா

பல்கேரிய நாட்டில் இடம்பெற்ற குண்டுவெடிப் பினை நடத்திய தற் கொலைதாரி என்று கரு தப்படும் சந்தேகநபரின் தோற்றங்கள் சி.சி. தொலை கமரா பதிவுகளில் வெளியா கியுள்ளன.



நீண்ட முடியுடன், தோற் [illegible] விமான நிலை யத்தில் சுற்றித்திரிந்த வெள் ளைக்காரராக இவர் அடை [illegible]ப்படுத்தப்பட்டுள்ளார்.

36 வயது நிறைந்த இவர், போலியான அமெரிக்க சாரதி அனுமதிப்பத்திரம் வைத்துள்ளார்.

கடந்த புதன்கிழமை கிழக்கு பல்கேரிய நகரில் புர்காஸ் விமான நிலை யத்தில் இஸ்ரேலியர்களை ஏற்றிச்சென்ற பஸ்ஸில் மேற்கொள்ளப்பட்ட தற் கொலை குண்டுவெடிப்பில் 7 பேர் உயிரிழந்ததுடன், 30 பேர் காயமடைந்திருந்தனர். லெபனானின் ஹெஷ் பொல் லாஹ் அமைப்பினரும், ஈரானுமே இந்தத் தாக்குதல் சூத்திரதாரிகள் என பல் கேரியா குற்றம் சுமத்தியி ருந்தது.

எனினும் ஈரானின் வெளி விவகார அமைச்சு இந்தக் குற்றச்சாட்டுக்களை உட னடியாக மறுத்திருந்தது. இந்த நிலையிலேயே மேற் படி சந்தேக நபர் பற்றிய சி.சி. தொலைக் கமரா பதிவுகள் வெளியாகியுள் ளன. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒலிம்பிக்கில் பாதுகாப்பில் ஈடுபடும் மோப்ப நாய்களின் தலைகளில் கமரா

லண்டனில் ஒலிம்பிக் போட்டி பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ள பொலிஸ் நாய்களின் தலைகளில் நவீன கமரா பொருத்தத் திட்ட மிடப்பட்டுள்ளது.

லண்டனில் எதிர்வரும் 27ஆம் திகதி ஆரம்பமாகும் ஒலிம்பிக் போட்டியின் போது, தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தும் அச்சுறுத்தல் இருப்பதாக புலனாய்வுத் துறையினர் எச்சரித்துள்ளனர்.

இதையடுத்து லண்டனில் முக்கிய இடங்களில், உயர்ந்த கட்டடங்கள் மீது ஏவுகணைகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

பொலிஸார், இராணுவம்



தவிர்த்து தனியார் முகவர் நிலையங்களைச் சேர்ந்த பாதுகாப்புப் படையினரும் பணியில் ஈடுபட் டுள்ளனர்.

இதற்கிடையே பொலிஸ் நாய்களுக்கு, தலையில் நவீன டிஜிட்டல் கமரா

ஒலிம்பிக் போட்டியின் போது, தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தும் அச்சுறுத்தல் இருப்பதாக புலனாய்வுத் துறையினர் எச்சரித்துள்ளனர்.

மற்றும் வயர்லெஸ் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன.

இதுகுறித்து ஸ்டாப்போர்ட்ஷயர் பொலிஸ் இன்ஸ்பெக்டர் கிறிஸ்டாசன் தெரிவித்ததாவது:-

நாய்களின் தலைகளில் உள்ள கமரா, அங்குள்ள காட்சிகளை நேரடியாக பொலிஸ் கட்டுப்பாட்டு அறைக்கு ஒளிபரப்பும் வகையில் வசதி செய்யப்பட்டுள்ளது.

ஒரு பொலிஸ் நாய் குரைக்கும் பட்சத்தில், அது எதைப் பார்த்து குரைக்கிறது, யாரைப் பார்த்து குரைக்கிறது என்பதை நாம் உடனடியாகப் பார்த்து அறிவதற்கு வசதியாக இருக்கும்.

தீவிரவாதிகள் யாராவது ஒரு கட்டடத்துக்குள் ஒளிந்திருந்தால், முதலில் கமரா பொருத்தப்பட்ட நாயை அனுப்பி அங்குள்ள நிலைமையை அறியவும் திட்டமிட்டுள்ளோம் - என்றார்.

## மனிதனைக் குதறும் கொடூர மீனை பிடித்தால் ரூ. 10, 000 பணப்பரிசில்



மனிதனை உண்ணும் மீனை உயிருடனோ சாகடித்தோ பிடித்துக் கொடுப்பவர்களுக்கு சிறப்புப் பரிசில் வழங்கப்படும் என்று சீன அரசு அறிவித்துள்ளது.

சீனாவின் குவாங்ஸி மாகாணத்தில் உள்ள லியுஜியாங் ஆற்றில் மனிதனை உண்ணும் மீன்கள் (பிரானா) இருப்பது தெரிய வந்துள்ளது. தென் அமெரிக்க கடல் பகுதியில் இந்த வகை மீன்கள் அதிகளவாக உள்ளன.

மனிதனை உண்ணும் இந்த வகை மீன்கள், லியுஜியாங் ஆற்றில் குளித்துக் கொண்டிருந்த 2 பேரை கடந்த வாரம் தாக்கி உள்ளன. இந்த மீன்கள், ஆற்றுக்குள் இறங்கும் மனிதர்களின் சதைகளை அப்படியே பிய்த்து உண்ணும் குணம் கொண்டவை.

இவ்விடயம் குவாங்ஸி மாகாண அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. உடனடியாக விசாரணை நடத்திய அதிகாரிகள், மனிதனை உண்ணும் மீன்களை உயிருடனோ அல்லது சாகடித்தோ பிடித்துக் கொண்டு வந்தால் ரொக்கப் பரிசு அளிக்கப்படும் என்று அறிவித்துள்ளனர்.

ஒவ்வொரு மீனுக்கும் ரூ.10 ஆயிரம் பணப்பரிசில் வழங்கப்படும் என்று அதிகாரிகள் அறிவித்துள்ளனர். இதுகுறித்து அதிகாரிகள் கூறுகையில், லியுஜியாங் ஆற்றில் 5 படகுகளில் அனுபவம் வாய்ந்த மீனவர்களை அனுப்பி உள்ளோம்.

மனிதனை உண்ணும் மீன்களை அவர்கள் பிடித்து வருகின்றனர். இந்த வகை மீன்கள் இதற்கு முன் ஆற்றில் இருந்ததில்லை. மீன் சந்தையிலிருந்து யாராவது கொண்டு வந்து ஆற்றில் விட்டார்களா என்று தெரியவில்லை. இதுகுறித்து விசாரணை நடத்தி வருகின்றோம் என்று அரச அதிகாரிகள் தெரிவித்தனர். (வ)

## அமெரிக்க மாலுமிகள் எச்சரிக்கையின்றி தமிழக மீனவர்கள் மீது துப்பாக்கிச் சூடு

### துபாய் அதிகாரி தகவல்

துபாயில் அமெரிக்க கடற்படை தமிழக மீனவர்கள் மீது எச்சரிக்கை விடுக்காமல் துப்பாக்கிச் சூடு நடத்தியதாக ஐக்கிய அரபு எமிரேட்ஸ் பொலிஸ் அதிகாரி தாகி கல்பான் தமீம் குற்றஞ் சாட்டியுள்ளார்.

அரேபிய வளைகுடா நாடான பக்ரைனில் முகாமிட்டுள்ள அமெரிக்கக் கடற்படை கப்பலுக்கு எரிபொருள் வழங்கரபாணாக் என்ற அமெரிக்க கப்பல் துபாய் நோக்கி சென்று கொண்டிருந்தது. இந்த எண்ணெய்க் கப்பலை நோக்கி வந்த படகு மீது, அமெரிக்க மாலுமிகள் கடந்த 16 ஆம் திகதி துப்பாக்கிச் சூடு நடத்தியதில் இராமநாதபுரம் மாவட்டம், தோப்பு வலசை களிமண் குண்டைச்சேர்ந்த சேகர் உயிரிழந் தார். முத்து முனிராஜ், முத்து கண்ணன், முருகன் ஆகி யோர் காயமடைந்தனர்.

இந்தச்சம்பவத்தில் நாம் விடுத்த எச்சரிக்கையை மீறி, படகு வந்ததால் தான் சுட்டோம் என்று அமெரிக்க மாலுமிகள் தெரிவித்தனர். ஆனால் இந்தத் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த மீனவர்களைச் சந்தித்துப் பேசிய ஐக்கிய அரபு எமிரேட்டின் பொலிஸ் உயரதிகாரி தாகி கல்பான் தமீம் குறிப்பிடுகையில், அமெரிக்க கப்பல் மாலுமிகள் எச்சரிக்கை ஏதும் விடவில்லை என்று தெரிவித்தார். (வ)

## சவூதி பெண்களுக்கு பச்சை குத்தியவருக்கு ஒரு வருடச் சிறை

சவூதி அரேபியாவில் பெண்களுக்கு பச்சை குத்திய லெபனானியருக்கு 200 கசையடிகள் வழங்கி அந்தநாட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. சவூதி அரேபியாவில் திருமணம் செய்யாத ஆண்களும் பெண்களும் பேசுவதற்குத் தடை உள்ளது. மேலும் பெண்களுக்கான கட்டுப்பாடுகள் அந்தநாட்டில் அதிகம் உள்ளது.

இந்தநிலையில் லெபனான் நாட்டைச் சேர்ந்த இந்தநபர், சவூதி பெண்களுக்கு பச்சை குத்துவது, தலைமுடிக்கு சாயம் பூசுவது போன்ற பணிகளில் ரகசியமாக ஈடுபட்டு வந்திருக்கின்றார்.

இவர் குறித்த தகவல் சவூதி பொலிஸாருக்குத் தெரிய வர, வாடிக்கையாளரின் கார்ச் சாரதி போல நடித்து இந்தநபரை கைது செய்தனர். இவருக்கு ஜெட்டா மாவட்ட நீதிமன்றம் ஒரு வருடச் சிறைத் தண்டனையுடன் 200 கசையடிகளும் வழங்கி தீர்ப்பளித்துள்ளது.(வ)

விடுதலைப் பெருவிழா
வாருங்கள்... விடுதலை பெறுங்கள்
பாவத்திலிருந்து !
சாபத்திலிருந்து !! தீராத நோயிலிருந்து !!!
பில்லி-சூனியக்கட்டிலிருந்து !!!
பிசாசின் பிடியிலிருந்து !!!
பாவ அடிமைத்தனத்திலிருந்து !!!
இயேசு விடுதலை கொடுக்கிறார்...
இடம் : நகரசபை மைதானம், சாவகச்சேரி.
(பஸ்நிலையம் பின்பாக)
காலம் : ஜூலை 21,22 ஆம் திகதிகளில்
நேரம் : மாலை 4.30 மணி
(சு/1578) (6.7)
கடந்த காலங்களில் பல்வேறு இடங்களில் நடைபெற்ற விடுதலைப் பெருவிழாக்களில் அநேகர் அற்புத விடுதலை பெற்றார்கள்.

ஞாயிறு தோறும் யாழிலும் வலம் வருகிறது
'சுடர் ஒளி'
வாசகர்களே.....
இவ்வார விருந்தாக.....
★ முஸ்லிம் காங்கிரஸும், தமிழ்க் கூட்டமைப்பும் எமக்குச் சவாலே கிடையாது
- மு.கா. பிரிந்த கதையை விளக்கி அமைச்சர் பஸில் பரபரப்புப் பேட்டி
★ கிழக்குத் தேர்தலும் இந்தியாவின் இராஜதந்திரமும்
- சிறப்புக்கட்டுரை
★ தனித்துப் போட்டியிட்டது தனித்துவத்தைக் காக்கவே
- அமைச்சர் ஹக்கீம் அதிரடி பேட்டி
★ மற்றும் பல சூடான தகவல்களுடன்...
பிரதிக்கு முந்துங்கள்
(சு/1566) (6.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு மாகாண மக்களுக்கு கணினி பதிவுச் சான்றிதழ்

## பதிவாளர் திணைக்களம் நடவடிக்கை

அம்பாறை, ஜூலை 21

கிழக்கு மாகாணத்திலுள்ள மக்களுக்கு கணினி மயப்படுத்தப்பட்ட பிறப்பு, இறப்பு, திருமணப் பதிவுகளை வழங்குவதற்கான உடனடி நடவடிக்கைகளை பதிவாளர் திணைக்களம் எடுத்துள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவித் திட்டத்தின் கீழ் சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை முக்கியத்துவப்படுத்தி கணினி மயப்படுத்தப்பட்ட பிறப்பு, இறப்பு, திருமணப் பதிவுச் சான்றிதழ்கள் வழங்கும் திட்டம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் ஊடாக 2008ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது.

எனினும் கொழும்பு, யாழ்ப்பாணம் உட்பட ஏனைய சில மாவட்டங்களில் கணினி மயப்படுத்தப்பட்ட சான்றிதழ்கள் வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்ற போதிலும், சுனாமியால் பாதிக்கப்பட்ட கிழக்கில் இதுவரை இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களிலுள்ள பல பிரதேச செயலகங்களில் இயங்கிவரும் மேலதிக மாவட்டப் பதிவாளர் அலுவலகங்களுக்குக் குறித்த கணினிப் பதிவுச் சான்றிதழ்கள் வழங்குவதற்கென 2008 ஆம் ஆண்டு அனுப்பி வைக்கப்பட்ட இலத்திரனியல் உபகரணங்கள் தூசு படிந்து தூங்கிக் கொண்டிருக்கும் நிலைமையும் இருந்துவந்தது.

இந்த நிலைமையால் கிழக்கு மாகாணத்திலுள்ள மூன்று மாவட்டங்களையும் சேர்ந்த மக்கள் தமது பிறப்பு இறப்பு, திருமணப் பதிவுச் சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்வதில் பெரும் சிரமங்களையும் காலதாமதங்களையும் அனுபவித்து வந்தனர்.

இந்த நிலைமையை எடுத்துக் காட்டியும், கிழக்கில் கணினி மயப்படுத்தப்பட்ட பதிவுச் சான்றிதழ்கள் வழங்கும் திட்டத்தை உடன் ஆரம்பிக்குமாறு வலியுறுத்தியும் கடந்த 13ஆம் திகதி உதயனில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

இதனையடுத்து பதிவாளர் திணைக்களம் உடனடி நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

இந்த நடவடிக்கையின் பயனாக கொழும்பிலிருந்து இதற்கான தொழில்நுட்பக் குழுஒன்றுகிழக்குக்குஅனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்திலிருந்து இவர்கள் கணினிப் பதிவுகள் வழங்குவதற்கான இணைப்பு நடவடிக்கைகளை உடன் ஆரம்பித்துள்ளதாக கிழக்கு வலய உதவிப் பதிவாளர் நாயகம் என்.எம்.நயீம் தெரிவித்தார்.

இதன்படி அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த கல்முனை, சாய்ந்தமருது, நிந்தவூர், அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, ஆலையடி வேம்பு, திருக்கோவில், பொத்துவில், லகுகல, காரைதீவு ஆகிய பிரதேச செயலகங்களில் இயங்கும் மேலதிக மாவட்டப் பதிவாளர் அலுவலகங்களில் ஒருவார காலத்துள் கணினி மயப்படுத்தப்பட்ட பதிவுச் சான்றிதழ்களைப் பெறும் வாய்ப்புக் கிடைக்கும் என்று அவர் கூறினார்.

இந்த நடவடிக்கை தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு, மட்டக்களப்பு மாவட்டத்தில் ஓட்டமாவடி, வாழைச்சேனை, கோரளைப்பற்று, வாகரை, கிரான், செங்கலடி, மண்முனை வடக்கு, காத்தான்குடி, களுவாஞ்சிக்குடி, ஆரையம்பதி பிரதேச செயலக மேலதிக மாவட்டப் பதிவாளர் அலுவலகங்களிலும், திருகோணமலை மாவட்டத்தில் திருமலைநகர், மூதூர், கிண்ணியா, சேருவில, குச்சவெளி பிரதேச செயலகங்களிலுள்ள மேலதிக மாவட்டப் பதிவாளர் அலுவலகங்களிலும் கணினி மயப்படுத்தப்பட்ட பதிவுச் சான்றிதழ்கள் வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது என்றும்-

இந்த நடவடிக்கை கிழக்கில் ஒரு மாதத்துக்குள் பூர்த்தி செய்யப்பட்டு மக்கள் கணினி மயப்படுத்தப்பட்ட பதிவுச் சான்றிதழ்களைப் பெறக் கூடிய வாய்ப்புக் கிடைக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை குறித்த மூன்று மாவட்டங்களிலுமுள்ள ஏனைய அலுவலகங்களில் தேசத்துக்கு மகுடம் கண்காட்சி திட்டத்தின் கீழ் குறித்த கணினி மயப்படுத்தப்பட்ட பதிவுச் சான்றிதழ் வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படவுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். (ச-30)

## திருமலை கடற்படை முகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ள மகனை மீட்டுத்தருமாறு தாய் நீதிமன்றில் கண்ணீர்!

திருகோணமலை,ஜூலை21

திருகோணமலை கடற்படை முகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தனது மகனை மீட்டுத்தர இனந்தெரியாத நபரொருவர் தொலைபேசி ஊடாக ஒரு கோடி ரூபா கப்பம் கோரினார் என்று காணாமற்போன தமிழ் இளைஞர் ஒருவரின் தாய் தெரிவித்தார். 2008 ஆம் ஆண்டு தொடக்கம் காணாமற்போயுள்ள டிலான் ராஜரத்னம் என்ற இளைஞரின் தாயாரே இவ்வாறு கூறியுள்ளார்.

சில வருடங்களுக்கு முன்னர் திருகோணமலையிலிருந்து கொழும்பு வந்தவேளை காணாமற்போன ஐந்து தமிழ் இளைஞர்கள் குறித்து இடம்பெற்ற நீதிமன்ற விசாரணையில் குறித்த தாய் சாட்சியமளித்தபோது கப்பம் கோரிய சம்பவத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

இளைஞர்கள் காணாமற்போன விடயம் குறித்து மேன்முறையீட்டு நீதிமன்றின் கட்டளைக்கு அமைய கொழும்பு நீதிவான் நீதிமன்றம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. குறித்து இளைஞர்களின் பெற்றோர் முன்வைத்துள்ள முறைப்பாட்டை அடுத்து இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

விசாரணையில் சாட்சியம் அளித்த டிலான் ராஜரத்னத்தின் தாய், 2008 செப்ரெம்பர் 17ஆம் திகதி முடிவெட்டுவதற்காக வெளியில் சென்ற வேளையில் தனது மகன் காணாமற்போனார் என்று கூறியுள்ளார். இது குறித்து பொலிஸார் மற்றும் மனித உரிமை ஆணைக் குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தனது மகனுடன் சேர்ந்து காணாமற்போன ரஜீவ் நாகநாதன் என்ற இளைஞரின் தாய்க்குத் தொலைபேசி அழைப்பை எடுத்த அண்ணாச்சி என்ற நபர், இலங்கை கடற்படையின் சம்பத் முனசிங்க மற்றும் ஹெட்டியாராச்சி ஆகியோர் காணாமற் போன இளைஞர்களைக் கைதுசெய்தனர் எனக் கூறினார் என சாட்சியாளரான தாய் தெரிவித்துள்ளார்.

கப்பம் கேட்ட சம்பவம் குறித்து இரகசியப் பொலிஸாரிடம் முறையிட்டபோதும் தனது மகன் கண்டுபிடித்துத் தரப்படவில்லை என்று அவர் குறிப்பிட்டார். திருகோணமலை முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தனது மகனை எப்படியாவது விடுவிக்கக்கோரி ஆணையிடுமாறு அவர் நீதிமன்றில் கண்ணீர் விட்டுக் கேட்டுக்கொண்டுள்ளார். (ச-சி)



கிழக்கில் வரலாற்றுச் சிறப்புமிக்க மட்டக்களப்பு அமிர்தகழி மாமாங்கேஸ்வரர் ஆடி அமாவாசை தீர்த்தத்திருவிழா நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை ஆயிரக்கணக்கான பக்தர்கள் புடைசூழ இடம்பெற்றது.

# மண்சரிவு அபாயம் குறித்து நுவரெலியாவில் எச்சரிக்கை

### மழைவீழ்ச்சி அதிகமானால் விபரீதம் ஏற்படலாம்

நுவரெலியா,ஜூலை21

நுவரெலியா மாவட்டத்தின் குறித்த சில பிரதேசங்களில் மணித்தியாலத்துக்கு 150 மில்லிமீற்றர் மழை தொடர்ந்து பெய்யுமாயின் மண்சரிவு அபாயம் ஏற்படும் என்று நுவரெலியா மாவட்ட இடர் முகாமைத்துவ பிரதிப் பணிப்பாளர் ஹரந்தன தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நுவரெலியா மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்டிருந்த கடுமையான வரட்சி மற்றும் காற்றுக் காரணமாக மண்வளம் சீரற்ற நிலையை அடைந்துள்ளது. ஒரு காலமும் இல்லாத அளவிற்கு குடிதண்ணீருக்குக் கூட தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இம்மாதம் அதிகமான மழை எதிர்பார்க்கப்படுவதனால் மணித்தியாலத்துக்கு 150 மில்லி மீற்றர் மழை தொடர்ந்து பெய்யுமாயின் பல இடங்களில் மண்சரிவு, வெள்ள அபாய நிலை ஏற்பட அதிக வாய்ப்பு இருப்பதாக ஆய்வு செய்யப்பட்டு கண்டறிப்பட்டுள்ளது.

இவ்வாறான இயற்கை அனர்த்தம், ஹங்குராங்கெத்த, பதியபெலல்ல, மகாவெவ மற்றும் கெரண்டிஎல்ல போன்ற சில இடங்களில் அதிகமாகவே காணப்படும்.

நுவரெலியா மாவட்ட பிரதேச செயலாளர் பிரிவில் இவ்வாறான இயற்கை இடரை முன்கூட்டியே தெரிந்து கொள்வதற்காக இயற்கை இடர் முகாமைத்துவப் பணியாளர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்ந்தும் ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## போலி நாணயத்தை வைப்பிலிடச் சென்றோர் கைது

கண்டியில் போலி நாணயத் தாள்களை வைத்திருந்த இருவரை கண்டி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர்களிடமிருந்து போலி ஆயிரம் ரூபா நாணய தாள்கள் இரண்டும் போலி ஐநூறு ரூபா நாணயத் தாள்கள் இரண்டும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்தப் பணத்தை இவர்கள் கண்டிப் பிரதேசத்திலுள்ள அரச வங்கி ஒன்றில் வைப்பிலிடச் சென்றுள்ளனர். அவ்வேளை சேவையில் இருந்த வங்கி ஊழியரினால் இவர்கள் இனங்காணப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ச)

# கூட்டமைப்பு–மு.கா. சேர்ந்து போட்டியிட்டிருந்தால் எமக்குச் சவாலே

### பிள்ளையான் கருத்து

மட்டக்களப்பு,ஜூலை21

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் இணைந்து போட்டியிட்டிருந்தால் அது ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு பெரும் சவாலாக அமைந்திருக்கும்.

எனினும் தற்போது இந்த இரு கட்சிகளும் தனித்தனியே போட்டியிடுவதால் அது ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கு ஒரு சவாலாக இல்லை என்று கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

மட்டக்களப்பிலுள்ள அவரது அலுவலகத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சி போட்டியிடுகின்றது. தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் சார்பில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய மூன்று மாவட்டங்களிலும் 12 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

மட்டக்களப்பில் 6 பேரும், அம்பாறையில் 3 பேரும், திருகோணமலையில் 3 பேரும் போட்டியிடுகின்றோம். இதில் மட்டக்களப்பு மாவட்டத்தில் குறைந்தது 5 ஆசனங்களையும் அம்பாறை மாவட்டத்தில் ஓர் ஆசனத்தையும், அதே போன்று திருகோணமலை மாவட்டத்தில் ஓர் ஆசனத்தையும் பெற்று தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்குள் அதிகமான ஆசனங்களைப் பெறும். இந்த நம்பிக்கையுடன் நாம் குறித்த தேர்தலில் இறங்கியுள்ளோம். ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்குள் அதிகமான ஆசனங்களைப் பெறும் கட்சிக்கே முதலமைச்சர் பதவி வழங்கப்படும். அந்தவகையில் தமிழ் மக்கள்விடுதலைப் புலிகள் கட்சி கூடுதலான ஆசனங்களைப் பெறும். அவ்வாறு பெற்றால் எமக்கே முதலமைச்சர் பதவியை அரசு தரும்.

கடந்த மாகாண சபையின் ஊடாக கிழக்கு மாகாணத்தில் கல்வி, சுகாதாரம், வாழ்வாதாரம் எனப் பல்வேறு அபிவிருத்திகளை மேற்கொண்டுள்ளோம். அடுத்த மாகாண சபையின் ஐந்தாண்டுகளிலே கிழக்கு மாகாணத்திலே உயர்ந்த கல்வி வளர்ச்சி, உற்பத்தித் துறையில் மாற்றத்தை ஏற்படுத்துதல், சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்தல், தனியார் முதலீட்டை ஊக்குவித்தல், இளைஞர், யுவதிகளுக்கான வேலை வாய்ப்புகளை அதிகரித்தல் போன்ற பல வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவுள்ளோம். .–என்றார். (ச-31)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# JCB வாடகைக்கு



யாழ், மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் காணிகள் துப்புரவு செய்தல், பழைய கட்டடங்கள் இடித்து அகற்றல், நிலம் மட்டப்படுத்தல் போன்ற வேலைகளை மேற்கொள்ளச் சிரமப்படுகிறீர்களா? குறைந்த கட்டணத்தில் நிறைந்த பயன்பெற அழையுங்கள்

**0774053637,**
**0756737207**

(20552) (15-14)

## கடைகள் வாடகைக்கு

ஞானம் கொட்டலுக்கு அருகில் மணிக்கூட்டு வீதியில் கடைகள் வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 071 805 2281

(20528)(5-6-7)

## கோயில் மணி விற்பனை

இந்தியாவில் இருந்து புதிதாக தருவிக்கப்பட்ட 250kg எடையுள்ள இந்துக் கோயிலுக்கான காண்டாமணி ஒன்று நீர்கொழும்பில் கைவசமுள்ளது.
மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்
**071 856 3646** (20520)(5-6-7)

## இணைய வடிவமைப்பாளர் தேவை (Web Desiner S.E.O)

இணைய வடிவமைப்பு சம்பந்தமான சகல விடயங்களும் (Google S.E.O) தெரிந்தவர்கள் தேவை. முழுநேரமும் வேலை செய்யலாம். ஆங்கில அறிவு முக்கியம்.
தொடர்பு:- www.tlimo.CA

(20694) (2-6-7)

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவகுடும்பத்தில் 1974 ஆம் ஆண்டில் பிறந்த, 8 இல் செவ்வாய் கிரகபாவம் 63/¼, ஆயிலிய நட்சத்திரம் உள்ள அரசசேவையில் பணிபுரியும் பட்டதாரி (BBA, MA) சகோதரிக்கு சகோதரன் தகுந்த மணமகனைத் தேடுகின்றார்.
தொடர்பு: 077 1744 581 + 41 7891 71874 (20609) (45.6.7)

## அன்னபூரணி அலங்கார மண்டப அறிவித்தல்

மேற்படி மண்டபத்திற்கு திருமணம், பூப்புனித நீராட்டுவிழா, அன்னதானம் போன்ற வைபவங்களுக்கு சைவ உணவு தயாரிப்பதில் அனுபவமுள்ளவர்கள் தேவைப்படுகின்றனர். அத்தோடு வீட்டுப் பணிப்பெண் ஒருவரும் தேவைப்படுகின்றார். ஆர்வம் உள்ளவர்கள் கீழ்க்காணும் முகவரிக்கு நேரிலோ, தொலைபேசி மூலமோ, கடித மூலமோ தொடர்பு கொள்ளவும்.

முகாமையாளர்,
அன்னபூரணி அலங்கார மண்டபம்,
380/13 வீரமாகாளி அம்மன் கோயிலடி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.பே.இல. 021 221 9044, 077 350 7275

(கி/1596) (5-6-7)


# நன்றி நவில்கின்றோம்

எமது அன்புத் தந்தை
அமரர் மத்தேசு தேவசகாயம் அவர்கள்

அமரத்துவம் அடைந்த செய்தி அறிந்து எமது இல்லத்துக்கு நேரில் வருகை தந்தும், தொலைபேசிமூலமும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், பத்திரிகை மூலமும் பிரசுரங்கள் மூலமும் எமது துயரில் பங்கேற்று அஞ்சலி செலுத்திய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள். அன்னாரின் இறுதிச் சடங்குகளிலும், ஊர் வலத்திலும் கலந்து கொண்டு அஞ்சலி செய்த அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், அதிபர், ஆசிரியர்கள், மாணவ, மாணவிகள், வர்த்தக நிறுவன உரிமையாளர்கள், பணியாளர்கள், நண்பர்கள், அயலவர்கள் உடனிருந்து உதவிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கச்சாய் வீதி,
கொடிகாமம். (20633) (2-6-7) - குடும்பத்தினர்.


## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள
10 ½ அடி.Freezer Lorry
விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 0772876422

(20562) (2-6-7)

## வான் விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள கயஸ் வான் 51-xxxx (செல்மொடல்) விற்பனைக்கு உண்டு. பவர் ஸ்ரேறிங், எலோவீல், நீள மொடல், கலர் வெள்ளை.
தொடர்பு:-0750420653

(20672) (2-6-7)

## இறைச்சிக்கோழி விற்பனை

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்யப்பட்டு விற்பனையாகின்றது.சுத்தம் செய்யப்பட்ட புறொயிலர் இறைச்சி ரூ.470 மட்டுமே தினமும் காலை 6 மணி தொடக்கம் மாலை 8 மணிவரை திறக்கப்படும்

நல்லூர் பாம் சென்ரர்
#19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர் யாழ்ப்பாணம் (18767)

## பணிப்பெண் தேவை

வீட்டு வேலைகள் அனைத்தும் செய்வதற்கு 30 - 40 வயதுக்குட்பட்ட பணிப்பெண் தேவை. தங்குமிட வசதியுண்டு.
தொடர்பு : 021 720 1103

(20600)(6-7-8)


# 31 ஆம் நாள் நினைவலைகள்



மலர்வு
11★ 02★ 1928

உதிர்வு
21★ 06★ 2012

## அமரர் ஆறுமுகம் இரத்தினம்

(இளைப்பாறிய ஊழியர் இலங்கை சீமெந்து கூட்டுத்தாபனம்)

மாதம் ஒன்று முடிந்ததுவோ ஐயா
உங்கள் மலர் முகம் பார்த்து
வழி நடத்தும் தலைவா? நீ
வான் சென்று மறைந்தனையோ?
எம் இல்லத்து இறைவனுக்கு எமது இதய
அஞ்சலிகளைக் காணிக்கையாக்குகின்றோம்.

இளவாலை வடக்கு,
உயனை. (கி/1595) (2-7-6) இ. அற்புதராசா (மகன்)

# மரண அறிவித்தல்
## கந்தையா கணேஸ்

அராலி கிழக்கு அம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், சம்பந்தபிள்ளையார் கோயிலடி ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கணேஸ் நேற்றுமுன்தினம் (19.07.2012) வியாழக்கிழமை காலமானார்.



அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - நாகமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - கைராசிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் மகேஸ்வரியின் அன்புக் கணவரும், பாக்கியம், காலஞ்சென்ற நல்லம்மா மற்றும் நேசம்மா, பரராஜசிங்கம், கமலா, பரமேஸ்வரி, காலஞ்சென்ற இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், கரன், தாரணி (ஜேர்மன்), ஜீவா (லண்டன்), ரூபி, மயூரன் (ஜேர்மன்), சுமன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிறிபதி (ஜேர்மன்), பிறேமினி (லண்டன்), சுகந்தி ஆகியோரின் மாமனும், சந்தோஷ், டிலானி, டினுசியா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சம்பந்த பிள்ளையார் கோயிலடி,
ஆனைக்கோட்டை, மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

(20649)(2-6-7)

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் கோணாவிலை வதிவிடமாகவும் கொண்ட கடந்த 24.06.2012 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

## திருமதி
## சிவனேசன் வசந்தி

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (22.07.2012) ஞாயிற்றுக்கிழமை காலை 6.00 மணியளவில் கீரிமலை தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் (24.07.2012) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்திலும் நடைபெறவுள்ளதால் தங்களை இந்நிகழ்வில் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

அன்னாரின் மரணச் செய்தி அறிந்து நேரில் வருகை தந்து ஆறுதல் மொழி கூறியவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டோருக்கும், தொலைபேசி மூலம் அறுதல் கூறியவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கோணாவில் சந்தி,
கிளிநொச்சி. (20640) (2-6-7) குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் காங்கிரஸுடன் முரண்பாடு ஏதுமில்லை

## சுகாதார அமைச்சர் கூறுகிறார்

கொழும்பு,ஜூலை21

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியுடன் முரண்பாடு இல்லை என்று சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

மஹாவலி கேந்திர நிலையத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிட்டாலும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சி என்ற ரீதியில் சிறந்த புரிந்துணர்வு காணப்படுகின்றது. தேர்தலில் தனித்துப் போட்டியிட்டாலும் புரிந்துணர்வின் அடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். சுதந்திரக் கூட்டமைப்பில் அதிக எண்ணிக்கையிலான கட்சிகள் அங்கம் வகிப்பதனால் வேட்பாளர்கள் தெரிவில் சிக்கல் நிலைமை ஏற்பட்டது என்று அவர் கூறினார்.

முஸ்லிம் காங்கிரஸ் கோரிய வேட்பாளர்களை ஒதுக்கீடு செய்ய முடியவில்லை. அதன் காரணமாகவே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் தனித்துப் போட்டியிடத் தீர்மானித்தது என்று அவர் குறிப்பிட்டார். இந்த விவகாரம் தொடர்பில் இரு தரப்பும் பேச்சு நடத்தி புரிந்துணர்வு அடிப்படையில் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. அரசின் அபிவிருத்தித் திட்டங்களினால் மக்கள் நன்மை அடைந்துள்ளனர். எனவே எதிர்வரும் தேர்தல்களில் ஆளும்கட்சி வெற்றியீட்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)



ஹயாட் ரெஜன்ஸி கொழும்பு ஹொட்டேல் நிர்மாணப் பணிகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ மற்றும் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோர் முன்னிலையில் கைச்சாத்திடப்பட்டது. இதன்போது ஹயாட் ரெஜன்ஸி கொழும்பு ஹொட்டேல் நிறுவனத் தலைவர் காமினி செனரத், முதலீட்டு சபையின் தலைவர் எம்.எம்.சி.பெர்னாண்டோ ஆகியோர் கையெழுத்திட்டனர்.

# தமிழர்களுக்கான உரிமைகளை அரசிடம் எதிர்பார்க்க முடியாது

## சுவாமிநாதன் எம்.பி. குற்றச்சாட்டு

தாக்குதலுக்குக் காரணமானவர்கள் மீது சட்டநடவடிக்கைகளை மேற்கொள்ளாது அவர்களை இடமாற்றம் செய்து மக்களை அரசு ஏமாற்றிவிட்டது.

கொழும்பு,ஜூலை21

சிறுபான்மை இன மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு செவிமடுக்காத இந்த அரசிடம் தமிழர்களுக்கான உரிமைகளை என்றும் எதிர்பார்க்க முடியாது என ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் டீ. எம். சுவாமிநாதன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதுகுறித்து நேற்று வெள்ளிக்கிழமை அவர் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

நிமலரூபன் தாக்கப்பட்ட நாள்முதல் பெற்றோர்களும், உறவினர்களும் கண்ணீருடன் வாழ்க்கையைக் கழித்து வரும் இந்தச் சந்தர்ப்பத்தில் அந்த இளைஞனின் உடலை அவரது குடும்பத்தினருக்கு வழங்கி சொந்த ஊரில் அடக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். தாக்குதலுக்குக் காரணமானவர்கள் மீது சட்டநடவடிக்கைகளை மேற்கொள்ளாது அவர்களை இடமாற்றம் செய்து மக்களை அரசு ஏமாற்றிவிட்டது.

சர்வதேசநாடுகள் சிறுபான்மை மக்களுக்கான அதிகாரப் பரவலாக்கலை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்று கோரிக்கை விடுத்து வருகின்ற இந்தச் சந்தர்ப்பத்தில் நிமலரூபனின் கொலை எதிர்காலத்தில் இலங்கை மீதான சர்வதேச அழுத்தம் மேலும் வலுப்பெறுவதற்கு காரணியாக அமையும்.

தமிழ்க் கைதிகளை உடனடியாக விடுவித்து அதிகாரப் பகிர்வை மேற்கொள்ள அரசு நடவடிக்கை எடுக்காவிடின் இலங்கை மேலும் பல சர்வதேச அழுத்தங்களை எதிர்காலத்தில் சந்திக்க நேரிடும்- என்றுள்ளது. (ச)

# இலங்கைப் படைகளுக்குப் பயிற்சி இந்தியாதான் முதலிடத்தில்

## உறவில் பாதிப்பு ஏதுமில்லை என்கிறார் கெஹலிய

கொழும்பு,ஜூலை21

இலங்கைப் படையினருக்கு பயிற்சிகளை வழங்கும் நாடுகளில் இந்தியாவே முதன்மை பெறுகின்றது. வருடாந்தம் ஆயிரம் முதல் ஆயிரத்து 500 படையினருக்கு இந்தியா பயிற்சியளிக்கின்றது என்று அமைச்சரவைப் பேச்சாளரும் தகவல் ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.



நேற்றுமுன்தினம் அமைச்சில் நடைபெற்ற வாராந்த செய்தியாளர் மாநாட்டில் அமைச்சரவைத் தீர்மானங்கள் குறித்து அவர் ஊடகங்களுக்கு விவரித்தார். இந்தச் சந்தர்ப்பத்தில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கும் அவர் பதிலளித்தார்.

இலங்கைப் படையினருக்கு இந்தியாவில் பயிற்சி அளிப்பதைத் தடைசெய்யும்படி தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா உட்பட சகல தமிழ்நாட்டுக் கட்சிகளும் கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளதுடன் ஆர்ப்பாட்டங்களையும் செய்து வருகின்றன. தமிழ்நாட்டில் இருந்து எட்டுப் படை அதிகாரிகள் வேறு இடங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர். இப்படியான நிலையில், இலங்கை-இந்திய அரசுகளுக்கான தொடர்புகள் பாதிக்கப்பட்டுள்ளனவா என அமைச்சரிடம் கேள்வி எழுப்பினர்.

இலங்கைப் படையினர் இந்தியா, சீனா, பாகிஸ்தான் எனப் பல நாடுகளில் பயிற்சிகளைப் பெறுகின்றனர். இவற்றுள் இந்தியாவே ஆகக்கூடுதலான படையினருக்குப் பயிற்சி வழங்குகின்றது. வருடாந்தம் ஆயிரம் முதல் ஆயிரத்து 500 படையினர் வரை இந்தியாவில் பயிற்சிகளைப் பெறுகின்றனர். எட்டு இலங்கைப் படையினர் வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டது தனிப்பட்ட விவகாரம்.

தென்னிந்தியக் கட்சியினர் இலங்கைக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்து வருகின்றனர். அவர்கள் அரசியல் சுயலாபம் கருதியே செயற்படுகின்றனர். ஒரு பிராந்தியத்தில்தானே எதிர்ப்பு. வழமைபோல் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவு உறுதியாகவே இருக்கின்றது என்று பதிலளித்தார் கெஹலிய ரம்புக்வெல. (ச-2)

# இலங்கைக்கு 120 ரயில்கள்

கொழும்பு,ஜூலை21

சீனாவின் கிழக்கு மாகாணத்திலிருந்து இலங்கைக்கு 120 ரயில் எஞ்ஜின்கள் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை அனுப்பப்பட்டுள்ளன.

இந்த ரயில்கள் ஒரு மணிநேரத்துக்குள் 120 கிலோ மீற்றர்கள் வரை பயணத்தை மேற்கொள்ளக் கூடியவை. இலங்கைக்கு மூன்றாவது தடவையாக இந்த ஏற்றுமதி கிடைக்கப்பெறுகிறது.

இலங்கைக்கு 2,000 ஆம் ஆண்டு தொடக்கம் 2008ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 180 ரயில்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# பேலியகொடையில் 7 வீடுகள் தீக்கிரை

கொழும்பு,ஜூலை21

கொழும்பு, பேலியகொடையில் உள்ள ஏழு வீடுகள் திடீர் தீப்பரவலுக்கு உள்ளாகியுள்ளன.

நேற்றுமுன்தினம் இரவு 8.15 மணிக்கு இந்தத் தீ விபத்து இடம்பெற்றுள்ளதாக பேலியகொடை பொலிஸார் தெரிவித்தனர். தீயணைப்புப் படையினர் மற்றும்பொலிஸார் இணைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

இந்தத் தீ விபத்தினால் உயிர்ச் சேதமோ, எவருக்கும் காயமோ ஏற்படவில்லை என்றுபொலிஸார்தெரிவித்தனர்.

இந்தத் தீ விபத்துக்கான காரணம் இதுவரையில் கண்டு பிடிக்கப்படவில்லை என்று பொலிஸார் கூறினார். (ச)

# கைதி நிமலரூபனின் இறப்பு குறித்த கேள்விக்கு சபையில் இடமளியாதீர்!

## பிரதி அமைச்சர் விஜிதமுனி பாய்ச்சல்

கொழும்பு, ஜூலை 21

தமிழ் அரசியல் கைதி நிமலரூபனின் இறப்பு தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித்குமார, நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை சபையில் கேள்வியெழுப்புகையில், இது பயங்கரவாத நடவடிக்கையுடன் தொடர்புபட்ட கைதி குறித்தான கேள்வி.

எனவே, இதற்குச் சந்தர்ப்பம் வழங்கக்கூடாது என்று பிரதிக் கல்வி அமைச்சர் விஜித் விஜிதமுனி சொய்சா தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் நடைபெற்ற வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அகிலவிராஜ் காரியவசம், சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு மற்றும் புனர்வாழ்வு அமைச்சரிடம் கேள்விகளை எழுப்பியிருந்தார்.

அந்தச் சமயத்தில் புனர்வாழ்வு, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரோ அல்லது அதன் பிரதி அமைச்சரோ சபையில் பிரசன்னமாகியிருக்கவில்லை.

இதனால், நாடாளுமன்ற உறுப்பினர் அகிலவிராஜ் எழுப்பியிருந்த கேள்விகளுக்கு ஆளுந்தரப்பு பிரதம கொறடாவும் அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன பதிலளித்தார்.

அத்துடன், அகிலவிராஜின் மேலதிக கேள்விகளுக்கு முன்னாள் சிறைச்சாலைகள் பிரதி அமைச்சராகப் பதவிவகித்தவர் என்ற அடிப்படையில் பிரதிக் கல்வி அமைச்சர் விஜித் விஜிதமுனி சொய்சா பதில் அளிப்பார் என்று கூறி அமர்ந்துவிட்டார்.

இதனையடுத்து, தனது [illegible] களை அகிலவிராஜ் பிரதிக் கல்வி அமைச்சரிடம் எழுப்பினார்.

வெலிக்கடைச் சிறையில் இருக்கின்ற 75 பெண் கைதிகளுக்கு இரண்டு குளியலறைகள்தான் இருக்கின்றன எனவும், அதனால் அவர்கள் பல இன்னல்களைச் சந்திக்கின்றனர் எனவும் இதன்போது அகிலவிராஜ் சுட்டிக்காட்டினார்.

அகிலவிராஜின் கேள்விகளைத் தொடர்ந்து இடைக் கேள்வியொன்றை எழுப்பிய நாடாளுமன்ற உறுப்பினர் [illegible] ஒரு கேள்வி கேட்கவேண்டும் என்று கோரிக்கை விடுத்து கேள்வி எழுப்பினார்.

தமிழ் அரசியல் கைதிகளின் பிரச்சினைகளுக்கு ஒருமாத காலத்துக்குள் நடவடிக்கை எடுக்கப்படும் என்று சபை முதல்வர் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா குறிப்பிட்டிருந்தார்.

ஆனால், தற்போது ஒரு மாதம்தான் கடந்துள்ளது. ஆனால் நடவடிக்கை எதுவுமில்லை.

இந்தநிலையில், வவுனியா, மஹர போன்ற சிறைச்சாலைகளில் சில சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

தமிழ்க் கைதி நிமலரூபனின் மரணம் குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன? இந்த விடயத்தில் அரசின் கடப்பாடு எது என்று அஜித்குமார உரையாற்றிக் கொண்டிருந்தபோது குறுக்கீடு செய்து எழும்பிய பிரதிக் கல்வி அமைச்சர் விஜித் விஜிதமுனி சொய்சா,

இவர் சாதாரண கைதி குறித்து கேள்வி எழுப்புவார் என எதிர்பார்த்தேன். ஆனால், பயங்கரவாத நடவடிக்கைகளுடன் தொடர்புடைய கைதிகள் குறித்து கேள்வி எழுப்புகிறார். இதற்குச் சந்தர்ப்பம் வழங்கக் கூடாது என்று கூறினார். (ச-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** திட்டமிட்ட செயற்பாடுகள், முக்கிய சந்திப்புகள் ஏற்படும். குடும்பத்தில் சந்தோஷம், கலகலப்பு காணப்படும். ஆரோக்கியக் குறைவு அகலும். சொத்துக்கள் வகையில் நிலவிய கவலைகள் விலகும். உத்தியோகத்தர்கள் மாற்றங்களால் ஏற்றங்கள் பெறலாம்.



**இடபம்:** நீங்கள் பிடிவாதமாகச் செயற்படுவதன் மூலம் சில நட்டங்களைச் சந்திக்க வாய்ப்பு உண்டு. சில நண்பர்களின் செயற்பாடுகள் யோசிக்க வைக்கும். பொருளாதார நிலைமை சீராக இருக்கும். தொழிலில் உற்பத்தி செலவுகளைக் குறைக்கத் திட்டமிடுவீர்கள்.



**மிதுனம்:** எதிர்பாராத உதவிகள் கிடைக்கப்பெறும். கடன் பிரச்சினைகளால் சங்கடங்களுக்கு ஆட்படலாம். தொழிலில், கவனக் குறைவுகளால் சில தவறுகளைச் சந்திக்க நேரலாம். பண விஷயங்களை மற்றவர்களை நம்பி ஒப்படைப்பதைத் தவிர்க்க வேண்டும். குழந்தைகளால் மருத்துவச் செலவு ஏற்படும்.



**கடகம்:** மனநிலையில் ஏற்படும் உற்சாகத்தால் கடினமான காரியங்களையும் எளிதாக முடிப்பீர்கள். பண ரீதியாக ஏற்பட்ட சச்சரவு ஒன்று, தீர்வுக்கு வரும். தொழிலில், புதிய முயற்சி ஒன்றுக்காக அலைச்சல் இருக்கும். பெண்கள் அனுசரித்துச் செல்வது நல்லது.



**சிங்கம்:** இல்லறத்துணையின் யோசனைகள் மனதுக்கு ஆறுதல் அளிக்கும். தொழில் தொடர்பான விவகாரங்களில் விழிப்புடன் செயற்படுதல் அவசியம். உத்தியோகத்தர்கள் முன்னேற்றமான பலன்களைக் காண்பர். வெளிநாட்டுத் தொடர்புகளால் அனுகூலம் உண்டு.



**கன்னி:** புதிய தொழில் முயற்சிகளில் சாதகமான பலன்களைக் காணலாம். அலுவலகப் பணிகளில் நிலவிய வெறுப்பு, விரக்தி அகலும். சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நிலவிய சச்சரவுகள் தீர்வுக்கு வரும்.

**நாளை**

ஆடி 07 ஞாயிற்றுக்கிழமை 22.07.2012
திதி: திருதியை மு.ப 09.29 வரை
நட்சத்திரம்: மகம், மரண பி.ப 12.54 வரை
சுபநேரம்: 09.02- 10.32 வரை
ராகு காலம்: 04.32- 06.02 வரை



**துலாம்:** மனதில் நினைத்த காரியம் ஒன்றை, நினைத்தபடி செய்து முடிப்பீர்கள். பாசமானவர்களின் சந்திப்பு ஏற்படும். எதிர்பாராத வரவுகள் ஏற்படும். கடன்கள் குறையும். வீட்டுச் செலவுகள் அதிகரிக்கும். அலுவலகப்பணிகளில் சிறு தவறு ஏற்படும். அது பெரிதாகிவிடுமோ என்ற பயம் நிலவும்.



**விருச்சிகம்:** மனரீதியான வெறுப்புகள் இருந்தபோதும் வெளிக்காட்டாமல் செயற்படுவீர்கள். எதிர்பாராத செலவுகள் ஏற்படும். தகுந்த ஓய்வுக்குப்பின் பணிகளை மேற்கொள்ளுதல் சிறப்பு. அலுவலகப் பணிகளில் மேலதிகாரிகள் கோபம் காட்டினாலும், நீங்கள் பொறுமையாக இருக்க வேண்டும்.



**தனுசு:** புதிய முதலீடுகள், பண விடயங்களில் எச்சரிக்கையுடன் நடந்து கொள்ளுங்கள். மேற்கொள்ளும் பணிகளை எளிதாக முடிக்க முக்கியஸ்தர்களின் தொடர்புகள் பயனுள்ளதாக இருக்கும். பழைய நட்பு ஒன்றின் சந்திப்பு உதவிகரமானதாக இருக்கும். நவீன உபகரணங்களின் சேர்க்கை இருக்கும்.



**மகரம்:** நீங்கள் எதிர்பாராதவிதமாக பிறர் காரியங்களுக்காக அலைய நேரிடலாம். மருத்துவச் செலவுகளுக்கும் வாய்ப்புகள் உண்டு. கவனம். ஓய்வு எடுக்க முற்பட்டாலும் எவராவது வந்து தொல்லை கொடுப்பர். குழந்தைகளின் கல்வி விடயங்களில் அக்கறை கொள்வீர்கள்.



**கும்பம்:** பணியில் பளு அதிகமாக இருந்த போதும், உற்சாகம் குறையாமல் கடமையாற்றுவீர்கள். இல்லறத்துணையின் நலனில் அக்கறை கொள்வீர்கள். தொழில் மற்றும் வியாபாரத்தில் விறுவிறுப்பு காணப்படும். அதிகாரிகளால் உருவான தொல்லைகள் அகலும்.



**மீனம்:** மதிப்பு மரியாதை அதிகரிக்கும். தொழிலில் அபிவிருத்தி ஏற்படும். மனைவியின் உடல் நலக்குறைவால் மனச்சங்கடங்களுக்கும், சிரமங்களுக்கும் ஆளாகலாம். அலுவலகப் பணிகளில் சக ஊழியரின் உதவி, சந்தோஷம் கொள்ளச் செய்யும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 5 | | | 8 | |
| | 8 | 5 | | 3 | . | 4 | 1 | |
| | 6 | | | 1 | 7 | 5 | | 9 |
| | | | | | | | 6 | 3 |
| 8 | | | 6 | 2 | 1 | | | 5 |
| 6 | 5 | | | | | 8 | | |
| 5 | | 8 | 3 | 6 | | | 7 | |
| | 7 | 2 | | 4 | | 6 | 3 | |
| | | | | 9 | | | | |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 4 | 3 | 6 | 8 | 5 | 1 | 2 | 7 |
| 8 | 5 | 1 | 2 | 3 | 7 | 4 | 6 | 9 |
| 2 | 7 | 6 | 9 | 4 | 1 | 8 | 3 | 5 |
| 7 | 1 | 8 | 3 | 5 | 6 | 2 | 9 | 4 |
| 3 | 6 | 4 | 8 | 2 | 9 | 5 | 7 | 1 |
| 5 | 2 | 9 | 1 | 7 | 4 | 3 | 8 | 6 |
| 4 | 8 | 5 | 7 | 9 | 2 | 6 | 1 | 3 |
| 6 | 9 | 2 | 5 | 1 | 3 | 7 | 4 | 8 |
| 1 | 3 | 7 | 4 | 6 | 8 | 9 | 5 | 2 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.




உ
சிவமயம்

சாவகச்சேரி - கல்வயல்

புலுட்டையன் பிள்ளையார் என அழைக்கப்பெறும்
திருவருள்மிகு ஆயிலடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில்
புதிதாக அமைக்கப்பட்ட திராவிட மரபும் நவீன கலைநுட்பத்துடனும் கூடிய
சித்திர சிற்பத்தேர்

**வெள்ளோட்ட விழா**

காலம்: இன்று (21.07.2012) சனிக்கிழமை பிற்பகல் 2 மணி

நிர்மாணிப்பு:
ஸ்தபதி விஷ்வப் பிரம்மஸ்ரீ சிந்தனைச் சிற்பி கி. கலாமோகன் குழுவினர்.

விநாயகப் பெருமான் அடியார்கள் வெள்ளோட்ட விழாக்கண்டு
அருள்பெற்று ஏகும் வண்ணம் அழைக்கின்றோம்.



**வாழ்த்துச்செய்தி**

சைவமும் தமிழும் செழித்தோங்கும் சீர்மிகு பதிகளுள் கல்வயலும் ஒன்று. இங்குள்ளவர்கள் விநாயக வழிபாட்டில் இன்பங் காண்பவர்கள். கல்வயலில் விநாயகருக்கென நான்கு ஆலயங்கள் அமைந்திருக்கின்றன. அவற்றுள் ஒன்று புலுட்டையன் பிள்ளையார் என அழைக்கப்படும் ஆயிலடி வீரகத்தி விநாயகர் ஆலயம். மற்றையவை கல்வயல் வேதவன விநாயகர் ஆலயம், பெருங்குளம் அம்பலவாண வீரகத்தி விநாயகர் ஆலயம், சித்தன் மாவடிப் பிள்ளையார் ஆலயம் என்பனவாம்.

குறுகிய காலத்தில் விநாயகர் திருவருளால் பெருவளர்ச்சி கண்டது ஆயிலடி வீரகத்தி விநாயகர் ஆலயம் ஆகும். இந்தக் கோயிலின் தர்மபரிபாலரான திரு. சி. விவேகானந்தன் வெளிநாட்டில் வாழ்ந்த போதிலும் தற்போது ஆலய வளர்ச்சியை நாடி நாடு திரும்பி வந்து ஆலயத்தில் தங்கியிருந்து பெருந்தொண்டாற்றி வருகின்றார் என அறியும் போது இவ்வாலய வளர்ச்சிக்கான இயக்க சக்தியின் மகிமை புலப்படுகின்றது.

இந்தப் பூவுலகில் உள்ள மாந்தர் யாவருக்கும் கடமையாவன என நான்கு விடயங்களை பாரதியார் குறித்துக் காட்டுகின்றார்

கடமையாவன தன்னைக் கட்டுதல்
பிறர் துயர் தீர்த்தல் பிறர் நலம் வேண்டுதல்
விநாயக தேவனாய் வேலுடைக் குமரனாய்
நாராயணனாய் நதிச் சடை முடியனாய்
பிற நாட்டிருப்போர் பெயர்பல கூறி
அல்லா யெஹோவா எனத்தொழு தன்புறும்
தேவருந் தானாய் திருமகள் பாரதி
உமையெனுந் தேவியர் உகந்தவான் பொருளாய்
உலகெலாங் காக்கும் ஒருவனைப் போற்றுதல்

உலகெலாங் காக்கும் ஒப்பற்றவனாக் விளங்குகின்ற விநாயகக் கடவுள் கல்வயல் ஆயிலடியில் வீற்றிருக்கிறார். அவரது திருத்தேர் வெள்ளோட்டம் சிறப்புற்று அமையவும் விநாயகரது கருணை மழை பூவுலகெங்கும் குளிர்ச்சியை உண்டாக்கவும் பிரார்த்திக்கின்றேன். இந்த ஆலயத்தின் சித்திரத் தேரினைப் புதிய பாணியில் அழகுற அமைத்துத் தந்த சிற்ப வித்தகர் திரு. கி. கலாமோகன் அவர்களையும் பாராட்டி வாழ்த்துவதுடன் அவரது பணி மேலும் தொடரவேண்டும் எனவும் [illegible]

பேராசிரியர் வசந்தி அரசரட்ணம், துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்

**வாழ்த்துச் செய்தி**

சிவபூமி எனத் திருமூலர் சிறப்பித்த இலங்கையின் வடபால் சாவகச்சேரியின் மேற்கே, முக்கனி மரங்களும் தென்னையும் பனையும் செந்நெல்லும் சிறந்தோங்கும் கல்வயல் பதியின் மத்தியில் இனிதிலங்குவது புலுட்டையன் பிள்ளையார் என அழைக்கப்படும் ஆயிலடி வீரகத்தி விநாயகர் ஆலயம். திறனறிந்து அருள்நல்கும் வீரகத்தி விநாயகர் ஆலய புதிய சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்க எனக்குக் கிடைத்த இச்சந்தர்ப்பம் பெரும் பேறாகும்.

"தேர்" என்பது பெயரும் வினையுமாய் நிற்கும் பண்புடைச் சொல்லாகும். தேர்ந்து கொள் என்ற வினையடி வாழ்க்கையின் படிகளைத் தேர்ந்துகொள் எனும் தத்துவத்தை உணர்த்தி நிற்கின்றது. தேரோட்டம் என்பது ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மல நீக்கத்தின் வெளிப்பாடே எனலாம். இத்தகைய தேர்த்திருவிழா இறைவன் முப்புரம் எரிக்கப் புறப்பட்டதன் நினைவாக அழித்தல் தொழிலை நினைவு படுத்துவதாக ஆலயங்களில் வருடம் தோறும் கொண்டாடப்பட்டு வருகின்றது.

இவ்வாயலத்தின் தேர் வேறு ஆலயங்களின் தேர் அமைப்புக்களை விடச் சற்று வித்தியாசமானது. திராவிடக்கலை மரபின் உன்னத நிலைக்குச் சான்று பகரும் இத்தேர் தென்மராட்சியின் புகழ்பூத்த சிற்பக் கலைஞன் திரு. கிருஷ்ணபிள்ளை கலாமோகன் அவர்களால் ஆசாரபூர்வமாக அமைக்கப்பட்டிருக்கின்றது. இவர் சுமார் பத்துக்கும் மேற்பட்ட தேர்களை தனது சிற்பக் கைவண்ணத்தால் உருவாக்கியவர். அவருடைய கலைத்திறன் மலேசியா வரை பரந்திருக்கின்றது. சிற்பத்திறனால் பல பட்டங்களைப் பெற்றிருக்கும் திரு.கி. கலாமோகன் அவர்களின் கலைப்பயணம் மேன்மையுற இறைகடாட்ஷத்தை வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

இத்தேர் உருவாக்கத்தில் அயராதுழைத்து வருபவர் ஆலய பரிபாலகர் திரு. சி. விவேகானந்தன் அவர்கள். அவர்களது அரும்பணி போற்றுதற்குரியதாகும். இக்கைங்கரியத்தில் அவரோடு அவர்தம் குடும்பத்தினரும் இணைந்து நிற்பது பாராட்டுக்கும் வாழ்த்துக்கும் உரியதாகும்.

ஐந்துகரத்தோடும் ஆனைமுகத்தோடும் அமர்ந்திருந்து அருள்புரியும் கல்வயல் ஆயிலடி வீரகத்தி விநாயகரின் திருத்தேர் வெள்ளோட்ட விழா நிறைவாக நடைபெற இறைஞ்சி அனைத்துத் தரப்பினர்க் கும் விநாயகர் அருள்வேண்டி பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

திருமதி அ. சாந்தசீலன், பிரதேச செயலர், தென்மராட்சி

**தர்மகர்த்தாவும் உபயகாரரும்.**
கல்வயல், சாவகச்சேரி.

(20519)(45-6-7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




5மாவட்டங்களிலும் பெரும் பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

## கல்வி மேம்பாடு குறித்து கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜூலை 21

வடமாகாண கல்வி அபிவிருத்திக் குழுவின் ஏற்பாட்டில் வடமாகாண கல்வி மேம்பாடு தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நடைபெறவுள்ளது.

இதற்கமைவாக நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ். நூலக கேட்போர் கூடத்திலும், நாளைமறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு வேலணை மத்திய மகாவித்தியாலயத்திலும் கலந்துரையாடல்கள் நடைபெறவுள்ளன.

வடமாகாணகல்வி அமைச்சின் அனுசரணையுடன் நடைபெறவுள்ள இந்தக் கலந்துரையாடலில் கல்வி ஆர்வலர்கள் அனைவரும் கலந்துகொள்ளலாமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(ம-14)

# நாடெங்கும் உள்ள சிறைகளில் 800 தூக்குத் தண்டனைக் கைதிகள்

## 'அலுகோசு' நேர்முகமும் நடக்கிறது என்கிறார் கெஹலிய

கொழும்பு, ஜூலை 21

நாடெங்கிலும் உள்ள சிறைச்சாலைகளில் 800 தூக்குத் தண்டனைக் கைதிகள் இருக்கின்றனர் என்று அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல கூறுகின்றார். இவர்களைத் தூக்கிலிடுவதற்கான ''அலுகோசு'' களை நியமிப்பதற்கான நேர்முகப்பரீட்சைகள் நடைபெறுகின்றன என்று தெரிவித்தார். ஆனால் இந்த மரணதண்டனைகள் நிறைவேற்றப்படும் என்பதை திட்டவட்டமாகக் கூறத் தயங்குகின்றார்.

ஊடகத்துறை அமைச்சில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற வாராந்த செய்தியாளர் மாநாட்டில், நிறைவேற்றப்படாமல் இருக்கும் தூக்குத் தண்டனைகள் தொடர்பாகவும், அதிகரித்து வரும் குற்றச்செயல்கள் தொடர்பாகவும் அமைச்சர் கெஹலியவிடம் கேள்விகள் எழுப்பப்பட்டன. மரண தண்டனை விதிக்கப்பட்ட கைதிகள் சிறைகளில் இருக்கின்றனர். இவர்களுக்கு விதிக்கப்பட்ட தூக்குத் தண்டனைகள் நிறைவேற்றப்படவில்லை.

**தூக்குத் தண்டனை விதிக்கப் பட்டவர்களுக்கு அந்தத் தண்டனை நிறைவேற்றப்படவேண்டும்.**

அதேவேளை கொலை, கொள்ளை, வன்புணர்வு, சிறுவர் துஷ்பிரயோகம், போதைப் பொருள் கடத்தல் என்பன அதிகரித்துள்ளன. மரண தண்டனைகள் நிறைவேற்றப்பட்டால் இவ்வாறான குற்றச் செயல்கள் ஓரளவாவது குறையும் அல்லவா? என்று கேள்வி எழுப்பப்பட்டது.

''தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டவர்களுக்கு அந்தத் தண்டனை நிறைவேற்றப்படவேண்டும் என்பதில் அமைச்சர்கள் உறுப்பினர்கள் மத்தியில் மாற்றுக் கருத்துக்கே இடமில்லை.

குறிப்பாக வன்புணர்வு மற்றும் சிறுவர் துஷ்பிரயோகம், போதைப்பொருள் கடத்தல் போன்ற செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு கட்டாயம் தூக்குத் தண்டனை நிறைவேற்றப்படவேண்டும்.

ஆனால் கடந்த 30 வருடங்களாக மரண தண்டனையை நிறைவேற்றுவதற்கான கட்டளையில் எந்தத் தலைவரும் கைச்சாத்திடவில்லை. இதுதான் தடங்கலுக்கு காரணம்- என்றார். (ச-2)

# கலை இலக்கியக் களத்தின் வெள்ளிவிழா இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 21

தெல்லிப்பழை கலை இலக்கிய களத்தின் வெள்ளிவிழா இன்று சனிக்கிழமை காலை 9மணிக்கு இராமநாதன் கல்லூரி அருணாசல மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வு முன்னாள் துணைவேந்தரும், கலை இலக்கியக் களப்போஷகருமான பேராசிரியர் நா. சண்முகலிங்கன் தலைமையில் நடைபெறும்.

நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சின் பிரதிச்செயலர் ப. விக்னேஸ்வரனும், கௌரவ விருந்தினர்களாக வலி. வடக்குப் பிரதேச செயலர் க.ஸ்ரீமோகனனும், ஓய்வு நிலை அதிபர் திருமதி சி. அனந்தசயனனும் சிறப்புவிருந்தினர்களாக வலிகாமம் கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ. இராஜேந்திரன், யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி கி. விசாகரூபனும் கலந்துகொள்வர்.

வாழ்த்துரையை கலாநிதி ஆறு.திருமுருகன் நிகழ்த்துவார்.

தொடர்ந்து கலை இலக்கியமும் கடந்த காலமும், ஈழத்துத் தமிழ் புலவர் வரலாறு, வாழ்வியலும் நூலகமும், சிவகாமி கவிதை நூல் ஆகியவற்றின் அறிமுக உரைகளும் நடைபெறும். இந்த நிகழ்வில் புலவர்மணி வை. சிற்றம்பலம், புலவர் ம.பார் வதிநாதசிவம் ஆகி யோர் கௌரவிக்கப்பட வுள்ளனர். இந்த நிகழ் வில் கலை இலக்கியக் களத்தின் வெள்ளிவிழா போட்டிக்கான பரி சளிப்பு நிகழ்வும் நடை பெறவுள்ளது. (ம-3)

# சமய சந்நிதிகளில்

குருநகர், ஜூலை 21

குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தின் வருடாந்த திருவிழாவுக்கான ஆயத்த வழிபாடுகள் கடந்த திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தினமும் மாலையில் நடைபெற்று வரும் நவநாள் ஆராதனைகளைத் தொடர்ந்து எதிர்வரும் செவ்வாய்க்கிழமை மாலை நற்கருணைநாதர் ஆராதனையும், மறுநாள் புதன்கிழமை காலை திருவிழாத் திருப்பலியும் தொடர்ந்து மாலை புனிதரின் திருச்சொரூப பவனியும் ஆசீரும் இடம்பெறும். (3-51)

* * *

வடமராட்சி, ஜூலை 21

அல்வாய் வேவிலந்தை முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா கடந்த புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

15 நாள்கள் நடைபெறும் இந்தப் பெருந்திருவிழாவில் எதிர்வரும் 29ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை வசந்தோற்சவமும் 30ஆம் திகதி திங்கட்கிழமை மாலை வேட்டை, சப்பரத் திருவிழாவும், 31 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் புதன்கிழமை காலை 6 மணிக்கு சமுத்திரத் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (3-8)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 21

கெருடாவில், கோட்டைச்சீமா முத்துமாரி அம்மன் ஆலயத்தின் ஆடிப்பூரத் திருவிழா நாளை மறுதினம் திங்கட் கிழமை நடைபெறவுள்ளது. அன்றையதினம் விசேட அபி ஷேக ஆராதனைகள் இடம்பெற்று சுவாமி வீதியுலா வருவார்.(3-253)

* * *

யாழ்ப்பாணம் ஜூலை 21

வரணி வடக்கு கண்ணகை அம்மன் ஆலயத்தில் ஆடிப் பூரத் திருவிழா நாளைமறுதினம் திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. (3-253)

* * *

யாழ்ப்பாணம் ஜூலை 21

வட்டுக்கோட்டை தெக்கணக்காய் கண்ணகி ஆலய, கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலய ஆடிப்பூர மஹா சங்காபிஷேகம் நாளை மறுதினம் திங்கட் கிழமை நடைபெறவுள்ளது. (3)

* * *

தென்மராட்சி, ஜூலை 21

சாவகச்சேரி கல்வயல் ஆயிலடி வீரகத்தி விநாயகர் ஆயலத்துக்கு 1.2 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட சித்திர சிற்பத்தேர் வெள்ளோட்டம் இன்று பி.ப. 2.00 மணிக்கு நடைபெறவுள்ளது. ஜோதிடமணி பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வர சர்மா தலைமையில் நடைபெறும் வெள்ளோட்ட நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் செல்வி வசந்தி அரசரத்தினம் சிற்பியான கலாபூஷணம் சி.கலாமோகனை கௌரவிக்கவுள்ளார். (3-9)

**காணி விற்பனை**

கொக்குவில், பொற்பதி வீதி, உடையார் லேனில் 100m தொலைவில் உள்ள காணி (பரப்பு 5) விற்பனைக்குண்டு. பகுதிகளாகவும் பிரித்துக் கொடுக்கப்படும்.
தொடர்பு: 077 316 1822, 077 046 3841
(20571)(5-6-7)

உ
ஸ்ரீராம ஜெயம்

**வரலட்சுமி நோன்பு**





யாழ். வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்
வரலட்சுமி நோன்பு உற்சவம் எதிர்வரும் 27.07.2012 வெள்ளிக்கிழமை
காலை 7 மணிக்கு வெகு சிறப்பாக நடைபெற விருப்பதால்
நோன்பு நூல் பெறும் அன்பர்கள் முன் கூட்டியே பதிவுகளைச் செய்து கடைசி நேர சிரமங்களைத் தவிர்த்துக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.
ஆதீன மகாசபை
(சி/1515) (6.7.45)

**9ஆம் ஆண்டில் ஒளிரும் நினைவுகள்**

தூயவளே! துதிக்கின்றோம்!



மண்ணில் 04.09.1943
விண்ணில் 21.07.2003

**திருமதி மகேஸ்வரி குஞ்சிதபாதம்**

திதி: அபரபக்க சப்தமி (08.08.2012)

அன்பை அடி நாதமாக
அவனிதனில் எமக்களித்து
துன்பச் சுமை துணித்த
தூயவளே! துதிக்கின்றோம்!

பிரிவுத் துயரால் பெருநோயுறும்
துணைவன், பிள்ளைகள்,
மருகன், மருகிகள்,
பேரர்கள்- விதுரன், திவ்யன்,
நித்யன்,சௌமியன்

சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.
(ச/1579)(5-6-7)

**வீடு வாடகைக்கு**

பெந்திக்கோஸ் சந்தியிலிருந்து புங்கன்குளம் சந்திக்கு இடையில் (தியாகராஜா படிப்பகத்திற்கு அருகில்) கண்டி வீதியில் வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 11.00- 4.00 மணி வரை
077 396 5369 (20595)(5-6-7)

**மணமக்கள் தேவை**

யாழ்.இந்து கௌரவகுடும்பம் கனடா நாட்டில் குடியுரிமையுடையவர் 1982, அனுசம் 7 இல் செவ்வாய் 19 ¾ கிரகபாவம் 5'6'' GCE A/L மணமகனுக்கு அழகான மணப்பெண் தேவை. யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1975 அத்தம் கன்னிராசி 12 இல் செவ்வாய் 24 கிரகபாவம் 5'5'' மாநிறம் GCE A/L பிரான்ஸ் நாட்டில் குடியுரிமையுடைய மணப்பெண்ணுக்கு மணமகன் தேவை.
சிவாலயா சர்வதேச திருமண நிலையம்,
42/11, இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி. யாழ்ப்பாணம்.
0779694009 வவுனியா கிளை:- 024 4907956 (20516)(2-6-7)

**வேலைவாய்ப்பு**

விற்பனைத் துறை சார்ந்த கம்பனிக்கு ஆண், பெண் இருபாலாரும் A/L தகுதியுடன் வயது எல்லை (23-45) (வடமராட்சி, தென்மராட்சி பகுதியைச் சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை)
[illegible]
தொடர்பு:077 657 1968

**சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான பணியகத்தினால் நடத்தப்படும் (CPR)**

**இவ்வருட A/L பரீட்சை எழுதும் உயர்தர மாணவர்களுக்கு இலவச கருத்தரங்கு**

**அரசியல் விஞ்ஞானம்**
காலம்: 22.07.2012 - 9.30 A.M
இடம்: அகவொளி மண்டபம் (யாழ்.மரியன்னை பேராலயம்)
ஆசிரியர்: திரு-எஸ்-கோகுலன்

**நாடகமும் அரங்கியலும்**
காலம்: 23.07.2012 - 8.00 A.M
இடம்: பொருளியற் கல்லூரி, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.
ஆசிரியர்: திரு-P-கணேஸ்

**புவியியல்**
காலம்: 24.07.2012 - 8.00 A.M
இடம்: பொருளியற் கல்லூரி, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.
ஆசிரியர்: திரு-P.S-குமரன்
(20513)(5-6-7)

குறிப்பு: இலவசக் கையேடுகள் வழங்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இரண்டாவது பிறந்ததின வாழ்த்துக்கள்

உதயகுமார் - சுதா
தம்பதியரின்
செல்வப் புதல்வி ராகவி
தனது இரண்டாவது
பிறந்த தினத்தை
(18.07.2012)
இன்று 21.07.2012 இல் லண்டனில்
உள்ள தனது இல்லத்தில்
வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.
செல்வி ராகவி பல்கலைகளும் பெற்று
நலமுடன் நீடூழி வாழ்வதற்கு எல்லாம்
வல்ல சாவகச்சேரி வடக்கு ஆதிசிவ
வீரபத்திரரின் அருள் வேண்டிப்
பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள்:-
அப்பப்பா - சி.விக்கினராஜா ஐயர்
அப்பம்மா - வி.அன்னலட்சுமி
பெரியப்பா குடும்பம்
சித்தப்பா குடும்பம்
மாமா, மாமி - திருகோணமலை
மாமா, மாமி - கனடா
(18122) (2-6-7)

# தென்மராட்சி கலைமன்றம்

## சிவன் கோயில் வீதி, சாவகச்சேரி

கலைமன்றின் கலாசார மண்டபத்தில் திருமண வைபவங்கள், பிற வைபவங்கள் நடத்துவதற்கு முன்பதிவு செய்வதற்கு மன்றின் தலைவர் திரு.க.மோகனராஜசிங்கம் (விவாகப் பதிவாளர்) அவர்களுடன் தொடர்பு கொள்ளவும். (சகல ஏற்பாடுகளும் செய்து கொடுக்கப்படும்)
தொ.பே.:- 0773160786. செயலாளர். (F/9342) (2-6-7)

# மணமகள் தேவை

★ 82 இல் பிறந்த 7 இல் செவ்வாய் 39 ½ பாவமுடைய லண்டன் B.Scஎஞ்சினியருக்கு B.Sc எஞ்சினியர் மணமகள் தேவை.
★ 82 இல் பிறந்த செவ்வாய் பாவம் இல்லாமல் 11 ½ பாவமுடைய ஆஸ்திரேலியா எஞ்சினியருக்கு படித்த மணமகள் தேவை.
★ 76 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 50 பாவமுடைய லண்டன் பிரஜா உரிமை பெற்ற மண மகனுக்கு படித்த மணமகள் தேவை.
★76 இல் பிறந்த 7 இல் செவ்வாய் 22 ½ பாவமுடைய கனடா பிரஜா உரிமை பெற்ற மணமகன் வந்துள்ளார். படித்த அழகான மணமகள் தேவை.
★85 இல் பிறந்த சூரியனும் செவ்வாயும் உள்ள 24 பாவமுடைய ஜேர்மன் பிரஜா உரிமைபெற்ற மணமகனுக்கு படித்த அழகான மணமகள் தேவை.
★83 இல் பிறந்த சூரியனும் செவ்வாயும் உள்ள 18 ¾ பாவமுடைய கனடா பிரஜா உரிமை பெற்ற மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.
★80 இல் பிறந்த 8 இல் செவ்வாய் 115 பாவமுடைய கனடா பிரஜாவுரிமை பெற்ற மணமகனுக்கு படித்த அழகான மணமகள் தேவை.
★78 இல் பிறந்த 4 இல் செவ்வாய் 39 ½ பாவமுடைய 6 அடி உயரமுள்ள கனடா பிரஜாவுரிமை பெற்ற மணமகனுக்கு 5 அடி 6 அங்குலத்தில் படித்த அழகான மணமகள் தேவை. (20534) (2-6-7)
தொடர்பு : கமலக்கண்ணன் திருமணசேவை இல. 320, கோயில் வீதி, நல்லூர். 077 6070862

# மரண அறிவித்தல்

## அம்பலவாணர் சதானந்தன்



புத்தூர் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அம்பலவாணர் சதானந்தன் நேற்று (20.07.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் (சட்டத்தரணி)-புவனேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான குமாரசாமி-நவமணி தம்பதியரின் அன்பு மருமகனும், பொன்மலரின் அன்புக் கணவரும், நிருஜாவின் அன்புத் தந்தையும், சரோஜினிதேவி (ஆஸ்திரேலியா), சர்வானந்தன் (லண்டன்), விபுலானந்தன் (கனடா), இந்திராதேவி (ஜேர்மனி), சுலோசனாதேவி (புத்தூர்), சத்தியானந்தன் (கொழும்பு), காலஞ்சென்ற கிருபானந்தன் மற்றும் சுமித்திராதேவி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்ற இராசதுரை மற்றும், பிறேமலதா, செல்வலதா, விஜயகுமார், காலஞ்சென்ற விஜயரட்ணம் மற்றும் வசந்தி, உதயகுமார் காலஞ்சென்ற அருந்தவமலர் மற்றும் தட்சணாமூர்த்தி, இராசமலர், சிவானந்தன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (22.07.2012) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக அந்திரானை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புத்தூர் கிழக்கு,
புத்தூர்.

தகவல்:
குடும்பத்தினர். (20642)(5-6-7)

# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் ஐயனார் கோயில் வீதியில்(Dr.கெங்காதரன் வைத்தியசாலையிலிருந்து 100 யார் தொலைவில்) இரண்டு பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 0777448691, 021 3216389
(20639) (2-6-7)

# வீடு, வளவு விற்பனைக்கு

வடமராட்சி கட்டை
கோவிக்கோவிற்பற்று வல்லிபுரக்குறிச்சி இறையில் ''முத்தானவயல்'' நெற்பரப்பு 3 குளி 1 ½ விஸ்திரணமுடைய வீடு, வளவு கிணற்றுடன் விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு:- 0777670464
(20515) (2-6-7)

# உடனடி வேலைவாய்ப்பு

KORD அச்சு இயந்திர இயக்குநர் தேவை.
அனுபவம், திறமைக்கு ஏற்ப ரூ.20,000/= மேல் வழங்கப்படும்.
பிள்ளையார் அச்சகம்,
நல்லூர்.
தொ.பே.:- 0773901877
(F/1597) (2-6-7)

# மரண அறிவித்தல்

## திருமதி முரளிதரன் ஆன்கலிஸ்ரா (லதா)

(முன்னாள் சம்பத்திரிசியார் கல்லூரி ஆசிரியை)



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், செம்பிகலட்டி, இடைக்காடு, அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி முரளி தரன் ஆன்கலிஸ்ரா நேற்றுமுன்தினம் (19.07.2012) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை- றெஜினா தம்பதியரின் கடைசி மகளும், முரளிதரனின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற நடேசன் மற்றும் சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் சஜித்தின் அன்புத் தாயும், றோய், பற்றிமா, அனிற்றா, காலஞ்சென்ற மரினாடொறின் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.07.2012) சனிக்கிழமை இடைக்காடு அச்சுவேலியிலுள்ள அவரது இல்லத்தில் பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்று 3 மணிக்கு புனித மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் யாழ். கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
ந. முரளிதரன் (கணவர்),
அ. றோய் (அண்ணா)

அச்சுவேலி, இடைக்காடு.
(20641) (45.6.7)

# Point Pedro Traders இன்

## இன்னுமொரு தரமான சேவை

# P.P.T EXPRESS

## Colombo - Jaffna



இலங்கையில் முதல் முறையாக முதல் தரமான

அதி நவீன சொகுசு வசதிகள்

**Fully Adjustable & Side way Adjustable Seats**

**Wi-Fi (Internet), Video, Mobile Charging**
**Mic, Security Camera, Coolbox (Fridge).**

Point Pedro Traders இன் பிற சேவைகள்
**Parcel Service, Transport Service**

**COLOMBO**
No. 16, Sangamitha Mw, Colombo- 13.
Tel : 011 4375790, 077 5755175

**JAFFNA**
No. 183, K.K.S. Road, Jaffna.
Tel : 021 4923240, 077 5731318

இன்று முதல்
சேவை ஆரம்பம்
ஆசனப்பதிவுகளுக்கு
முந்துங்கள்

(20543)(5-6-7)

www.pptxpress.com

# சரவணா ரெக்ஸ்



பிரமாண்டமான ஆடித்தள்ளுபடி

(விடுமுறை நாள்களிலும் மலிவு விற்பனை நடைபெறும்)

இடம் : சரவணா ரெக்ஸ் (களஞ்சியசாலை)
சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்
(கெங்காதரன் மருத்துவமனை அருகில்)
காலம் : 07.07.2012 முதல்
நேரம் : காலை 9.00 மணி முதல் இரவு 7 மணி வரை
(சி/1413)(2-6-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த (21.06.2012) வியாழக்கிழமை
சிவபதமடைந்த எமது அன்புச் சகோதரன்
**அமரர் கனகசபை சோமசுந்தரம்**
அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (21.07.2012) சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அமரரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம். அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்ட அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

2 ஆம் வட்டாரம்,
நயினாதீவு.
தொ.பே.021 3213714

திருமதி ருக்மணி பாலசுந்தரம்
*(சகோதரி) இளைப்பாறிய ஆசிரியர்.*

(20653) (2-6-7)

# இலவச மருத்துவ முகாம்

உரும்பிராய் கிழக்கு செல்லப்பா சனசமூக நிலையமும் விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்தும் உடலியல் நோய் தொடர்பான பரிசோதனைகளும் மருந்து வழங்கலும் நாளை காலை 8 மணிமுதல் பி.ப. 1 மணிவரை செல்லப்பா வாசிகசாலையில் நடைபெறவுள்ளது. உரும்பிராய் வாழ் புலம்பெயர் மக்களினதும் ஆதரவுடன் நடைபெறுகின்ற இந்த பரிசோதனை முகாமில் யாழ்.போதனா வைத்தியசாலையின் பிரபல வைத்தியர்கள் கலந்து கொண்டு பரிசோதனைகளை மேற்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. எனவே இந்த மருத்துவ முகாமில் உரும்பிராய் வாழ் மக்கள் அனைவரையும் கலந்துகொண்டு பயன் பெறுமாறு சனசமூக நிலைய நிர்வாகத்தினர் கேட்டுள்ளனர். (16)

# இலவசக் கல்விக் கருத்தரங்கு

இணுவில் பொதுநூலக சனசமூக நிலையம் நடத்தும் க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான இலவசக் கல்விக் கருத்தரங்கு, இணுவில் பொதுநூலக கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இன்று முற்பகல் 10 மணிக்கு அரசறிவியல், 11.30 மணிக்கு சித்திரம் ஆகிய பாடங்கள் தொடர்பான கருத்தரங்கும், நாளை காலை 8 மணிக்கு இந்து நாகரிகம், முற்பகல் 10 மணிக்கு அரசறிவியல், 11.30 மணிக்கு சித்திரம் மற்றும் புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு புவியியல் ஆகிய பாடங்களுக்கான போதனைகள் நடைபெறவுள்ளன. இதில் மாணவர்கள் கலந்து கொண்டு பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (ந-16)

# பாண்டியன்தாழ்வு புனித அன்னாள் ஆலயத் திருவிழா - 29.07.2012

20.07.2012 அன்று கொடி ஏற்றத்துடன் ஆரம்பமாகித் தினமும் வழிபாடுகள் மாலை 5.00 மணிக்கு நடைபெறும். நற்கருணை விழா 28.07.2012 மாலை 5.00 மணிக்கு ஆரம்பமாகும். திருவிழா திருப்பலி 29.07.2012 ஞாயிறு காலை 7.00 மணிக்கு.
"அன்னாளின் ஆசி பெற அன்புடன் அனைவரையும் அழைக்கின்றோம்.
- பங்குத்தந்தை, பங்குமக்கள்.

(20544) (2-6-7)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 28 * 09 * 1930



மறைவு 22 * 06 * 2012

*அமரர் சிவசுப்பிரமணியம் மகேந்திரன்*
*(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், C.T.B)*

எமது பாடசாலை ஆசிரியர் திரு. வே. மணிவண்ணன் அவர்களின் அன்பு மாமனார் அமரர் *சிவசுப்பிரமணியம் மகேந்திரன்* (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், C.T.B) அவர்களின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!
பாடசாலைச் சமூகம்
வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி

(சி/1810)(3.14)

# மரண அறிவித்தல்கள்

## முருகேசு கனகரத்தினம்



மட்டுவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் மட்டுவில் தெற்கில் வசித்தவரும், தற்போது USA (Rhode Island) ஐ வசிப்பிட மாகக் கொண்டவருமான முருகேசு கனகரத் தினம் (காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை- பாதுகாப்பு உத்தியோகத்தர், கொள்வனவு உத்தியோகத்தர்) கடந்த (17.07.2012) செவ்வாய்க்கிழமை USA இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு -மாணிக்கம் தம்பதியரின் இளைய மகனும், காலஞ்சென்ற சின்னத்தம்பி மற்றும் பத்மாவதி (நோர்வே), ஆகியோரின் அன்பு மருமகனும், ஜெயவசந்தா (USA(RI) அவர்களின் அன்புக் கணவரும் கந்தசாமி (ஒய்வுபெற்ற கணக்காளர்- பாதுகாப்பு அமைச்சு), பாலசிங்கம் (ஒய்வு பெற்ற மின்சார சபை ஊழியர் யாழ்ப்பாணம்) துரைசிங்கம் (ஒய்வுபெற்ற அதிபர்-வவுனிக்குளம்), இராசரத்தினம் (விரிவுரையாளர்-ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை கோப்பாய்), இராசமணி, காலஞ்சென்ற நாகரத்தினம், மற்றும் பூமணி, தங்கமணி ஆகியோரின் அன்புச் சகோதரரும் சுதர்மன் (கனடா -ரொரண்டோ ரான்சிற் கொமிஷன்), சுமந்திரன் (உதவிப் பொறியியலாளர் ஸ்ரீ லங்கா ரெலிக்கொம்), சஜீந்திரன் (அமெரிக்கா TD Bank), துர்க்கா (IBM Consultant), ஜெயவத்சலா (URI) ஆகியோரின் அன்புத் தந்தையும், மதுராங்கனி (கனடா) சியாமளா (கொழும்பு), ஸ்ரீ பிரியதர்சினி (அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மாமனும், வைஷ்ணா, மதுஷன், ஆகியோரின் பேரனும் ரதி, (நோர்வே), மோகனதாஸ் (நோர்வே), தர்மபாலினி (கனடா), தர்மதாஸ் (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

இன்று (21.7.2012) சனிக்கிழமை காலை 8 மணிமுதல் மாலை 3 மணிவரை அன்னாரின் பூதவுடல் William W. Tripp Funeral Home இல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பூதவுடல் தகனக்கிரியைக்காக 585, Black Stone Blvd, Providence 02906 இற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்பு -
ஜெயவசந்தா (மனைவி) - 4017221792
சுதர்மன் (மகன்) - 4162727728
சுமந்திரன் (மகன்) -
சஜீந்திரன் (மகன்) - 4018645408
கண்ணன் (மைத்துனன்) - 5147585722
சந்திரமோகன் (மைத்துனன்) - 02086649078

தகவல்:
குடும்பத்தினர்

(20661) (14.3)

## சிவலோகநாதன் தனலட்சுமி (தனம்)



திருநெல்வேலி மேற்கு பிள்ளையார் வீதியைப் பிறப்பிடமாகக் கொண்ட சிவலோகநாதன் தனலட்சுமி (தனம்) நேற்று (20.07.2012) வெள்ளிக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிள்ளையார் வீதி,
திருநெல்வேலி மேற்கு.

தகவல்:
குடும்பத்தினர்.

(20660) (2-6-7)

# வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம் 4ஆம் குறுக்குத் தெருவில், பிரதான வீதிக்கு அருகில் 5அறைகள் கொண்ட வீடு வாடகைக்குண்டு. தொடர்பு 077 3446673

(20664) (15)

# வேலையாள்கள் தேவை

சிற்றுண்டி வேலைகள் மற்றும் உணவு பரிமாற்ற(supply) உதவியாளர்கள் தேவை

தொடர்பு 0771751495

# மரண அறிவித்தல்கள்

## முருகேசு நாகலிங்கம் நடராசா



(ஓய்வு பெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர், RDA), முன்னாள் பொருளாளர், நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயம்)

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட மு.நா.நடராசா நேற்று (20.07.2012) வெள்ளிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் -அன்னப்பிள்ளை தம்பதியரின் ஏக புதல்வனும், காலஞ்சென்றவர்களான கதிரித்தம்பி- யோகம்மா தம்பதியரின் மருமகனும், குணபூஷணியின் அன்புக் கணவரும், சுரநுதா (ஆசிரியை, கல்கமுவ), சோபிதா (கொழும்பு), மயூரன் (ஆசிரியர், கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம்), நர்த்தனன் (ஆசிரிய மாணவன் ஆசிரியர் கலாசாலை, கோப்பாய்), பிரணவன் (விஞ்ஞான பீட மாணவன், யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாச மிகு தந்தையும், கமலேஸ்வரன் (ஹொங்கொங்), நந்தகுமார் (வர்த்தகர்;கொழும்பு), சகிலா (ஆசிரியை, உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்), வேணுயா ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற இந்துமதி (முன்னாள் பிரதேச செயலர், கிளிநொச்சி), மற்றும் திலகவதி (கொழும்பு), சிவசக்தி (கனடா) ஆகியோரின் சகோதரனும், கனகம்மா, சரஸ்வதி, சவுந்தரம் (ஒய்வு பெற்ற ஆசிரியை), Dr. பெரியநாயகி (நீர்கொழும்பு), ஆறுமுகம் (ஒய்வு பெற்ற செயலாற்று உதவியாளர் (DOA) யாழ். சாலை,கோண்டாவில்), கதிரேசபிள்ளை (உதவிக் கல்விப் பணிப்பாளர், தீவகக் கல்வி வலயம்), விக்னேஸ்வரன் (கனடா) ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற இரத்தினசபாவதி மற்றும் சொர்ண லிங்கம் (வர்த்தகர்), மயில்வாகனம் (ஒய்வு பெற்ற தபாலதிபர்), வரதலெட்சுமி (அதிபர், யா/இளையதம்பி இந்து வித்தியாலயம்) ஆகியோரின் சகலனும், காலஞ்சென்றவர்களான சரவணமுத்து -நாகம்மா தம்பதியரின் பெறாமகனும், அயிலவன், கிருஷிகா, சதுர்சன், ஜதுர்த்திகா, அபிவர்ஷினி, கஜவர்ஷன், ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

6.ஆம் வட்டாரம்,
நயினாதீவு.

*தகவல்-*
*ந.மயூரன் (மகன்)*
*க.ஆறுமுகம் (மைத்துனர்)*

(20667) (14.3)

## *சிவலோகநாதன் தனலட்சுமி*

திருநெல்வேலியை பிறப்பிடமாகவும், லண்டனை வதிவிடமாகவும் கொண்ட சிவலோகநாதன் தனலட்சுமி நேற்று (20.07.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா- பாக்கியம் தம்பதியரின் புதல்வியும், சிவலோகநாதனின் அன்பு மனைவியும் வெண்ணிலா, பார்த்தீபன், பிரதீபன், தாரகை ஆகியோரின் தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(சி/1616) (15-14)

# 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்
04★ 06★ 1957

இறைவன் அடியில்
10★ 08★ 2002

அமரர்
தெய்வேந்திரன் கோகிலகுமாரி (பூசனி)
திதி:-துதியை

ஆண்டுகள் பத்தைக் கடந்தாலும்
எம் உயிரோடும் உணர்வோடும்
கலந்துவிட்ட தங்கள் நினைவுகள்
என்றென்றும் எம்முடன் நிலைத்திருக்கும்

17, சிவன்புதுவீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

என்றும் நினைவில்:
அப்பா, கணவர், மகன், மருமகள்.

(20654) (2-7-6)

# கண்ணீர் அஞ்சலி



பருத்தித்துறை பிரதேச சபைத் தவிசாளர் திரு.பூ.சஞ்சீவன் அவர்களின் பேரனாகிய
**கந்தையா கார்த்திகேசு**
அவர்கள் (18.07.2012) அன்று இறையடி சேர்ந்தார்.

அன்னாரது இழப்பிற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

விக்னேஸ்வரா
சனசமூக நிலையம்
வத்திராயன்

சி/1611)

# மரண அறிவித்தல்

## குட்டிப்பிள்ளை கிட்ணர்



(முன்னாள் கோப்பாய் அரச அதிபர், DRO, நெடுங்கேணி)

நல்லூர் இராஜவீதியைப் பிறப்பிடமாகவும், ஆஸ்திரேலியா சிட்னியை வசிப்பிடமாகவும் கொண்ட குட்டிப்பிள்ளை கிட்ணர் நேற்று (20.07.2012) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குட்டிப்பிள்ளை-அன்னமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கனகம்மாவின் (அதிபர், செங்குந்தா இந்துக் கல்லூரி) அன்புக் கணவரும், பாக்கியம், கந்தசாமி(போதனாசிரியர், தொழில்நுட்பக் கல்லூரி, வட்டுக்கோட்டை), புவனேஸ்வரி (முன்னாள் ஆசிரியை, காசிப்பிள்ளை வித்தியாலயம்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், உதயகுமார், உருத்திரகுமார், யசோதா, சாந்திக்குமார் ஆகியோரின் அன்புத் தகப்பனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.07.2012) ஞாயிற்றுக் கிழமை ஆஸ்திரேலியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*32 , இராஜவீதி,*
*நல்லூர்.*

(20665)

*தகவல்:*
*சண்முகநாதன் குடும்பம்*
*பாக்கியம்(சகோதரி)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Advanced Microsoft Excel

அலுவலகங்களில் Microsoft Excel பாவிக்கும் பாவனையாளர்கள் உங்கள் வேலைப்பளுவைக் குறைத்துக் கொள்ள Excel இல் உள்ள சில இலகுவான முறைகளைத் தெரிந்து கொண்டால் (Pivot table, VBA, What if analysis, Finance & Statistic Functions etc) உங்கள் நேரத்தைச் சேமித்துக் கொள்ள முடியும்.

உயர்தரப் படிப்பை முடித்துவிட்டு வேலைவாய்ப்புக்காகக் காத்திருக்கும் மாணவர்களுக்கும் இது ஒரு வாய்ப்பாக அமையும். உங்கள் தேவைகளுக்கு ஏற்ற வகையில் இலகுவான முறையில் கற்பிக்கப்படும்.

(20647) (2-6-7)

**கோ.ஜனகன், தொ.பே.077 6169470**



## பண்டத்தரிப்பு பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் கூறுவிலை கோரல்

**1200 போத்தல் பதநீரை பனங்கட்டியாக்கும், நீராவியால் இயங்கும் பொறித்தொகுதி**

எரிபொருள் சிக்கனத்திற்காகவும், உயர்ந்த தரத்திற்காகவும் 03 நிலை ஆவியாக்கும் பொறித்தொகுதி, (Three Stage Evaporator Incorporating vacuum pan), நீராவியாக்கி (Boiler), படிவு தொட்டி, தேவையான குழாய் இணைப்புக்கள், கொள்கலன் (Day tank), பனங்கட்டி அச்சுக்கள், உதிரி உபகரணங்கள் ஆகியவை பொறித்தொகுதியில் அடங்கும்.

மேற்கூறிய வேலைக்குரிய வடிவமைப்பு, உருவமைப்பு, நிர்மாணம், பரீட்சைய இயக்கம் ஆகியவை கூறுவிலையில் அடங்கும்.

உங்கள் கூறுவிலையை விளக்கமாக 27.07.2012 ஆம் திகதி அல்லது அதற்கு முன்பாக தலைவர் பண்டத்தரிப்பு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், பிரதான வீதி, பண்டத்தரிப்பு என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கவும்.

பிரதான வீதி,
பண்டத்தரிப்பு.

தலைவர்
பண்டத்தரிப்பு
ப.தெ.வ.அ. கூ. சங்கம்.

(G/1603) (45.07.6)


## மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம்,ஜூலை21

பாலர் கல்விக் கழக நிர்வாகத்தின் கீழ் இயங்கும் அரசடி ஞானக்குழந்தை இல்லத்தின் மெய்வன்மைப் போட்டி இன்று பிற்பகல் ஒரு மணிக்கு யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது .

பாடசாலை ஆசிரியை திருமதி கேதாரபூரணி ஞானக்காந்தன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக எஸ். கைலாசபிள்ளையும், சிறப்பு விருந்தினராக பாலர் கல்விக் கழகச் செயலாளர், ஓய்வுபெற்றஆசிரியை திருமதி செ.இரத்தின கோபாலும் கலந்து கொள்வர். (3)

## பண்ணிசை போட்டிகள்

யாழ்ப்பாணம்,ஜூலை21

சைவத்திருமுறை விழாவை முன்னிட்டு ஆனைக்கோட்டை இந்து சமய விருத்திச் சங்கம் நடத்தும் பண்ணிசை செயன்முறைப் போட்டிகள் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன. (ம-14)

# மரண அறிவித்தல்

## திருமதி செந்தமிழ்ச்செல்வம் பரமேஸ்வரநாதன்



வட்டு மேற்கு, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செந்தமிழ்ச்செல்வம் பரமேஸ்வரநாதன் கடந்த 17.07. 2012 செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுச்சாமி - குருகுலம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ் சென்றவர்களான செல்லத்துரை - பூரணலட்சுமி தம்பதியரின் அருமை மருமகளும் பரமேஸ்வரநாதனின் பாசமிகு மனைவியும், செல்வநாதன், சோமேஸ்வரன், முரளிதரன், சசிதரன், செல்வமனோகரி, ஜீவகலியாணி, திலகராணி, பிரகலா ஆகியோரின் அன்புத் தாயும், பவளமலர், ஆனந்தராஜா, லோகநாதன், காலஞ் சென்ற ரஞ்சிதமலர் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சர்வசண்முகநாதன், லிங்ககுரு, நரேந்திரநாதன் ஆகியோரது மைத்துனியும், சிவமலர், ஆதரதேவி, மோகனகௌரி, புகலியா, பூமானசிங்கம், சடாட்சரசிங்கம், மலர்வண்ணன், பிரதாபன் ஆகியோரின் அருமை மாமியும், றெஜினா, சுகந்தன், அஸ்வின், வஜிந்தன், சுருதிகா, டிலுசன், சுரேஸ், திசோக்குமார், கோணேஸ்வரன், கோகிலன், நிசாந், நயந்தன், கஜந்தினி, பிரியசறோஜா, வித்தியாதாரணி, வித்தியாகௌரி, வித்தியாசிவன், வித்தியாசேயோன், கோகுலன், ரேகன், கரிசாந், சாருஜன், கீர்த்திகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (22.07.2012) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

செல்வபூரண பவனம், புதுவீதி,
கண்ணகை அம்மன் கோயிலடி, வட்டுக்கோட்டை மேற்கு.

தகவல்:
செ. பரமேஸ்வரநாதன்
(கணவர்)

(20545) (45.6.7)




(F/1800) (2-6-7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்கலையின் சர்வதேச மாநாடு நகரில் நேற்று சிறப்பாக ஆரம்பம்





யாழ்ப்பாணம், ஜூலை 21
போருக்குப் பின்னரான அபிவிருத்தி எனும் தலைப்பிலான யாழ். பல்கலைக்கழக சர்வதேச ஆய்வு மாநாட்டின் ஆரம்ப நிகழ்வு யாழ். நகரில் உள்ள 'றில்கோ' ஹோட்டலில் நேற்று காலை 9.20 மணிக்கு ஆரம்பமாகியது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்க கலந்து கொண்டு உரையாற்றினார்.

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் செல்வி வசந்தி அரசரட்ணம் தலைமையில் இடம்பெற்ற ஆரம்ப நிகழ்வில் விசேட விருந்தினராக இந்திய தூதரக அதிகாரி அசோக் கே. காந்தாவும் அதிதிப் பேச்சாளராக களனிப் பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் சரத் அமுனுகம மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் கலந்து கொண்டனர்.

விருந்தினர்கள் மற்றும் மாநாட்டின் இணைப்பாளர் பேராசிரியர் சிறி. சற்குணராஜா ஆகியோரது உரைகள் இடம்பெற்றன.

நிகழ்வின் இறுதியில் விருந்தனர்களுக்கு யாழ். பல்கலைக்கழக இலட்சினை பொறிக்கப்பட்ட நினைவுச் சின்னம் வழங்கப்பட்டது.

நிகழ்வில் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு பேராசிரியர்கள் துறைசார் நிபுணர்கள் யாழ். பல்கலைக்கழக அனேகமான பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், பீடாதிபதிகள், வடமாகாண கல்வி அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

ஹோட்டலில் ஆரம்ப நிகழ்வுகள் நிறைவடைந்த பின்னர் யாழ். பல்கலைக்கழகத்தில் ஆய்வு மாநாடுகள் ஆரம்பமாகின.

விவசாயம், பிரயோக அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், வர்த்தகம் மற்றும் முகாமைத்துவம், கல்வி, சுகாதாரம், மருத்துவ அறிவியல், தகவல் அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், தூய அறிவியல், சமூக அறிவியல் ஆகிய துறைகளில் அறிஞர்களின் ஆய்வுகள், கட்டுரைகள் என்பன இரண்டு நாள் மாநாட்டிலும் முன்வைக்கப்படவுள்ளன. இரண்டாம் நாள் நிகழ்வுகள் யாழ். பல்கலைக்கழகத்தில் பல மண்டபங்களில் இன்று முற்பகல் 9 மணிக்கு தொடங்கி நடைபெறும். (10-4)

## கைதடி பனை ஆராய்ச்சி நிலையத்தில்
## பஸில் ராஜபக்ஷ முந்தியதால் கட்டடத்தை திறக்க மறுத்த காந்தா

யாழ்ப்பாணம், ஜூலை 21
இந்திய அரசின் நிதியுதவியுடன் புனரமைக்கப்பட்ட கைதடி பனை ஆராய்ச்சி நிலையத்தின் ஆய்வு கூடத்தினை திறப்பதற்கு இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அசோக் கே.காந்தா மறுத்துவிட்டார். பின்னர் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ திறந்து வைத்தார்.

யாழ். மாவட்டத்தில் நேற்று பல்வேறு நிகழ்ச்சிகளில் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ மற்றும் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அசோக் கே.காந்தா ஆகியோர் கலந்து கொண்டனர். இதன்போது இந்திய அரசின் நிதியுதவியோடு புதிதாக அமைக்கப்பட்ட கைதடி பனை ஆராய்ச்சி நிலைய ஆய்வுகூடம் திறந்துவைக்க ஏற்பாடாகியிருந்தது.

**இந்திய அரசின் எழுபது மில்லியன் ரூபா சிறுஅபிவிருத்தி நன்கொடைத் திட்டத்தின் கீழ் கைதடி பனை ஆராய்ச்சி நிலையத்துக்கு வழங்கப் பட்டிருந்தது.**

முதலில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் மற்றும் சக குழுவினர் வருகை தந்திருந்தனர். அதேநேரம் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் வருகை தாமதமானது. காத்திருக்காது கட்டடத்தின் நினைவுக்கல்லை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் திறந்து வைத்தார். பின்னர் ஆய்வுகூடக் கட்டடத்தை அசோக் கே.காந்தாவை திறந்து வைக்குமாறு கேட்கப்பட்டது. எனினும் அவர் மறுத்துவிட்டார். இதனால் பஸில் ராஜபக்ஷவே கட்டடத்தையும் திறந்துவைத்தார். இந்திய அரசின் எழுபது மில்லியன் ரூபா சிறுஅபிவிருத்தி நன்கொடைத் திட்டத்தின் கீழ் கைதடி பனை ஆராய்ச்சி நிலையத்துக்கு வழங்கப்பட்டிருந்தது. (10-13)

## யாழ். போதனா வைத்தியசாலை முறைகேடு
## விசாரணையை துரிதப்படுத்தக் கோரி வைத்தியர்கள் செவ்வாயன்று புறக்கணிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 21
யாழ். போதனா வைத்தியசாலை முறைகேடுகள் மற்றும் வைத்திய நிபுணர்களுக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல்கள் தொடர்பில் பாரபட்சமின்றி விசாரணை நடத்தக் கோரி வடமாகாண வைத்தியர்கள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை ஒருநாள் வேலை நிறுத்தத்தில் குதிக்கவுள்ளனர்.

காலை 8 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை இந்தப் புறக்கணிப்பில் ஈடுபடுவர் என்று அரச மருத்துவ அதிகாரிகளின் தாய்ச் சங்கச் செயலாளர் சந்திக்க எபிட்டிக்கடுவ நேற்று இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்.

யாழ். போதனா வைத்தியசாலையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் முறைகேடுகள் தொடர்பில் வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி பவானி பசுபதிராஜா, நிர்வாக உத்தியோகத்தர் ஏ.எஸ். பிரசாத் மற்றும் ஊழியர் ஒருவர் ஆகிய மூவருக்கும் எதிராக குற்றப் பத்திரம் தாக்கல் செய்து விசாரணை நடைபெறவில்லை.

பகிரங்க சேவைகள் ஆணைக்குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட விதிமுறைகளின்படி நேர்மையான முறையில் விசாரணைகளைக் கொண்டு செல்ல சுகாதார அமைச்சின் அதிகாரிகள் இடையூறாக உள்ளனர். இது தொடர்பில் மருத்துவ சங்கம் அதிருப்தி கொண்டுள்ளது.

வைத்தியசாலை முறைகேடுகளைத் தொடர்ந்து வைத்திய நிபுணர் என்.ஜெயக்குமாரனது வீடும் தாக்கப்பட்டது. அவர் அச்சுறுத்தப்பட்டார். தற்போது வைத்திய நிபுணர் எஸ்.நிமலன் மீதும் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இது போன்ற சம்பவங்கள் தொடர்பில் பாரபட்சமின்றி விசாரணைகள் நடைபெறவேண்டும். இது பற்றி சுகாதார அமைச்சுடன் பல தடவை பேச்சு நடத்தியும் எதுவித பயனும் ஏற்பட்டிருக்கவில்லை.

எனவே இவை தொடர்பில் விசாரணை நடத்தக் கோரியே செவ்வாய்க்கிழமை பணிப் புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளோம்.

அத்துடன் அவசர நோயாளர் சேவைகளில் தடை இருக்காது. ஏனைய நோயாளர்களுக்கு ஏற்படும் இடையூறுகளுக்கு வருந்துகின்றோம் என்றும் அவர் தெரிவித்தார். (10-4)

## கடற்பாதை சேவை அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 21
காரைநகருக்கு ஊர்காவற்றுறைக்கும் இடையிலான கடற்கரைச் சேவை தற்போது அதிக ரிக்கப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகாரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

முன்னர் இந்தக் கடற்பாதை சேவை தினமும் 9 தடவைகளே நடைபெற்று வந்தது மக்களின் கோரிக்கையை அடுத்து மேலும் இரண்டு சேவைகள் தினமும் மேலதிகமாக நடைபெற்று வருவதாகவும் தினமும் காலை 7 மணிக்கு ஆரம்பமாகும் இந்தக் கடற்பாதை சேவை தொடர்ந்து இரவு 7 மணிவரை நடைபெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-7)

## சிகிச்சை பெறுவதற்கு 2 மாதங்கள் காக்க வேண்டும்

தென்மராட்சி, ஜூலை 21
தனியார் வைத்தியசாலைகளில் பணம் செலுத்தி வைத்திய நிபுணரின் சேவை பெறுவதாயின் இரண்டு மாதங்கள் காத்திருக்க வேண்டும். இவ்வாறான அனுபவம் தென்மராட்சி வாசிக்கு ஏற்பட்டுள்ளது.

தனது நோயின் வைத்திய நிபுணரின் சேவை பெற யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் வைத்தியசாலையில் பணம் செலுத்திய போது வைத்திய நிபுணரைச் சந்திக்க செப்டம்பர் மாதம் திகதி வழங்கப்பட்டுள்ளது. இது அவரை ஆச்சரியத்தில் உள்ளாக்கியது.

தனது வருத்தத்தின் நிமித்தம் தனியார் வைத்தியசாலையில் பணம் செலுத்தி வைத்திய நிபுணரின் சேவை பெற்ற பின்னர் வைத்தியசாலைக்கு செல்லலாமென நினைத்திருந்தவருக்கு ஏமாற்றமே எஞ்சியது.

வைத்திய நிபுணரை சந்திப்பதற்கு இரண்டு மாதங்கள் கழித்து திகதியிட்டதால் யாழ்.போதனா வைத்தியசாலை விடுதியில் தங்கி வைத்திய நிபுணரிடம் சிகிச்சை பெற்று வீடு திரும்பியதாகவும் அவர் கூறியுள்ளார். வைத்தியசாலையில் வைத்திய நிபுணரின் சேவையைப் பெறுவதற்கு சிரமம் எனக் கருதாது தனியார் மருத்துவமனைகளில் பணத்தை வீணாக்காது பொது வைத்தியசாலைகளில் நிபுணரிடம் சிகிச்சை பெறலாம் எனவும் தெரிவித்தார். (ம-9)

## யாழ். பழைய பூங்காவின் ஒருபகுதியை பஸில் ராஜபக்ஷ நேற்றுத் திறந்தார்

யாழ்ப்பாணம், ஜூலை 21
கடந்த காலங்களில் சர்ச்சைக்குள்ளான யாழ்ப்பாணம் பழைய பூங்காவின் ஒரு பகுதி நவீனமயப்படுத்தப்பட்டு நேற்று திறந்துவைக்கப்பட்டது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் இணைந்து பூங்காவைத் திறந்து வைத்தனர்.

கடந்த வருடம் இதே காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தின் மூச்சு என்ற பழைய பூங்கா பல்வேறு அரசதிணைக்களங்களுக்கும் பகிர்ந்து வழங்குவது தொடர்பில் வடக்கு ஆளுநருக்கும் முன்னாள் அரச அதிபருக்கும் இடையில் சர்ச்சை இடம்பெற்றது.



இதையடுத்து பழைய பூங்காவை ... அதன் ஒரு பகுதியை மீள புனரமைத்து நவீனமயப்படுத்தியது. 18 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட இந்தப் பூங்காவின் ஒரு பகுதியையே நேற்று நண்பகல் 11.40 மணியவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ திறந்து வைத்தார்.

இதில் இந்திய தூதுவர் அசோக் கே.காந்தா யாழ்.அரச அதிபர், அரச அதிபர் உட்பட பலரும் கலந்துகொண்டனர். ... பொறுப்பேற்றுக் கொண்டது.

## காலாவதியான பொருள்கள் பரிசோதகர்களால் அழிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 21
நல்லூர் ஆலய மஹோற்சவம் ஆரம்பமாகவுள்ளதை யொட்டி சுற்றாடலிலுள்ள உணவுகையாளும் நிலையங்கள், வர்த்தக நிலையங்களில் சுகாதாரப் பரிசோதகர்கள் நேற்று திடீர் சோதனை நடத்தினர். இதன்போது காலாவதியான பொருள்கள் கண்டறியப்பட்டு அழிக்கப்பட்டன.

யாழ். மாநகர சபை சுகாதார பரிசோதகர்கள் இந்தத் திடீர் பரிசோதனையை மேற்கொண்டனர்.

இதன்போது மென்பானங்கள், குளிர் பானங்கள், பால்மா பைக்கற்றுகள், இனிப்புப் பொதிகள், உருளைக்கிழங்கு என்பன காலாவதியாகிய பயன்படுத்த முடியாத நிலையிலும் இருப்பது கண்டறியப்பட்டது. அவை மீட்டு அழிக்கப்பட்டன.

**யாழ். மாநகர சபை சுகாதார பரிசோதகர்கள் இந்தத் திடீர் பரிசோதனையை மேற் கொண்டனர்.**

இந்த நடவடிக்கை தொடரும் என்று மாநகர சுகாதார பரிசோதகர்கள் தெரிவித்தனர். (10-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுவில் தெற்கு வளர்மதி சனசமூக நிலைய கரப்பந்தாட்டம்

# புத்தூர் வளர்மதி, ஆவரங்கால் மத்தி அரையிறுதி போட்டிக்குள் நுழைந்தன

பண்டத்தரிப்பு, ஜூலை 21

மட்டுவில் தெற்கு வளர்மதி சனசமூக நிலையத்தினரால் நடத்தப்படும் கரப்பந்தாட்டச் சுற்றுத் தொடரின் அரையிறுதிக்கு ஆவரங்கால் புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழகமும், ஆவரங்கால் மத்தி விளையாட்டுக் கழகமும் தகுதி பெற்றுள்ளன.

மட்டுவில் தெற்கு வளர்மதி சனசமூக நிலையத்தின் 47 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் நடத்தப்படும் கரப்பந்தாட்டச் சுற்றுத் தொடரின் காலிறுதிப் போட்டிகள் நடைபெற்று முடிந்துள்ளன. இதில் மூன்றாவது காலிறுதிப் போட்டியில் அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக்கழக 'பி' அணியும் புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

இந்தப் போட்டியின் முதல் சுற்றில் ஆதிக்கம் செலுத்திய புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழகம் 25:19 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் முதலாம் சுற்றை தனதாக்கியது.

எனினும் இரண்டாம் சுற்றில் அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக் கழக 'பி' அணி எதிரணிக்கு சிறந்த போட்டியைக் கொடுத்தது. இரு அணிகளும் மாறி மாறிப் புள்ளிகளைப் பெற்ற வண்ணம் இருந்தன. எனினும் இறுதி நேரத்தில் அடுத்தடுத்து புள்ளிகளைப் பெற்ற புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழகம் 25:22 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் இரண்டாம் சுற்றையும் தனதாக்கியது. இதன் அடிப்படையில் 2:0 சுற்றுக்கள் என்ற புத்தூர் வளர்மதி விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்று அரையிறுதிக்குள் நுழைந்தது.

நான்காவதும் இறுதியுமான அரையிறுதிப்போட்டியில் ஆவரங்கால் மத்தி விளையாட்டுக் கழகமும் அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக்கழக 'ஏ' அணியும் விளையாடின. போட்டியின் ஆரம்பம் முதல் இறுதி வரை ஆவரங்கால் மத்தி விளையாட்டுக்கழகம் ஆதிக்கம் செலுத்தியிருந்தது. முதலாம் சுற்றினை 25: 16 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழகம் கைப்பற்றிக்கொண்டது.

இரண்டாம் சுற்றில் அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக்கழக 'ஏ' அணி சிறிது போராடினாலும் அது சுற்றை வெல்லும் அளவுக்கு திறமையை வெளிப்படுத்தவில்லை. இதனால் இரண்டாம் சுற்றும் 25:19 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் ஆவரங்கால் மத்தி அணியினர் வசமானது. இவற்றின் அடிப்படையில் 2:0 சுற்றுக்கள் என்ற ரீதியில் ஆவரங்கால் மத்தி விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

நடைபெற்று முடிந்த காலிறுதிப் போட்டிகளின் அடிப்படையில் முதலாவது அரையிறுதியில் பன்னாலை ஸ்ரீ கணேசா விளையாட்டுக் கழகமும், ஆவரங்கால் மத்தி விளையாட்டுக்கழகமும் மோதுகின்றன. இரண்டாவது அரையிறுதியில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகமும் புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழகமும் விளையாடுகின்றன.

(ந-130)

## வட மாகாண வலைப்பந்தாட்டம் நாளை வேம்படியில்

யாழ்ப்பாணம்,ஜூலை 21

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் மாவட்ட அணிகளுக்கு இடையேயான வலைப் பந்தாட்டப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை யாழ். வேம்படி



மகளிர் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இதில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த அணிகள் பங்குபற்றவுள்ளன. [ந-23]

# இன்றைய ஆட்டங்கள்

ஆண்,பெண் இருபாலாருக்குமான தேசிய மட்ட கிரிக்கெட் போட்டிகள் இன்றும், நாளையும் கொழும்பில் நடைபெறவுள்ளன.

இதில் வடமாகாணத்திலிருந்து ஆண்கள் பிரிவில் மன்னார் மாவட்ட அணியும், பெண்கள் பிரிவில் முல்லைத்தீவு மாவட்ட அணியும் பங்குபற்றுகின்றன.

இதேவேளை ஆண்,பெண் இருபாலாருக்குமான தேசிய மட்ட பளுதூக்கும் போட்டியும் இன்று கொழும்பில் இடம்பெறவுள்ளது.

இதில் ஆண்கள் பிரிவு பளுதூக்கும் போட்டியில் யாழ். மாவட்டத்திலிருந்து முதல் முறையாக 12 வீரர்கள் பங்குகொள்கின்றனர்.

* * *

வட மாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் மாவட்ட அணிகளுக்கு இடையேயான ஆண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டி இன்று சனிக்கிழமை யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இதேவேளை மகளிருக்கான உதைபந்தாட்டப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ளது.

இந்தப் போட்டிகளில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த அணிகள் பங்குபற்றவுள்ளன.

* * *

யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கம் அங்கத்துவ கழகங்களுக்கு இடையே நடத்தும் பிரிவு III இற்கான 50 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று சனிக்கிழமை நடைபெறும் ஆட்டங்களில் பங்கு கொள்ளும் அணிகளின் விவரம் வருமாறு -

யாழ்.பல்கலைக்கழக அணி எதிர் சென்றலைட்ஸ் வி. க. அணி (யாழ். பல்கலைக்கழக மைதானம்)

ஜொனியன்ஸ் வி.க. அணி எதிர் சென்றல் வி.க. அணி (வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானம்)

* * *

யாழ்.உதைபந்தாட்ட லீக், அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்தும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இன்று சனிக் கிழமை இடம்பெறுகின்ற ஆட்டங்களில் பங்குகொள்ளும் அணிகளின் விவரங்கள் வருமாறு:

பி.ப 3.45 மணி

நாவாந்துறை சென்.நீக்கிலஸ் வி.க. எதிர் குருநகர் பாடுமீன் வி.க.

பி.ப 5 மணி

அரியாலை ஐக்கிய வி.க. எதிர் பாஷையூர் சென்.அன்ரனிஸ் வி.க.

* * *

விளையாட்டு அமைச்சினால் அகில இலங்கை ரீதியில் நடத்தப்படும் ஆண், பெண் இருபாலாருக்குமான 'ஜூடோ' போட்டிகள் இன்றும், நாளையும் கொழும்பு ரொறிங்டன் உள்ளக விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளன. இந்தப் போட்டிகளில் கலந்துகொள்வதற்காக, வட மாகாண வீர, வீராங்கனைகள் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கொழும்பு பயணமாகினர். (ந-23- 86)

# வட மாகாண தடகளச் சாதனையாளர்கள்

வட மாகாண தடகளப் போட்டியில் இந்த வருடம் பல புதிய சாதனைகள் வீர வீராங்கனைகளால் நிகழ்த்தப்பட்டுள்ளன. யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் இந்த மாதம் 4ஆம் திகதி தொடக்கம் 7ஆம் திகதிவரை நடைபெற்று முடிந்த மாகாண தடகளப் போட்டியிலேயே இதுவரை முறியடிக்கப்படாமல் இருந்த பல சாதனைகளை இந்த வருடம் தகர்த்தெறிந்தனர். சரித்திரம் படைத்த வீர வீராங்கனைகளின் விவரமும், அவர்களின் சாதனைப் பட்டியலும் வருமாறு:



ஆர்.சாளினி

வவுனியா புதுக்குளம் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த ஆர்.சாளினி 19 வயதுப் பிரிவுப் பெண்களுக்கான 800 மீற்றர் ஓட்டப் போட்டியில் குறித்த தூரத்தை 2நிமிடம் 39.7 செக்கனிலும், 1500 மீற்றர் ஓட்டப் போட்டியில் குறித்த தூரத்தை 5 நிமிடம் 24.4 செக்கனிலும், 5000 மீற்றர் ஓட்டப் போட்டியில் குறித்த தூரத்தை 20நிமிடம் [illegible] செக்கனிலும் ஓடி முடித்து வட மாகாண தடகளப் போட்டியில் மூன்று புதிய சாதனைகளை நிலைநாட்டியுள்ளார்.

17 வயதுப் பிரிவு ஆண்களுக்கான உயரம் பாய்தல் போட்டியில் இதுவரை சிறந்த பெறுபேறாக பதிவு செய்யப்பட்டிருந்த 1.85 மீற்றர் தூரத்தை இந்த வருடம் யாழ்.இந்துக் கல்லூரியைச் சேர்ந்த ஆர்.செந்தூரன் கடந்து சமப்படுத்தியுள்ளார். இவர் இந்த வருடம் தேசிய கனிஷ்ட மெய்வன்மை போட்டிகளில் உயரம் பாய்தலில் 1.92 மீற்றர் பாய்ந்தமை குறிப்பிடத்தக்கது.



ஆர். செந்தூரன்



மிக்கேல் மைக்கல் ஜெனோசன்

21 வயதுப் பிரிவு ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்டத்தில் குறித்த தூரத்தை மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையைச் சேர்ந்த மிக்கேல் மைக்கல் ஜெனோசன் 11.7 செக்கன் ஓடி முடித்து வட மாகாண ரீதியில் புதிய சாதனையை நிலை நாட்டியுள்ளார். இவர் 200 மீற்றர் ஓட்டப் போட்டியிலும் முதலிடத்தைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

15 வயதுப் பிரிவு பெண்களுக்கான 400 மீற்றர் ஓட்டப் போட்டியில் 1நிமிடம் 09.9 செக்கனில் குறித்த தூரத்தை ஓடி முடித்ததே சாதனையாக இருந்தது. இதனை முறியடித்த முல்லைத்தீவு விசுவமடு மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த பி.தனுஜா குறித்த தூரத்தை 1நிமிடம் 06.8 செக்கனில் ஓடி முடித்து புதிய சாதனையை நிலைநாட்டினார்.



பி.தனுஜா



ஜெனோஜன்

17 வயதுப் பிரிவு ஆண்களுக்கான குண்டு எறிதல் போட்டியில் சிறந்த பெறுபேறாக இதுவரை 11.98 மீற்றர் தூரமே பதிவு செய்யப்பட்டிருந்தது. இதனை முறியடித்த வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த ஜெனோஜன் 12.18 மீற்றர் தூரத்துக்கு எறிந்து புதிய சாதனையை நிகழ்த்தினார்.

21 வயதுப் பிரிவு ஆண்களுக்கான 1,500 மீற்றர் ஓட்ட நிகழ்வில் இதுவரை சிறந்த பெறுபேறாக காணப்பட்ட 4நிமிடம் 29.7 செக்கன் என்ற பெறுபேற்றை தகர்த்து, வவுனியா பூவரசங்குளம் மத்திய மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த கே. சதீஸ்குமார் 4 நிமிடம் 20.0 செக்கனில் ஓடி புதிய சாதனை நிலை நாட்டியுள்ளார் .



கே. சதீஸ்குமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சாதிப்போம்

பாகிஸ்தானுடனான ஒரு நாள் தொடரில் சாதித்ததைப் போன்று எங்களது வீரர்கள் இந்திய அணியுடனும் சாதிப்பார்கள். இவ்வாறு இலங்கை அணியின் தலைவர் மஹேல ஜெயவர்தன நம்பிக்கை வெளியிட்டுள்ளார். அதே வேளை இந்திய அணி வீரர்கள் தங்களது முழுத் திறனையும் இலங்கை மண்ணில் வெளிக்காட்டுவர் என்று எதிர்பார்ப்பதாக இந்திய அணித்தலைவர் டோனி தெரிவித்துள்ளார்

இலங்கை- இந்திய அணிகளுக்கு இடையிலான 5 ஒரு நாள் மற்றும் ஒரு 'ரி- 20' போட்டி இலங்கையில் நடைபெற உள்ளது. முதலாவது ஒரு நாள் ஆட்டம் இன்று பகல்- இரவு ஆட்டமாக நடக்கிறது.

இந்த நிலையில் ஒரு நாள் போட்டித் தொடருக்கான கிண்ண அறிமுக விழா நடந்தது. இதில் பங்கேற்ற இலங்கை அணித்தலைவர் மஹேல ஜெயவர்தன தெரிவிக்கையில்,

அண்மையில் பாகிஸ்தானுக்கெதிரான தொடரை வென்றுள்ளோம். அதேபோன்று இந்தியாவுக்கெதிரான தொடரிலும் சிறப்பாக செயற்படுவோம் என்ற நம்பிக்கை உள்ளது.

அணியில் ஒரு சில புதுமுக வீரர்கள் இடம் பிடித்துள்ளனர். உலகக்கிண்ண 'ரி- 20' தொடரை எதிர்பார்த்து அவர்கள் அணியில் சேர்க்கப்பட்டுள்ளனர் - என்றார்.

இந்திய அணியின் தலைவர் டோனி கூறுகையில்,

இந்தத் தொடரை புதிதாக தொடங்குகிறோம். ஒரு சில விடயங்களில் நாங்கள் முன்னேற்றம் காண வேண்டும் என்பதால் இது தொடர்பாக தீவிர ஆலோசனை நடத்தியுள்ளோம். முன்னேற்றம் அடைய வேண்டிய பகுதியில் தொடர்ச்சியாக கவனம் செலுத்த உள்ளோம். எங்களது திறன் எப்படி உள்ளது? இன்னும் எவ்வளவு முன்னேற்றம் காண வேண்டும் என்பதை மதிப்பிடுவதற்கு இந்த தொடர் உதவும்.

தற்போதைய சூழ்நிலையில் ஒரு நாள் போட்டித் தொடரை மட்டுமே கருத்தில் கொண்டு விளையாடுகிறோம். 'ரி- 20' உலகக்கிண்ணத்தைப் பற்றி சிந்திக்கவில்லை - என்றார். (5)



## சிறப்பான ஆரம்பம்

இங்கிலாந்திற்குக் கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணிக்கும் இங்கிலாந்து அணிக்குமிடையிலான 3 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டம் நேற்றுமுன்தினம் ஆரம்பித்தது. முதல் நாள் ஆட்ட முடிவில் இங்கிலாந்து அணி ஆட்டத்தில் ஆதிக்கம் செலுத்தி வருகிறது.

லண்டன் ஓவல் மைதானத்தில் இடம் பெற்றுவரும் இந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி நேற்றுமுன்தினம் ஆட்ட நேர முடிவில் 3 இலக்குகளை இழந்து 267 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. முதலாவது இலக்கு முதலாவது பந்துபரிமாற்றத்திலேயே வீழ்த்தப்பட்ட போதிலும், அலஸ்ரெயர் குக், ஜொனதன் ரொட் இருவரும் இரண்டாவது இலக்குக்காக 170 ஓட்டங்களைப் பகிர்ந்து அணியை வழி நடத்தினர்.

துடுப்பாட்டத்தில் இங்கிலாந்து அணி சார்பாக அலஸ்ரெயர் குக் ஆட்டமிழக்காமல் 114 ஓட்டங்களையும், ஜொனதன் ரொட் 71 ஓட்டங்களையும், கெவின் பீற்றர்சன் 42 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பாக மோர்னி மோக்கல் 44 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், ஜக்ஸ் கலிஸ் 34 ஓட்டங்களுக்கு ஒரு இலக்கையும் வீழ்த்தினர். (5)

## ஒலிம்பிக்கில் இருந்து விலகினார் நடால்

உலகத் தரவரிசையில் மூன்றாம் இடத்திலிருக்கும் ஸ்பெயின் நாட்டின் நட்சத்திர வீரர் ரபேல் நடால் ஒலிம்பிக் போட்டியிலிருந்து விலகுவதாக அறிவித்தார்.

26 வயதான நடால், கடந்த 2008 ஆம் ஆண்டு பெய்ஜிங்கில் நடந்த ஒலிம்பிக் போட்டியில் ஒற்றையர் பிரிவில் தங்கம் வென்றார். மேலும், இந்த ஆண்டு நடைபெற உள்ள லண்டன் ஒலிம்பிக் போட்டியில் அவர் கலந்துகொள்வார் என்று அறிவிக்கப்பட்டதுடன், எதிர் வருகின்ற 27 ஆம் திகதி நடைபெறும் ஒலிம்பிக் தொடக்க விழாவில் ஸ்பெயின் நாட்டின் தேசியக் கொடியை ஏந்தி செல்லும் வாய்ப்பும் அவருக்கு அளிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், காயம் காரணமாக ஒலிம்பிக் போட்டியிலிருந்து விலகுவதாக நடால் நேற்றுமுன்தினம் அறிவித்தார். இது குறித்து அவர் கூறியதாவது,

போட்டியில் பங்கேற்கும் அளவுக்கு இன்னும் உடற்தகுதி பெறவில்லை என்பதால் இந்த முடிவை எடுத்தேன். ஒலிம்பிக் தொடக்க விழாவில் நாட்டின் தேசியக் கொடியை ஏந்திச் செல்லும் வாய்ப்பு, எனக்கு கிடைத்த மிகப்பெரிய கௌரவம். ஆனால் அது முடியாமல் போனது. இது எனது வாழ்நாளில் மிகவும் வருத்தமான விடயங்களில் ஒன்று என்று நடால் குறிப்பிட்டார்.

நான் எனது பயிற்சி மற்றும் போட்டிக்கான தயாரிப்பு பற்றி இறுதிவரை காத்திருக்கவேண்டும் என்றும் எனவேதான் இந்த முடிவை எடுத்தேன் எனவும் அவர் தெரிவித்தார். விம்பிள்டன் போட்டியில் 2 ஆம் சுற்று ஆட்டத்தின்போது காயமடைந்த நடால், அதன் பின்னர் விளையாடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (5)



## ஆஸி.கிரிக்கெட் போட்டி அட்டவணை

*2012-13 பருவகாலத்திற்கான ஆஸ்ரேலியாவில் இடம் பெறவுள்ள போட்டி அட்டவணை அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தாண்டு நவம்பரிலிருந்து அடுத்தாண்டு பெப்ரவரி வரையிலான போட்டியின் விபரங்களே அறிவிக்கப்பட்டுள்ளன.*

*தென்னாபிரிக்க அணி 3 டெஸ்ட் போட்டிக்காகவும், இலங்கை அணி 3 டெஸ்ட் போட்டி, 5 ஒரு நாள் சர்வதேசப் போட்டி, 2 'ரி-20' சர்வதேசப் போட்டி கொண்ட முழுமையான தொடருக்காகவும், மேற்கிந்தியத் தீவுகள் 5 ஒரு நாள் சர்வதேசப் போட்டி, ஒரு 'ரி-20' சர்வதேசப் போட்டி அடங்கிய தொடரிலும் பங்குபற்றுவதற்காக ஆஸ்திரேலியாவிற்குச் செல்லவுள்ளன.*

*போட்டி விபரங்கள்:*

*நவம்பர் 9-13: தென்னாபிரிக்கா எதிர் ஆஸ்திரேலியா - 1 ஆவது டெஸ்ட்*

*நவம்பர் 22-26: தென்னாபிரிக்கா எதிர் ஆஸ்திரேலியா - 2 ஆவது டெஸ்ட்*

*நவம்பர் 30- டிசெம்பர் 4: தென்னாபிரிக்கா எதிர் ஆஸ்திரேலியா - 3 ஆவது டெஸ்ட்*

*டிசெம்பர் 14-18: ஆஸ்திரேலியா எதிர் இலங்கை - 1 ஆவது டெஸ்ட்*

*டிசெம்பர் 26-30: ஆஸ்திரேலியா எதிர் இலங்கை - 2 ஆவது டெஸ்ட்*

*ஜனவரி 3-7: ஆஸ்ரேதிலியா எதிர் இலங்கை - 3 ஆவது டெஸ்ட்*

*ஜனவரி 11, 13, 18, 20, 23: ஆஸ்திரேலியா எதிர் இலங்கை ஒரு நாள் சர்வதேசப் போட்டி.*

*ஜனவரி 26, 28: ஆஸ்திரேலியா எதிர் இலங்கை 'ரி-20' சர்வதேசப் போட்டி.*

*பெப்ரவரி 1,3,6,8,10 : ஆஸ்திரேலியா எதிர் மேற்கிந்தியத் தீவுகள் ஒரு நாள் சர்வதேசப் போட்டி.*

*பெப்ரவரி 13: ஆஸ்திரேலியா எதிர் மேற்கிந்தியத் தீவுகள் 'ரி-20' சர்வதேசப் போட்டி. (5)*



## பயிற்சியாளராக கெபேலோ

ரஷ்ய உதைபந்து அணிக்கு இங்கிலாந்து அணியின் முன்னாள் பயிற்சியாளர் பேபியோ கெபேலோ பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஐரோப்பிய கிண்ண உதைபந்து தொடரில் ரஷ்ய அணி படுதோல்விகண்டு முதல் சுற்றிலேயே தொடரிலிருந்து வெளியேறியது. இதையடுத்து அந்த அணியின் பயிற்சியாளராக இருந்த டிக் அடாவகேட் தனது பதவியை இராஜினாமா செய்தார்.

தற்போது ரஷ்ய அணிக்கு இங்கிலாந்து அணியின் முன்னாள் பயிற்சியாளர் பேபியோ கெபேலோ பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இரு ஆண்டுகளுக்கு அதாவது எதிர்வரும் 2014 ம் ஆண்டு உலகக் கிண்ணம் வரை ரஷ்ய அணிக்கு பயிற்சியாளராக அவர் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். கெபேலோவுக்கு சம்பளமாக ஆண்டுக்கு 7.8 மில்லியன் பவுண்ட்ஸ் வழங்கப்படும் எனத் தெரிகிறது. இத்தாலியை சேர்ந்த பேபியோ கெபேலோ தற்போது 66 வயது நிரம்பியவர். ரியல்மாட்ரிட், ஏ.சி.மிலான், ரோமா, இன்டர்மிலான் போன்ற புகழ் பெற்ற அணிகளுக்கு பயிற்சியாளராக இருந்தவர்.

கடந்த 2008 ஆம் ஆண்டு முதல் இங்கிலாந்து அணிக்கும் கெபேலோ பயிற்சியாளராக இருந்து வந்தார். இங்கிலாந்து அணியின் தலைவராக இருந்த ஜான்டெர்ரி மீது இனவெறி குற்றச்சாட்டு கூறப்பட்டதையடுத்து, அவரை தலைமைப் பதவியில் இருந்து எப்.ஏ நீக்கியது. இதையடுத்து ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால் பேபியோ கெபேலோ கடந்த பெப்ரவரி மாதம் இங்கிலாந்து பயிற்சியாளர் பதவியை இராஜினாமா செய்தார். (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம், மானிப்பாய், நெல்லியடியில் புதிய பிரிவுகள் ஆரம்பம்!!!

**Diploma in Mobile Phone Repairing**
(Software & Hardware Repairing)
(பல புதிய விடயங்களுடன்)
(எமது இக் கற்கை நெறியை கற்பதன் மூலம் 100% நீங்கள் Mobile Phone இனை திருத்தி கொடுக்க முடியும்)

சகலவிதமான கைத்தொலைபேசிகளையும் மிகக் குறுகிய காலத்தில் நீங்களே திருத்துவதற்கான சுயதொழில் வாய்ப்புக் கற்கை நெறி !!! (சி/1607)

வகுப்பு ஆரம்பம் :- வரும் ஞாயிறு, திங்கள் கிழமை காலை 10 மணிக்கு
ஜேர்மன், சுவிஸ் (டொச்) மொழி வகுப்புக்களும் ஆரம்பமாகவுள்ளன!!
உங்கள் பதிவுகளை உடன் மேற்கொள்ளவும் !!

By:-S.Selvathashan B.Sc (Hons), M.Sc in ICT
விபரங்களுக்கு :- UNI - ICT CAMPUS
No - 83, Palaly Road,
Kantharmadam, Jaffna.
T.P No : - 021 - 321 - 6433 / 0777 110862

## அல்காவின் ஆனந்த ராகங்கள்

இவ்வாரஇறுதியில்(21,22.07.2012) நடைபெற இருந்த அல்காவின் ஆனந்த ரகங்கள் நிகழ்ச்சி தவிர்க்க முடியாத காரணத்தால் அடுத்த வாரம் நடைபெறும் என்பதை இரசிகர்களுக்கு அறியத் தருகின்றோம்.

நிகழ்ச்சி ஒருங்கமைப்புக்குழு
சிலோன் ஆர்ட் கிரியேஷன்,யாழ். கிளை. (சி/1608) (14.3)

## பணக்கார அணியாக மான்செஸ்டர் யுனைட்டட்

உலகின் பணக்கார விளையாட்டு அணிகளில் மான்செஸ்டர் யுனைட்டட் தொடர்ந்து முதலிடத்தில் உள்ளதாக போர்ப்ஸ் இதழ் தெரிவித்துள்ளது. உலகின் பணக்கார விளையாட்டு அணிகளின் பட்டியலை போர்ப்ஸ் இதழ் வெளியிட்டுள்ளது. இதில் 2.33 பில்லியன் யு.எஸ்.டொலர்கள்மதிப்புடன் மான்செஸ்டர் யுனைட்டட் முதலிடத்தைப் பிடித்துள்ளது. கடந்தஆண்டுபட்டியலிலும் மான்செஸ்டர் யுனைட்டட் அணி 2.61பில்லியன் யு.எஸ். டொலர்களுடன் முதலிடத்தை வகித்தது. ஸ்பெயின் ஜாம்பவான் ரியல் மாட்ரிட் 1.88 பில்லியன் யு.எஸ்.டொலர்கள்மதிப்புடன்தொடர்ந்து 2 ஆவது இடத்தில் உள்ளது.

அமெரிக்க பேஸ்பால் அணியான நியூயோர்க் யான்கீஸ் 1.85 பில்லியன் டொலர் மதிப்புள்ள அணியாகும். இந்த அணிக்கு 3 ஆவது இடம் கிடைத்துள்ளது. அமெரிக்கன் உதைபந்து அணியான டல்லாஸ் கவ்பாய் 1.85 பில்லியன் டொலர்கள் மதிப்புடன்4ஆவதுஇடத்தைப் பிடித்துள்ளது. மற்றொரு அமெரிக்கன் உதைபந்து அணியான வாஷிங்டன் ரெட்ஸ்கின்ஸ் 1.56 பில்லியன் யு.எஸ்.டொலர்கள் மதிப்புடன் 5 ஆவது இடத்தைப் பெற்றுள்ளது.

Enhance Your Chances of winning a top job in your field
Earn a USA or UK Qualification with MCAI CAMPUS
Admission Open for Next Intake
மேலதிக விபரங்களுக்கு நேரில்
MCAI CAMPUS
Supported by Jaffna Computer Society
SMS Your name & top Job to 775520940 & Get Schol.
கல்வியங்காட்டில் 243,Adiyapatham Road

**Jenny Cabs**




Dropping Charge 1km - 45/=
Up & Down Charge 1km - 35/=

CALL TAXI
077 4949555 (சி/1462)
No.15, Sirampiyadi lane,(above cosy Hotel) Jaffna.
Hotline: 077 4949555 Land Phone: 021 222 8250

## BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
அனைத்துப் பிரிவுகளுக்குமான புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன

| Batch I: 21-07-2012 | Batch II: 22.07.2012 | Batch III: 23.07.2012 |
|---|---|---|
| 09.00 - 12.00 | 03.00 - 5.00 | 09.00 - 12.00 |

**BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது**
City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் IELTS - 4.5 இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும். (சி/1499)
2 Months

**IELTS (Students Visa மூலமாக வெளிநாடு செல்பவர்களுக்கானது)**
(International English Language Testing System)
We guarantee minimum band 5.0 Upwards
2½ Months

**A1 Exam - Sponsor /Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை**
- U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
- எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும்
- சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
- நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
- ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது

2 Months

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

Head Office: 30 -1/14, w.A.De Silva Mw. Colombo - 6 Tel: 2500207
Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550
Vavuniya Branch: No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpulliyamkulam, Vavuniya. Tel: 024 324 5287

Hot Lines: 0777585913 / 0777 222 422 / 071 4299935 / 0777730074

## சர்வதேச விசா விற்பன்னர்கள் பங்குபெறும் திசைகாட்டியின் மாபெரும் விசா விழிப்புணர்வுக் கருத்தரங்கு

கனடா, ஆஸ்திரேலியா, மலேசியா, நியூசிலாந்து போன்ற பன்னாட்டு குடும்ப, **student** விசாக்களிற்குரிய சட்ட ரீதியான ஆலோசனைகள், வழிகாட்டல்கள், திசைகாட்டல்கள்.

இடம் TILKO HOTEL K.K.S. ROAD,JAFFNA.
காலம்- 22.07.2012 ஞாயிறு மு.ப 10 மணி
பிரவேசம் முற்றிலும் இலவசம்

21.07.2012 பி.ப. 4 மணிக்கு முன் 0212219016 என்ற தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு முன்பதிவு செய்தல் அவசியம். இதுவும் திசைகாட்டியின் சமூகப் பொறுப்போடு கூடிய கைங்கரியமாகும்.

திசைகாட்டி பிறைவேற் லிமிட்
(PV 82703)



முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்
37, சிவகுருநாதர் ஒழுங்கை, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். (20617)(15-14)

## மரண அறிவித்தல்

### செல்வி அனுர்ஜா இலட்சுமிகாந்தன்



கனடா **Scarborough** வை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அனுர்ஜா இலட்சு மிகாந்தன் கடந்த (14.07.2012) சனிக்கிழமை சிங்கப்பூரில் அகால மரணம் அடைந்தார்.

அன்னார் கனடாவில் வசிக்கும் இலட்சுமிகாந்தன்-சந்திரலீலா தம்பதியரின் அருமைப் புதல்வியும், அனிசனின் ஆருயிர் சகோதரியும் காலஞ்சென்ற செல்லத்துரை மற்றும் மீனாட்சிப் பிள்ளை, காலஞ்சென்ற சின்னத்தம்பி மற்றும் தெய்வானைப்பிள்ளை ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் பரமேஸ்வரி - ஜெயலோகராஜா (சுவிஸ்), மகேஸ்வரி - பரமேஸ்வரன் (சிறுப்பிட்டி), மாசிலாமணி- கதிர்காமநாதன் (சுவிஸ்), இராதாகாந்தன் - வனிதா (கொழும்பு) ஆகியோரின் அன்புப் பெறாமகளும், காலஞ்சென்ற கணேசகுமாரன் மற்றும் மஞ்சுளேஸ்வரி (ஜேர்மனி), கமலாதேவி - கங்காதரன் (நல்லூர்) ஆகியோரின் அன்பு மருமகளும், ஜனுஜா (சுவிஸ்), அசோயன் (சுவிஸ்), ஜீவிதா (சிறுப்பிட்டி), கார்த்திகா (சிறுப்பிட்டி), அபீரன் (சுவிஸ்), அஜீர் (சுவிஸ்), கானப்பிரியா (கொழும்பு) ஆகியோரின் உடன் பிறவா சகோதரியும் ஜெயமுகன் (டென்மார்க்), விமல்(B.O.C.) ஸ்ரீசசிகரன் (ஜேர்மனி), அதிசன் (ஜேர்மனி), வினுசன் (ஜேர்மனி), குமாரதாஸ், சதீஸ்வரதாஸ், சாயிதேவதாஸ், கஜானனி (நல்லூர்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (22.07.2012) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பாடசாலை ஒழுங்கை,
சிறுப்பிட்டி தெற்கு,
சிறுப்பிட்டி. (20531) (3.6.7)

தகவல்-
பரமேஸ்வரன்-மகேஸ்வரி (பேபி)
(பெரியம்மா)

## உடனடி வேலை வாய்ப்பு

எமது நிறுவனத்துக்கு பாரஊர்தி / சிற்றூர்தி என்பவற்றுக்கான சாரதி பணிநிலை வெற்றிடமாக உள்ளது. கீழ் குறிப்பிடப்படும் தகைமைகள் உள்ளவர்கள் 2012.07.21,23 ஆம் திகதிகளில் காலை 9.00- 12.00 மணிவரையும் கீழ்குறிப் பிடப்படும் முகவரிக்கு நேரில் வரவும்.

- கனரக வாகன சாரதி அனுமதிப்பத்திரம்
- வயது 30- 50
- சிங்களம் பேசத் தெரிந்திருக்க வேண்டும்
- வவுனியா, கொழும்பு பிராதான வீதிகளில் வாகனம் செலுத்திய அனுபவத்துடன் 3 வருட சாரதி அனுபவம் இருத்தல் வேண்டும்.
- மாதாந்த சம்பளத்துடன் றிப் அலவன்ஸ் வழங்கப்படும்.

முகாமையாளர்
லக்ஷ்மி என்ஜினியறிங்
இல.105, இராஜ வீதி,
திருநெல்வேலி கிழக்கு,யாழ்ப்பாணம்.

தொடர்பு - 0215670256 (சி/1599) (6.14.3)

உயர் வகை பல்வைத்திய சேவைக்கு
## INTERNATIONAL DENTAL CARE




★ எமது யாழ். கிளையில் மூன்று நவீன தொழில்நுட்ப சிகிச்சை அறைகளுடன் முழு நேரமாக சேவை நடைபெறுகிறது

Jaffna branch
No:84, Stanly Road, Jaffna, Srilanka.
Tel: 0212220833
0214923353

Vavuniya branch
Raaj Medical Lab
NO:10,Bazaar street, Vavuniya, Srilanka.
Tel:-0242221577
0244925527

E-mail: Internationaldentalcare@gmail.com
Hot Line : 0114-422844 (20502) (15-14)

Colombo Branches
wellawatta
No:67,W.A.Silva mawatha Wellawatta, Colombo -06, Srilanka.
Tel: 0112507070
0114380803

Dehiwala
No: 02, Vandavat place, Dehiwala
Tel: 0115679031
0114374351

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21.07.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

சத்தியம் தனியாக
நின்று வெற்றி பெறும்
பொய்க்குத்தான்
அடியாள்கள் தேவை.
-எபிக் டெட்டஸ்-

# வார வசந்தம்

01

உதயன் 21 ஜூலை 2012 சனிக்கிழமை பக்கங்கள்: எட்டு

# முன்னாள் போராளிகளை வாழ விடுங்கள்

■ துன்னாலைச் செல்வம்



முன்னாள் போராளிகளுக்கான இயல்பு வாழ்வுக்கான வழியினை ஏற்படுத்திக் கொடுக்காமல், ஆயுதம் தூக்கிய ஒரே காரணத்துக்காக மேலும் மேலும் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்படும் இவர்கள் வாழ்வில் எப்போது விடிவு ஏற்படும்?

புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட முன்னாள் போராளிகளின் வாழ்வு இன்றும் விடுதலை இல்லாமல் நாளாந்தம் அச்ச உணர்வுடனேயே நகர்கின்றது. இவர்களின் இயல்பு வாழ்வு விடயத்தில் அரசு அக்கறைகொள்வதாக வெளி உலகுக்கு தெரியப்படுத்தி வருகிறது. ஆனால் புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் தமது வாழ்வில் நரக வேதனையை அனுபவித்து வருகின்றனர்.

முன்னாள் போராளிகளை வீதிகளில் சந்திக்கும்போது அவர்களின் முகத்தில் அச்ச உணர்வு பீடித்திருப்பதைப் பார்க்க முடிகிறது. அவர்களுடன் உரையாடும் போது தமது வாழ்வோடு ஒட்டிய பிரச்சினையைக்கூட வெளியே சொல்லமுடியாத அவலத்தில் இருப்பது தெரிகிறது.

அந்தளவுக்கு முன்னாள் போராளிகள் விடயத்தில் துளியளவு அக்கறையும் எடுக்காத அரசு, எப்படி அவர்களின் வாழ்வாதாரத்துக்கு உதவப் போகின்றது? இப்போதுமுன்னாள் போராளிகளின் உயிருக்கும் பாதுகாப்பில்லாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

மூன்றுதசாப்த போர் முடிவடைந்து மூன்று வருடங்களாகியும் இன்னும் முன்னாள் போராளிகளின் வாழ்வில் சோதனைகள் தொடர்ந்துகொண்டிருப்பது வேதனை தரும் விடயமாகும். இறுதிக்கட்டப் போரில் படையினரிடம் சரணடைந்து புனர்வாழ்வு பெற்று வெளியே வந்தும் இயல்பு வாழ்வை குலைக்கும் நோக்கில் மர்மநபர்களால் மேற்கொள்ளப்படும் விசாரணைகள் அவர்களிடத்தே பெரும் பயப்பீதியை ஏற்படுத்தியுள்ளது. மீண்டும் தடுப்பு முகாம்களுக்குள் அடைபட்டு விடுவோமோ என்ற அச்சத்தில் நாள்களைக் கழித்து வருகின்றனர்.

நட்டாங்கண்டல், வன்னி விளாங்குளம், பாண்டியன் குளம் போன்ற பகுதிகளில் மோட்டார் சைக்கிள்களில் வரும் மர்மநபர்கள் முன்னாள் போராளிகளின் பட்டியல் ஒன்றை வைத்துக்கொண்டு ஊர் மக்களிடம் அவர்களின் இருப்பிடங்களை விசாரிக்கிறார்கள் அவர்களின் இருப்பிடங்களுக்குச் சென்ற மர்ம நபர்கள் அவர்களை விசாரணைக்காக குறித்த பகுதியில் உள்ள பாடசாலைக்கு அழைத்துச் சென்றுள்ளார்கள்.

அங்கு கடும் தொனியில் அவர்களை விசாரித்தபின் உடல் ரீதியான தாக்குதல்களிலும் மர்மநபர்கள் ஈடுபட்டுள்ளனர். அத்துடன் "உங்களை நாங்கள் விசாரித்தது பற்றி ஒருவரும் முறையிடக்கூடாது. அவ்வாறு முறையிட்டால் மீண்டும் தடுப்பு முகாமிற்கு செல்ல நேரிடும்" என்று எச்சரிக்கை விடுக்கப்பட்ட பின்னரே முன்னாள் போராளிகள் வீடு திரும்ப அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

முன்னாள் போராளிகளின் மீதான இத்தகைய நடவடிக்கையில் கொழும்பில் இருந்து வந்துள்ள விசேட புலனாய்வுப் பிரிவொன்றே ஈடுபட்டுள்ளதாக சந்தேகிக்கப்படுகிறது. இந்தச் சம்பவமானது முன்னாள் போராளிகளின் இயல்பு வாழ்வில் இடியாக விழுந்துள்ளது. இதன் காரணமாகவே முன்னாள் போராளிகள் ஒவ்வொருவரின் மனதிலும் இந்த நாட்டை விட்டு வெளியேறிவிடவேண்டும் என்ற துடிப்பு காணப்படுகிறது. அச்ச உணர்வு பீடித்திருக்கும் இடங்களில் வாழ்வதற்கு எவருக்குத்தான் துணிவு வரும். இயல்பு வாழ்வில் தங்களை இணைத்துக்கொள்ள விரும்பும் முன்னாள் போராளிகள் போர் மேகம் இல்லாத சூழலில் வாழ விரும்புகின்றார்கள். இவர்கள் விடயத்தில் அரசு முழுக்கவனம் எடுத்து இப்படிப்



பட்ட அச்சம் நிறைந்த சூழலினை இல்லாமல் செய்து நிம்மதியாக வாழ வழியை ஏற்படுத்திக் கொடுக்குமா?

முன்னாள் போராளிகளுக்கான இயல்பு வாழ்வுக்கான வழியினை ஏற்படுத்திக்கொடுக்காமல் மீண்டும் அவர்கள் மீது ஏற்படுத்தப்படும் வன்முறைகளைக் கண்டும் காணாமல் இருப்பது அவர்கள் இந்த நாட்டை விட்டு வெளியேறுவதற்கான உந்துதலை ஏற்படுத்தி விடுகிறது.

ஆயுதம் தூக்கிய ஒரே காரணத்துக்காக மேலும் மேலும் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்படும் முன்னாள் போராளிகளின் வாழ்வில் எப்போது விடிவு ஏற்படும் என அவர்களின் பெற்றோர்கள் கேட்ட வண்ணம் இருக்கின்றனர்.

பயம் கொள்வது ஒரு மனிதனின் வாழ்வினை இல்லாமல் செய்துவிடும் அது உயிருக்கே ஆபத்தை ஏற்படுத்திவிடும் என்று அறிஞர்கள் சொல்வதைக் கேட்டிருக்கிறோம். அவர்கள் படித்ததில் வைத்து சொன்னார்களோ அல்லது அனுபவத்தில் தான் சொன்னார்களோ அது எமக்குத் தெரியாது. ஆனால் அதுதான் உண்மை

முன்னாள் போராளிகளின் வாழ்வில் இப்போது பயம் பீடித்திருக்கிறது. இந்தப் பயத்தினை இவர்களிடமிருந்து இல்லாமல் செய்வதற்கு எவர்தான் முன்வருவார்களோ என்று பார்த்துக் கொண்டு இருக்கின்றனர். தமது புனர்வாழ்வு முகாம் அடையாள அட்டையையே படையினர் எதற்காக திருப்பி வாங்குகின்றனர் என்று கூட தெரியாத நிலைமையில் கண்டிப்பாக இவர்கள் பயம் கொள்வது நியாயமானதாகும்.

தமிழர்கள் வாழும் பகுதிகள் எல்லாம் படையினர் அகலக்கால் விரித்து இருக்கின்றனர். தடுக்கிவிழும் இடமெல்லாம் படையினர் முகாம்களே இருக்கின்றன. இப்படியாக இருந்தும் முன்னாள் போராளிகளுக்கு பாதுகாப்பு இல்லாமல் இருக்கிறது. இனந்தெரியாதவர்கள் கூட தங்களை அச்சுறுத்துவதாக முன்னாள் போராளிகள் தெரிவிக்கின்றனர்.

இறுதிக்கட்டப் போரில் பல முன்னாள் போராளிகள் படையினரால் சித்திரவதைகள் செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்ட வீடியோ காட்சிகளை சனல்-4 வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இப்படிப்பட்ட வீடியோ காட்சிகளை பார்த்த முன்னாள் போராளிகள் தமக்கும் ஏதாவது இடம்பெற்றுவிடுமோ என்று அஞ்சியிருக்கும் போது மர்மநபர்கள் அவர்களை அச்சுறுத்துவது அவர்கள் மத்தியில் பயப்பீதியை மேலும் அதிகப்படுத்தியிருக்கிறது. இந்த பயப்பீதியானது எதிர்வரும் காலங்களில் அவர்கள் உள நோய்த்தாக்கத்திற்கு உள்ளாவதை தடுக்க முடியாத நிலமையாக மாறிவிடும்.

போர்க்குற்றச் சாட்டுக்களின் விசாரணைகள் முடிவுறாத சூழலில் மீண்டும் முன்னாள் போராளிகளை மர்ம நபர்கள் அச்சுறுத்தி வருவது தொடர்பான இந்தக் குற்றச்சாட்டும் படையினர் மீதே வந்து விழப்போகிறது.

தமிழர் விடயத்தில் இலங்கை அரசு அடுக்கடுக்கான குற்றச் சாட்டுகளை சுமந்து வருகிறது, இனியும் சுமக்கப்போகிறது என்பது இப்பொழுது இடம்பெறும் சம்பவங்களில் இருந்து தெரிகிறது. முன்னாள் போராளிகள் புனர்வாழ்வு பெற்று வெளியே வந்து இயல்பு வாழ்வுக்கு திரும்பிக்கொண்டிருக்கும்போது இப்படிப்பட்ட அச்சுறுத்தும் செயற்பாடுகள் அவர்களின் குடும்பங்களுக்கு மீண்டும் மீளமுடியாத சோகத்தை ஏற்படுத்தி இருக்கிறது.

வன்னிப் பகுதியில் இடம்பெறும் தீய சம்பவங்கள் முழுமையாக வெளியுலகுக்கு தெரியாமல் அங்கேயே அடங்கிப் போகின்றன. மீளக் குடியமர்ந்த மக்கள் தமது வாழ்வினை நகர்த்த முடியாமல் அவதிப்பட்டுக்கொண்டிருக்கும் நிலையில் மீளக்குடியமர்ந்த முன்னாள் போராளிகளின் குடும்பங்களின் நிலை அதைவிட பரிதாபகரமானது. இரவு நேரங்களில் தெருவிலே வாகனச் சத்தம் கேட்டு அவர்களின் தூக்கம் கலைந்த நாள்களை எண்ண முடியாது. புதிய முகங்களைப் பார்க்கின்ற போதும் அவர்களிடம் ஒரு பயப்பீதி ஏற்படுகின்றது. ஒவ்வொரு நாளும் நரக வாழ்வினை நகர்த்திச் செல்லும் முன்னாள் போராளிகளில் சிலர் இறுதியில் தற்கொலையையும் தெரிவு செய்துள்ளனர்.

இப்படியாக இவர்கள் வாழ்வில் சோதனை அதிகரித்துக்கொண்டே செல்கிறதேயொழிய குறைவதற்கு வாய்ப்பேதும் இல்லாமல் இருக்கிறது. முன்னாள் போராளிகளின் வாழ்வாதாரத்துக்கு பெரும் தொகையான நிதியை அரசு ஒதுக்குகிறது. ஆனால் அந்த நிதியால் போராளிகள் பெற்ற பயன் என்ன என்பது இன்னும் தெரியவரவில்லை இவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த வெளிநாடுகளில் இருந்தும் நிதி கிடைக்கின்றன. அவற்றாலும் கிடைக்கும் பயன் என்ன என்பது தெரியவரவில்லை.

முன்னர் போரினை காரணம் காட்டி வெளிநாடுகளில் இருந்து நிதியினை வசூலித்த இலங்கை அரசு, இப்பொழுது முன்னாள் போராளிகளின் பெயரில் வெளிநாடுகளிடம் இருந்து நிதியினை வசூல் செய்கிறது. இலங்கை அரசுக்கு என்றைக்குமே வெளிநாடுகளிடமிருந்து நிதியினைப் பெறுவதற்கு தமிழர்கள்தான் தேவைப்படுகின்றனர். ஆனால் அந்த நிதி தமிழர்களுக்கு ஒரு போதுமே உதவப் போவதில்லை என்பது கடந்த கால அனுபவங்களில் இருந்து தெரிகிறது. பகடைக் காய்களாக தமிழர்களைப் பயன்படுத்தும் சிங்கள அரசு அந்த மக்களின் அத்தியாவசிய தேவைகளில் சிறுதுளி அளவைக் கூட நிறைவேற்றப் பின்னடிக்கிறது.

முன்னாள் போராளிகளின் வாழ்வாதாரத்தில் எந்தவிதமான முன்னேற்றத்தையும் ஏற்படுத்தாமல் இருக்கும் இலங்கை அரசு அவர்களை அச்சுறுத்துபவர்களையாவது தடுக்கும் வழியினை ஏற்படுத்திக்கொடுக்குமா என்பது கேள்விக் குறியே. போர் இடம்பெற்ற காலப்பகுதியில் வன்னி மண் பாதுகாப்புள்ள ஒரு சுதந்திரமான இடமாக இருந்தது. போர் முடிவடைந்து மூன்றாண்டுகள் கடந்தும் வன்னி மண் பழைய நிலைக்கு வரமுடியாமல் தவிக்கிறது.

அழுத்தங்கள் பிரயோகிக்கும் இடத்தில் விடுதலைக்கான தேடல் இருக்கும். இதுதான் உலக வரலாறு. அந்த அழுத்தங்களில் ஏற்படும் மனக்காயங்கள் எந்த மருந்தினைப் போட்டாலும் ஆறாது. கூடிக்கொண்டே செல்லும் அழுத்தங்களில் இருந்து ஒன்று மட்டுமே தெரிகிறது. அதாவது இலங்கையில் தமிழர்கள் ஒருபோதுமே நிம்மதியாக வாழமுடியாது என்பது மட்டும் தெளிவாகத் தெரிகிறது. ஆயுதம் தூக்கி போராடிய காலங்களில் இருந்த துணிவு பாதுகாப்பு இப்போது இல்லாமல் இருக்கிறது. மீண்டும் அதே நிலைமையை ஏற்படுத்த முயற்சிக்கின்றனர் போலும். போரினால் சுகபோகம் அனுபவித்த தலைமைக்கு என்றைக்குமே அமைதியைப் பிடிக்காது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் கைரேகைகளின் பலன்கள்

22

விதிரேகையின் அமைப்பு மேலும் தொடர்கிறது







10. விதி ரேகையில் தீவும், புத்தி ரேகை ஆரம்பத்தில் சிக்கலான குறிகளுமிருந்தால் தொழிலில் மனம் செல்லாததையும், வருவாயைத் தடுப்பதையும் குறிக்கும். ஆரோக்கியமும் அதற்கேற்ப சீர்குலைத்து விடும் என்பதை ஆயுள் ரேகையினின்றும் தெரிந்து கொள்ளலாம்.

சுக்கிரமேட்டின் மேல்பாகத்தில் ஒரு நட்சத்திரக் குறியுமிருந்தால் இளமையில் பெற்றோரையிழப்பர் என்பதைக் குறிக்கும்.

கொடிது கொடிது இளமையில் வறுமை என்பது போல அக்காலத்தில் பலவாறான கஷ்டங்களும் ஒருங்கே சேரும். சுக்கிர மேட்டின் தொந்தரவுக்குரிய ரேகைகளும் குறுக்கிட்டுத் தோன்றும். நல்ல காலம் வரும்போது சிக்கல் சுலபமாய் நீங்கி எல்லாம் சிறப்பாகவும் இலாபகரமாயும் நடைபெறும்.

**விதி ரேகையின் குற்றங் குறைகள்**

1.விதி ரேகையின் குறிக்கிட்ட துண்டு ரேகைகள் நன்மைக்குத் தடைகளாய் அமைகின்றன. ஒவ்வொன்றும் அந்தந்தக் கால அளவில் ஏற்படுகிறது. இது எவ்வளவுக்குப் பதிந்து காணப்படுகிறதோ, அவ்வளவுக்குக் கடுமையானது என்பதை சிந்திக்க வேண்டும். குறுக்கிட்ட துண்டு ரேகை (மங்கலாய்) மெல்லியதாகப் பட்டும் படாமலுமிருந்தால், தடை சுலபமாய் மாறிவிடும். என்றாலும், மனத்துக்கு அடுத்தடுத்து சங்கடத்தைக் கொடுக்கும். குறுக்கிட்ட துண்டு ரேகை இரண்டாக விதி ரேகையை வெட்டிவிடுமாயின் தொழில் அல்லது நன்மைக்கு ஆபத்தெனத் திட்டமாகக் கருதவேண்டும். உத்தியோகமாயின் ஏதாவது காரணங்கொண்டு நீங்கிவிடும். தொழிலாயின் நடைபெறுவதற்குத் திடமான ஒரு தடை காரணத்தால் நின்றுவிடும்.

2.விதி ரேகை துண்டு துண்டாய் அமைந்து விடில்மிகச் சங்கடத்தைக் குறிக்கும். விதிரேகையின் துண்டுகளின் இடைவெளியான கால அளவில் வருமானமில்லை யென்பதும் துரதிர்ஷ்டமென்பதும் அறியத்தக்கது. வாழ்வு சிக்கலாயும் மனசு சங்கடமாயும் இருக்கும். புதிய நன்மைக்கு முயற்சி செய்ய வேண்டும். வாழ்நாளெல்லாம் கவலையுடையதாயிருக்கும். விதி ரேகையில் இடைவெளி பெரிதாயிருந்தால் நீண்ட காலம் துரதிர்ஷ்டம் என்பதைக் குறிக்கும்.




3.துண்டுபட்ட விதி ரேகைகளின் இடைவெளியின் பக்கத்தில் ரேகை யிருந்தாலும், சதுரமான இணைப்பு அமைந்திருந்தாலும் சீர்படும். அதாவது பலவித சங்கடங்களுக்குட்பட்டு, மிகுந்த பிரயாசையின்மேல் காரிய சித்தி யாவதைக் குறிக்கும். இதற்கு மனோபலமும் இடைவிடாமுயற்சியும் அவசியமாகும். நல்லொழுக்கமுள்ளோர் கஷ்டப்பட்டாலும் புத்தியின் பலத்தால் முன்னேற்றம் அடையலாம். விதி ரேகை வெட்டுப்பட்டவிடத்து மறுகையையும் பார்ப்பது நலமாகும்.

ஆண்களது வலக்கையில் ரேகை பின்னற்பட்டும், இடக்கையில் குற்றமில்லாமலும் விதி ரேகை அமையக்காணலாம். இது வழி தவறி எக்காரணத்தாலோ தடுமாற்றமடைவதை விளங்கும்

4.விதிரேகை ஒழுங்காகப் போயிருந்தும், மெல்லியதாயும் , தடித்தும், முடிச்சு விழுந்ததுபோலவும் இருந்தால் குறுகிய தான காலத்தில் காரியசித்தியும், மற்றக் காலங்களில் விருத்திக் குறைவும் உண்டாகும். ரேகை பதிந்து பள்ளமாயும் குழி போன்றும் இருந்தால் அக்காலத்தில் நன்மை கிட்டாது.

விதி ரேகை பாம்பு போல வளைந்து வளைந்து போயிருந்தால், புதிய புதிய தொழில்களில் ஈடுபடுவதைக் குறிக்கும். வளைந்து போகும் ரேகை மெல்லியதாயும் தடித்துமிருப்பின் வாழ்கையில் அடிக்கடி கஷ்டமும், பிரயாண காலத்தில் சில சங்கடங்களும் உண்டாகும்.

**(தொடரும்)**

---

# வாழ்நாள் முழுமையும் இனிமையே

வலையவன்

மனிதனின் ஆரோக்கியமென்பது உண்ணும் உணவு, வாழுமிடம், சுற்றுப்புறச் சூழ்நிலை மற்றும் மனோநிலை ஆகியவற்றைப் பொறுத்து அமைவது. உணவுப்பொருள்களை விதைத்து விளைவிப்பது முதல், உணவாகப் பாகம் செய்து உண்பது வரை, அனைத்தும் இப்போது இரசாயனமயமாகி விட்டது.

இதனை உண்ணும் நமது உடலில் இரசாயனம் படிவதால், உடலியக்க ஒழுங்கியல் கெட்டு, பல சீர்கேடுகள் ஏற்படுகின்றன. இயற்கையை உரமாக்கி, சில உயிரினங்களைப் பூச்சிகொல்லியாகப் பயன்படுத்தி, இயற்கை வழியில் விளைச்சலெடுக்க தற்போது விழிப்புணர்வு ஏற்பட்டிருக்கிறது. இந்த விழிப்புணர்வு ஒரு புரட்சியாகப் பரவ வேண்டியது கட்டாயம். விளைநிலத்தின் உயிர்ச்சூழலைப் பாதுகாப்பது நமது தலையாய கடமை.

முன்பெல்லாம் ஆற்று வெள்ளத்தை மேலிருந்து நோக்கின் தண்ணீரில் ஓடும் மீன்களையும், சிதறிய கற்களையும், படிந்த மணலையும் கூட காண முடிந்தது. அவ்வாறிருந்த தெளிநீர் இன்று குழம்பாக, விஷமாக, கலங்கலாக மாறியதுதான் சோதனை. கழிவுகள் எல்லாம் ஒருசேர சங்கமித்து ஒழுகும் ஆற்றுநீரைப் பருகுவதால் பல்வேறு நோய்களுக்கு ஆளாகின்ற அவல நிலை. கொதிக்க வைத்த நீரை மட்டுமே பருக வேண்டுமென்கிற உறுதி அனைவருக்கும் வர வேண்டும். குடிநீர் மாசடைந்ததற்கு நாமே காரணம். சுகாதாரமற்ற இடங்களில் உணவருந்தலும், நீரருந்தலும தவிர்த்தல் முக்கியம்.

சிறந்த நோய் எதிர்ப்புச் சக்தி பெற வேண்டின் நல்ல சத்தான உணவுகளை உண்ண வேண்டும். அரிசி, கோதுமை இவற்றுடன் பிற தானியங்களையும், பருப்பு-பயறு வகைகளையும் பயன்படுத்த வேண்டும். நல்ல சாதம், பருப்புக் குழம்பு, காய்கறிப் பொரியல், கீரை, ரசம், மோர் இவற்றை உள்ளடக்கிய உணவை விட உடல் நலம் பேணும் சரிவிகித உணவு வேறு இருக்க முடியுமா? பழ வகைகளை விரும்புவதிலும் தீவிரம் காட்ட வேண்டும். மருத்துவம் பரிந்துரைக்குமளவு தண்ணீர் பருகிட வேண்டும். எல்லாம் செய்யின் அபாரமான நோய் எதிர்ப்புச் சக்தி நிச்சயம்.



சுவாசிக்கும் காற்று இன்று அனேகமாக மாசடைந்துவிட்டது. பெருகி வரும் வாகனங்களின் புகை, தொழிற்சாலைகள் மேல் நோக்கி விடும் கழிவுகள், மக்கள் தொகைப் பெருக்கம், பொது சுகாதாரச் சீர்கேட்டால் எண்ணற்ற நோய்க்கிருமிகள் என்று நீண்ட பட்டியலாக காற்று மண்டலத்தில் நோய் விளைவிக்கும் அசுர சக்திகள் ஏராளம்.

**பொது சுகாதாரச் சீர்கேட்டால் எண்ணற்ற நோய்க்கிருமிகள் என்று நீண்ட பட்டியலாக காற்று மண்டலத்தில் நோய் விளைவிக்கும் அசுர சக்திகள் ஏராளம்.**

நலன் பல விளைவிக்கும் ஓசோன் மண்டலமும், நன்னிலை கெட்டு தோல் புற்றினைக் கூட தோற்றுவிக்கும் அபாயம்! மக்கள் அனைவரும் சமுதாய நலனில் கட்டாயமாக அக்கறைகாட்டின் நல்ல உணவும், நல்ல குடிநீரும், செம்மையான சூழ்நிலையும் கிடைக்கும். பொது இடங்களில் மலம் கழிப்பதைத் தடுக்கவும், எச்சிலைத் துப்புவதைத் தவிர்க்கவும் முதலில் நடவடிக்கை எடுக்க வேண்டும். வீட்டுக் கழிவுகளிலிருந்து தொடங்கி மருத்துவமனைக் கழிவுகள் ஈறாக, அனைத்தையும் தொல்லையில்லாமல் வெளியேற்ற, கழிவுப் பொருள் வசதிகளைச் சீராக ஏற்படுத்த வேண்டும். இதனால் மலேரியா, டெங்கு முதலான நோய்களை விரட்டலாம்.

நோய் எதிர்ப்புச் சக்தியைப் பெருக்கிட இன்று சித்த மருத்துவத்தில் வருகின்ற மருந்துகள் ஏராளம். சித்த மருத்துவம் சொல்லும் காயகற்ப மருந்துகள் இவ்வகையைச் சார்ந்தவையே.

இவை நாள்பட்ட நோயைக் கூட நீக்க வல்லவை. காயகற்பம் எனும் சொல் நரை, திரை, மூப்பு, பிணி அகற்றி உடலை அழியாது பாதுகாக்கும் முறை என்ற பொருள் உடையதாகும். வயோதிகத்தின் காரணமாக விளையும் மாற்றங்களால், உடலில் காணும் தொந்தரவுகளுக்குக் கூட காயகற்ப மருந்துகள் ஒரு பாதுகாப்பே.

[தொடரும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தேள்

சா.ஜிந்துஜா, கோண்டாவில்.

1. இவற்றில் 650 இனங்கள் உள்ளன.
2. ஆபிரிக்கத் தேள்கள் ஓரடி நீளம் வரை வளரும்.
3. மைக்றோ பூத்தஸ் என்ற தேள் 13mm நீளம்.
4. வடக்கு ஆபிரிக்க இனமக்கள் தேள்களை உணவாக உண் கின்றனர்.
5. நண்டுத் தேள்கள் கொட்டினால் உடனடியாக இறப்பு ஏற்படு கின்றது.

# ஜான்சி ராணி

ஆணுக்கு நிகர் பெண்ணென வாழ்ந்து காட்டியவர் ஜான்சிராணி. ஆங்கிலேயரை எதிர்ப்பதிலும் தம் நாட்டு மக்களை காப்பதிலும் சிறந்தவர். தனது தாய் நாட்டின் மீதும் மக்களின் மீதும் அன்பு கொண்டவர். இவர் ஒரு வீரப்பெண் மட்டுமன்றி சிறந்த தாயாகவும் விளங்கினார். இவரது மனமோ வெள்ளையானது. ஆங்கிலேயர்கள் வெள்ளையானாலும் அவர்களின் மனமோ அழுக்கானது. தனது தாய் நாட்டை ஆங்கிலேயரிடம் இருந்து காப்பதற்கு தன்னையே அர்ப்பணித்தார்.

ர.சு.ஜேஸ்வின், கி.சு.பள்ளீஸ், யா/புலோலி.



# பைசா சாய்ந்த கோபுரம்



போனாரோ பஸ்ஸானோ என்பவர் 1173இல் இந்த சாய்ந்த கோபுரத்தை கட்ட ஆரம் பித்தார். சதுப்பு நிலத்தில் கட்டப்பட்டதால் பத்தரை மீற்றர் உயரம் எழும்பியதுமே, கோபுரம் லேசாகச் சரிய ஆரம்பித்து விட்டது. என்றாலும் இந்தச் சரிவை கட்டடம் உயர உயரச் சரிசெய்து விடலாம். என்ற நோக்கில் மூன்று மாடிகள் வரை கட்டிவிட்டார் போனானோ. அத்துடன் நிறுத்தி விட்டார். பின்னால் டோமாஸ்ஸோ என்பவர் இந்த வேலையை தொடர்ந்து மேற்கொண்டு சாமர்த்தியமாக எட்டு மாடிகள் வரை கட்டினார். 1300 இல் இது முற்றுப் பெற்றது.

மொத்தம் 54 மீற்றர் உயரம் வட்டவடி வில் அமைந்த எட்டு மாடிகளுக்கும் வெளித் தாழ்வாரங்கள் உண்டு. ஒவ்வொரு மாடியி லும் உள்ள பால்க்னித் தூண்கள் அதற்கு மேல் உள்ள மாடிகளைத் தாங்குகின்றன. விசித் திரம் என்னவென்றால் இத்தனை உயரக் கோபுரத் துக்கு மூன்று மீற்றர் ஆழம் தான் அத்திபாரம் போட்டார்கள். கோபுரம் இன்று செங்குத்து நிலையிலிருந்து நான்கு மீற்றர் சாய்ந்து நிற்கிறது. உள்ளுக்குள் 293 படிகளைக் கொண்ட சூழல் மாடிப்படிகள் அமைக்கப்பட்டிருக்கிறது. உச்சியில் ஒரு மணிக்கூடும் இருக்கின்றது.

ஸ்ரீசண்முகநாதன்-தீபிகை, உடுவில் மகளிர் கல்லூரி, சுன்னாகம்.

# எஸ்தேனியா

சா.ஜிந்துஜா, கோண்டாவில்.





தலைநகர் டாலின். இதன் பரப்பளவு 43211 சதுர கிலோ மீற்றர். இங்கு வசிக்கும் மக்கள் தொகை 1,291,170. இவர்களின் மொழி எஸ்தோனியா மொழி, ரஷ்ய மொழி லூதரன் திருச்சபையை பின்பற்றும் கிறிஸ்தவ சமயம். 100 வீத எழுத்தறிவு உடையவர்களாகவுள்ளனர். விவசாயம், விலங்கு வேளாண்மை, மரத்தளபாடங்கள், புடைவைகள், தொலைத் தொடர்பாடல் உபகரணங்கள் என்பவற்றிற்கு புகழ் பெற்ற நாடாகவும் உள்ளது. இவர்கள் க்ரூன் நாணயத்தை பயன்படுத்துகின்றனர்.

# திருவள்ளுவர்



வி.லக்ஷிகா, 3 "F" பொஸ்கோ.

உலகம் போற்றும் தமிழ்ப் புலவர் திருவள்ளுவர். இவர் சுமார் இரண்டாயிரம் ஆண்டு களுக்கு முன் வாழ்ந்தார். இவரின் தாயார் பெயர் ஆதி. திருவள்ளுவரின் தந்தை பெயர் பகவான். இவரில் நற்குணங் கள் காணப்பட்டமையினால் இவரின்மேல் மக்கள் அன் பும், மதிப்பும் வைத்திருக் கின்றனர். இவரால் எழுதப் பட்ட திருக்குறள் 1330 குறட் பாக்களைக் கொண்டது. இது பல மொழிகளில் மொழி [illegible] யிலும் உருவச்சிலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

# நம்பிக்கை துரோகம்

ஊரெல்லாம் கடன் வாங்கி அதைத் திருப் பித்தராது ஏமாற்றிக்கொண்டிருந்தான் ஒரு பேர்வழி. அவன் முல்லாவிடம் ஒரு பெருந் தொகையை வாங்கி அவரையும் ஏமாற்றத் திட்டமிட்டான். நிச்சயமாக முல்லாவை ஏமாற்றி ஒரு பெருந்தொகையினை கடனாக வாங்கி வருவதாக பலரிடம் மார்தட்டிக்கொண்ட அவன். முல்லாவிடம் சாமத்தியமாக செயற்படத் திட்டமிட்டான்.

முல்லா தன்னை நம்பி பெருந்தொகையினைக் கொடுக்க மாட்டார் என்பதும் அவனுக்குத் தெரியும். அதனால் தன்மீது நம்பிக்கை ஏற்படு வதற்காக ஒரு நாடகம் நடிக்க எண்ணினான். ஒருநாள் அவன் முல்லா விடம் சென்றான் "முல்லா அவர்களே எனக்கு ஒரே ஒரு காசு கடனாகத் தர முடியுமா?" என்று கேட்டான். "நம்பிக்கை மோசம் செய்யாத யாருக்கும் நான் எவ்வளவு தொகைவேண்டுமானாலும் கடனாகத் தருவதற்குத் தயங்கமாட்டேன். நீ ஒரு காசுதானே கேட்கிறாய்! இதிலே நீ நம்பிக்கை மோசம் செய்யவில்லை என்றால் நான் உனக்கு பத்தாயிரம் காசுகள் கேட்டாலும் கொடுப்பேன்." என்று கூறி டம்பனுக்கு ஒரு காசினைக் கடனாகக் கொடுத்தார் முல்லா. டம்பன் நாலு ஐந்து நாள்கள் கழித்து முல்லா கொடுத்த ஒரு காசினை எடுத்துக்கொண்டு முல்லாவிடம் வந்தான். "முல்லா அவர்களே தாங்கள் கொடுத்தது அற்ப பொருள்தான் என்றாலும் மிகுந்த நாணயத்துடன் அதைத் திருப்பித்தருவது என்று வந்திருக்கிறேன். பணவிடயத்தில் நான் மிகவும் நேர்மையானவன் என்பதை தாங்கள் உணர்ந்துகொள்ளவேண்டும்" என்று கூறியவாறு டம்பன் அந்த ஒரு காசினை முல்லாவிடம் கொடுத்தான்.

முகத்தில் மலர்ச்சி இல்லாமல் ஏதோ அவஸ்த்தைப்படுபவர் போல் அதனை வாங்கிக்கொண்டார் முல்லா. டம்பன் அந்த இடத்தை விட்டு அக லாமல் தலையினைச் சொறிந்துகொண்டு நின்றான். "என்ன சமாச்சாரம்...?" என்று கேட்டார் முல்லா. "ஒன்றுமில்லை ஒரு ஐயாயிரம் பொற்காசுகள் தேவைப்படுகின்றது கொடுத்தீர்கள் என்றால் இதைத் திருப்பிக் கொடுத்தது போல் அதனையும் நாணயமாகத் திருப்பித்தருவேன்" என்றான் டம்பன்.

"உனக்கு இனி நான் ஒரு காசுகூடக் கடனாகக் கொடுக்க முடியாது" என்று கோபமாகச் சொன்னார் முல்லா.

"முதலில் நான் வாங்கிய ஒருகாசைத்தான் திருப்பித் தந்துவிட்டேனே" என்று ஒன்றும் விளங்காமல் கேட்டான் டம்பன். "நீ ஒரு காசு வாங்கிய விடயத்தில் நம்பிக்கைத் துரோகம் செய்துவிட்டாய்" என்றார் முல்லா. டம்பன் அதிர்ச்சியும் குழப்பமும் அடைந்தவனாய் "முல்லா நான் வாங்கிய தொகையினைத் திருப்பிக்கொடுத்திருக்கின்றபோது எவ்வாறு நான் நம்பிக்கைத் துரோகம் செய்ததாகக் கூறுகின்றீர்கள்" என்றான்.

"நம்பிக்கைத் துரோகம்தான் செய்துவிட்டாய் நான் கொடுத்த ஒருகாசை நீ திருப்பிக் கொடுக்கமாட்டாய் என நம்பினேன். நீயோ திருப்பிக் கொடுத்துவிட்டாய். ஆகவே நீ நம்பிக்கைத் துரோகம்தான் செய்து விட்டாய். உனக்கு ஒருகாசும் இனித் தர முடியாது" என்று கூறியவாறே முல்லா எழுந்து வீட்டுக்குள் சென்றுவிட்டார். டம்பன் அதிர்ச்சியுடன் வெளியேறினான்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பதினொரு வகையான தேசி வகை ஆடல்கள்



(கடந்த வாரத் தொடர்ச்சி)

### மரக்கால ஆட்டம்

*''காய்சின வவுணர் கடுந்தொழில் பொறா அன்*
*மாயவளாடிய மரக்காலாடலும்...''*

அதாவது அசுரர்களுக்கும் - துர்க்கைக்கும் இடையில் இடம்பெற்ற போரிலே நேருக்கு நேர் போர் செய்து வெல்ல முடியாத அவுணர்கள் துர்க்கை அம்மனை வஞ்சகமாக வெல்வதற்காக பாம்பு, தேள் முதலிய விஷயந்துக்களை ஏவி விட்டனர். அவற்றை வெல்வதற்காக துர்க்கையானவள் தனக்கு மரக்காலினைப்பூட்டி அந்த விஷ ஜந்துக்களை உழக்கிக் கொன்று, வென்று ஆடிய ஆடல் மரக்கால் ஆட்டம் ஆனது. மேலும்

''மாயஞ் செய் வாளவுணர் வீழ் நங்கை
மரக்கால் மேல் வாள மலை ஆடும் ஆயிற்''

என்று கூறுவதில் இருந்து துர்க்கை மரக்கால் மேல் நின்று அசுரரை வாளால் வெட்டியும் வீழ்த்தினாள் என்றும் அறியலாம்.

*''மாயவளாடல் மரக்கால் தற்குறுப்பு*
*நாம வகையில் சொல்லும் கால் நாக்கு''*

என்பதில் இருந்து இவ்வாடலுக்கு நான்கு உறுப்புக்கள் என்பதை அறியலாம். இதன் உடைய உருமாற்ற அமைப்பியலை பின்பற்றியதாகவே இன்றைய நிலையில் ஆடப்பட்டு வருகின்ற பொய்க்கால் குதிரை ஆட்டம் விளங்குகின்றது.

### பாவைக் கூத்து

இவ்வாடல் திருமகளால் ஆடப்பட்டது. அதாவது போரிலே நின்ற அசூரர்களை நிலைகுலையச் செய்வதற்காக திருமகள் அழகிய கொல்லிப் பாவை வடிவம் தாங்கி ஆடுகிறாள். இவ்வாடலைப் பார்த்து போர்க்களத்தில் நின்ற அசூரர்கள் மோகித்து மயங்குகின்றனர். கொல்லிப்பாவை என்பது கொல்லி மலையிலே காணுகின்ற அழகிய பாவை போன்ற ஒரு மாய உருவமாகும். இந்தப் பாவை தன் பேரழகால் காண்போரை மயங்கச் செய்யும் தன்மையுடையவள். கொல்லல் என்பது வருத்துதல் என்று பொருள்பட கொல்லிப்பாவை ஆடிய மற்றயவரை வருத்துதல்.

### கடையக் கூத்து

வாணாசூரனின் சோ நகரத்தின் வடக்கு வாயிலில் இந்திராணி வாணாசூரனை அழிப்பதற்காக அப்பகுதியில் உள்ள வயலின் ஓரத்திலேயே கடைசியர் (உழத்தி) வடிவம் தாங்கி ஆடிய ஆடலே கடயம் ஆகும். சோ நகரத்தின் கடைசி வாயிலில் ஆடியதால் இது கடையக்கூத்து எனக் காரணப் பெயர் பெற்றது. இதனை

*''வயலுழை நின்று வடக்கு வாயிலுள்*
*அயிராணி மடந்தையாடிய கடையமும்''*

என்று இளங்கோ கூறுகிறார். இதன் ஆடல்வெளி வயல் சார்ந்த நிலப்பரப்பு ஆகையால் இன்றைய கோலாட்டம், கும்மி, உழவர் நடனம் போன்றவற்றின் பின்னணியை உடையதாக இருக்கலாம். மேற்கூறப்பட 11 வகையான ஆடல்களும் இளங்கோ கூறும் தேசி (கிராமிய) வகை ஆடல்களாக விளங்குகின்றன. இவை ஒவ்வொரு ஆடலினதும் அமைப்பியல், கதைக்கரு, ஆடுகளம், அணிமணி, அலங்காரம் என்பவற்றை உற்றுநோக்கும் போது யாவும் தேசி மரபு ஆடல்களே என்பதில் எவ்வித சலனமும் இல்லை. எனினும் சிவபெருமானால் ஆடப்பட்ட கொடுகொட்டி, பண்டரங்கம் எனும் இரு வகைக் கூத்துக்களை ஒரு சிலர் கிராமியக் கூத்தாகக் கருதுவது இல்லை.

ஏனெனில் அவை சிவனால் ஆடப்பட்டது எனவும். சிவன் நடராஜனாக (பரத) நாட்டியத்திற்கு ஆதி தெய்வமானவர் என்கின்ற எண்ணத்தினாலேயே ஆகும். ஆனால் இறைவன் தன் திருவுருவங்களில் நடராஜனாக தாண்டவங்கள் ஆடியதுண்டு. அவற்றில் ஒன்று திரிபுர தாண்டவமும் கூட. எனினும் திரிபுர தாண்டவ வெற்றியின் நிறைவிலே எம்பெருமான் மக்கள் மகிழ்ச்சியை தன் மகிழ்ச்சியாக பாமர மக்களிடையே கூத்தனாகவும் ஆண்டியாகவும் ஆடிய ஆடலே இவை இரண்டும் இவ்வாறாகக் கூறப்பட்ட 11 வகை ஆடல்களும் அணிமணி அலங்காரங்களுடன் பொருந்தி நின்று ஆடல்- விழுந்து ஆடல் என்ற வகையில் நிறைவாக ஆடி முடித்தாள் மாதவி.

■ *அ.உமாமகேஸ்வரி*
உடுவில் தெற்கு, மானிப்பாய்





**தொ**லைக்காட்சி பார்ப்பதால் குழந்தைகளின் வலது மூளை, இடது மூளையை விட அதிகம் பணிபுரிந்து ஒரு நிலையற்ற சலன மனம் உள்ள மனிதரை உருவாக்கும். குழந்தைகளின் கவனிக்கும் திறனை ரி.வி. குறைக்கிறது. உணவு, உடை, உறைவிடம் இவற்றைப்போல் தொலைக்காட்சியும் நம் அன்றாடத் தேவைகளில் ஒன்றாகி விட்டது. இன்றைய இயந்திர வாழ்க்கையில், தொலைக் காட்சியே நடுத்தர, கிராமப்புற, நகர்ப்புற மக்களின் வருமானத்திற்கேற்ற பொழுது போக்கு அம்சமாக விளங்குகிறது.

உலகே ஒரு கிராமமாகச் சுருங்கிவிட்ட இன்றையச் சூழ்நிலையில் எந்த நாட்டில் இருந்தாலும் எந்த மொழி பேசினாலும் தன் சொந்த மொழியில் உள்ள நிகழ்ச்சிகளைப் பார்க்கும் வாய்ப்பை வெளிநாட்டில் வாழும் மக்களுக்கு வழங்கியுள்ளது செயற்கைக் கோள் தொலைக்காட்சி. இசை, நடனம், கல்வி, சொல்லாற்றல், கவிதை இவற்றில் தனித்தன்மை கொண்ட பல மாணவர் களுக்காக பல நிகழ்ச்சிகளை நடத்தி அவர் களைத் தொலைக்காட்சி ஊக்கப்படுத்து கிறது.

தொலைபேசியின் மூலம் பல கல்வியா ளர்கள், மருத்துவர்கள், ஆலோசகர்களின் கருத்துகளை மக்கள் நேரடியாகக் கேட்டுப் பயன்பெற முடிகிறது.இப்படி பல நன்மை களைத் தொலைக்காட்சி ஏற்படுத்தினாலும் தனிமனித வாழ்விலும் சமூகத்திலும் தொலைக்

# செவிப்புலனற்றோர் வாழ்வு வசந்தமாகலாம்!



■ *அருணா தர்மலிங்கம்*
*வந்தாறுமூலை*

(கடந்த வாரத் தொடர்ச்சி)

விதைக்க வேண்டிய காலத்தில் விதைத்தால் ஏற்ற பருவத்தில் அறுவடை செய்யலாம் என்பதற்கொப்ப செவிப்புலனற்றோர் காலத்தை தொலைத்து விட்டு நாள்களை எண்ணிக் கொண்டிருப்பதனால் பயன் ஏதும் இல்லை என்பது யதார்த்தம்.

யாழ்.பல்கலைக்கழகத்தில் கலைமாணி பட்டத்துடன் சவடிய திறமைச் சித்தியைப் பெற்றவர் செல்வமாணிக்கம் பிரபா 1990 ஆம் ஆண்டு இலங்கை வரலாற்றில் ஊனமுற்ற எவரினாலும் நிகழ்த்த முடியாத சாதனையை ஏற்படுத்தினார். நிர்வாக சேவைக்கான போட்டிப் பரீட்சையிலும் சித்தி பெற்றது விசேட அம்சமாகும்.

சில ஆண்டுகாலமாக மாகாணசபையில் உதவிச் செயலாளராக கடமையாற்றிய பின் கனடாவிற்குச் சென்று குடியேறினார். வே.சுப்பிரமணியம் 1975 இல் பேராதனை பல்கலைக்கழகத்தில் வணிகமாணிப்பட்டப் படிப்பிற்கு அனுமதி பெற்றர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அரச வங்கிகளான இலங்கைவங்கி, மக்கள் வங்கி என்பன செவிப்புலனற்றோர் சுய தொழில் ஆரம்பிக்க நிதி உதவியும் நல்கினார்கள். செவிப்புலனற்றோரின் எதிர்காலம் இருள் சூழ்ந்ததாக மாறாமல் இருக்க உகந்த வழிமுறைகளை [illegible] புத்திஜீவிகளது தலையாய கடமை எனலாம். செவிப்புலனற்றோரின் வாழ்க்கையை வசந்தம் ஆக்கிடலாம் என்பது மறுப்பதற்கில்லை.

# எழுத்தறிவின் பரிண

''**எ**ழுத்தறிவித்தவன் இறைவனாவான் என்பது ஔவைப் பாட்டியின் அருள்வாக் ஆண்டவன் எழுந்தருளியிருக்கும் இடத் கோயில் என்கின்றோம். கோ + இல் கோயி இதன் பிரகாரம் இது இறைவனின் வீடு என் பொருள்படும். இந்த வகையில் எழுத்தறி கும்இடம் கோயிலுக்கு இணையானது. இ னால்தான் கல்விக் கூடங்கள் அனைத்திலு எழுத்தறிவுக்கு உறுதுணையாகத் திகழும் பெ தெய்வமாகிய சரஸ்வதிக்கு ஆண்டுதோறு இந்துக்கள் ஆன்மிக ரீதியில் விழா எடுக்கின்றன

உலகின் எதிர்காலச் சந்ததியை உரி முறையில் வழிநடத்தக் கூடிய தன்மை எழுத் றிவிப்பவனையே சாரும். கல்லூரி மாணவ களைச் சிறந்த ஆளுமையும் விவேகமும் உடை நற்பிரஜைகளாக உருவாக்கும் பொறுப்பு க பித்தலில் ஈடுபட்டிருப்பவர்களுக்குப் பொருந்து

எழுதும் ஆற்றலை மாணவர்களுக்கு தன்னி சையாகப் பரிணமிக்கும் அளவிற்கு எழுத்த விப்பவன் ஈடுபட வேண்டும். நவீன பாட தானத்தை தன்னகத்தே கொண்ட விஞ்ஞான தொழில்நுட்பம், தொடர்பாடல், கணினி இணையம் போன்றவற்றிற்கு முன்[illegible] வழங்கி எழுத்தறிவிப்பது இன்றைய கா கட்டத்திற்கு உகந்த செயற்பாடாக அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ட்சி பல விரும்பத்தகாத பாதிப்புகளை
ருவாக்கி இருக்கிறது என்பதை மறுக்க
டியாது.
முன்பெல்லாம் எந்தத் தெருவிற்குச் சென்
லும் கூட்டம் கூட்டமாகக் குழந்தைகள்
ளையாடிக் கொண்டிருப்பார்கள். இப்பொழுது
ஓர் அரிய நிகழ்ச்சியாகி விட்டது.
ளியிலிருந்து வரும் குழந்தைகள் பல
னிநேரம் உட்கார்ந்து வீட்டுப் பாடம் செய்ய
பண்டியுள்ளது. பின் தொலைக்காட்சியின்
ன் அமர்ந்து ஒரு நாளின் எஞ்சிய நேரத்
தயும் கழித்து விடுகிறார்கள். குழந்தைகளின்
லும் மனமும் இதனால் சோர்வடை
ன்றன.
ஏதாவது ஒரு பெரிய தொடர் நடந்து
காண்டிருக்கும் போது தொலைபேசி மணி
லித்தாலோ அல்லது யாராவது வந்தாலோ
ழு மனத்தோடு அவர்களுடன் உரையாட
டிவதில்லை. இதன் விளைவாக நண்பர்கள்,
றவினர்கள் என்று எவரும் அடிக்கடி
ர்த்து, பேசி, பழகும் களிப்பை ஒதுக்கி
ருகிறோம். வெளியில் வேலை முடிந்ததும்
னது மனைவி பிள்ளைகள் சோறு வீடு
ழைப்பு இவையுண்டு தானுண்டு, தன்
டுத் தொலைக்காட்சி உண்டு'' என்று
ாழ்க்கை முறையே மாறி விட்டது. இந்த
லை இப்படியே தொடர்ந்தால் சமூகத்தில்
வ்வொரு வரும் தனித்துப் போக வேண்டிய
ழ்நிலை ஏற்படும். விளைவு விரக்தியும்
னச்சோர்வும் தான். ''ஐயோ'' என்ற அலறல்

# தொலைவில் வைப்போம் தொலைக்காட்சியை

■ லயவன்

> தனிமனித வாழ்விலும் சமூகத்திலும் தொலைக் காட்சி பல விரும்பத்தகாத பாதிப்பு களை உருவாக்கி இருக்கிறது என்பதை மறக்க முடியாது.

கேட்டால் அடுத்த வீட்டுக்காரர்கள் ஓடி வரும் நாகரிகம் குறைந்து கொண்டே போவதற்கு, தொலைக்காட்சியும் ஒரு காரணம்.

இவைமட்டுமல்லாமல் மருத்துவ ரீதியாக வும் பல பாதிப்புகள் ஏற்படுகின்றன. அதிக நேரம் தொலைக்காட்சி பார்த்தால் கண் பார்வை கெட்டுவிடும் என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மைதான்.

தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பப்படும் பாலியல் மற்றும் வன்முறை சம்பந்தப்பட்ட காட்சிகள், நம்முடைய நாகரிகத்தையும் கலாசாரத்தையும் சீரழிக்கும் வகையில் பல சமூகப் பிரச்சினைகளை ஏற்படுத்தும் என்ற அச்சம் வளர்ந்து வருகிறது. இவை தவிர எண்ணிப் பார்க்க முடியாத பல பாதிப்புகளை யும் தொலைக்காட்சி ஏற்படுத்துகிறது.

தொலைக்காட்சி பார்ப்பது குழந்தை களின் மூளையைப் பெரிதும் பாதிக்கிறது என்ற மருத்துவ நிபுணர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.'' தொலைக்காட்சித் திரையிலிருந்து வெளிவரும் கதிர் வீச்சு, 13 வயதிற்குட்பட்ட குழந்தைகளின் மேல் அபாயகரமான விளைவை ஏற்படுத்துகிறது. தொலைக்காட்சி பார்ப்பது குழந்தைகளின் மூளைக்குத் தீர்க்க முடியாத பாதிப்பை ஏற்படுத்துகிறது'' என்று மத்திய நடத்தை அறிவியல் நிறுவனத்தின் (Central Institute of Behavioural Sciences) இயக்குநரும், குழந்தை மனநல மருத்துவருமான டாக்டர் சைலேஸ்பகோங்கர் கூறுகிறார்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக ''மாந்தன்'' என்ற பெயரில், குழந்தைகள் மத்தியில் இந்த நிறுவனம் நடத்தி வந்த ஆய்வு, ரி.வி.யிலி ருந்து வெளிவரும் கதிர்கள் மூளையின் பகுதி களில் சேதம் ஏற்படுத்துகின்றன என்று நிரூ பித்துள்ளது. இந்த ஆய்வு சம்பந்தமான தனிப்பட்ட சோதனைகளும் ''ரி.வி. பார்க்கும் போது அபாயமான புதிய வேதிப் பொருள் கள் குழந்தைகளின் மூளையில் உருவாகின் றன'' என்று கண்டறிந்துள்ளன. *(தொடரும்)*

ணாமம்!

■ தர்மா



ாவான்''
ர்வாக்கு.
இடத்தை
கோயில்.
டு என்று
த்தறிவுக்
ாது. இத
னத்திலும்
ம் பெண்
தோறும்
கின்றனர்.
உரிய
எழுத்த
மாணவர்
ம் உடைய
றுப்பு கற்
பாருந்தும்.
த தன்னிச்
எழுத்தறி
பாடவி
நஞானம்,
கணினி,
மை
ய கால
மையும்.

அந்தக் காலகட்டத்தில் மனிதன் சஞ் சரிக்கும் போது ஆள்பாதி ஆடை பாதி யாக காடுகளில் விலங்கோடு விலங்காக அலைந்து திரிந்தான் என்று வரலாறு பறைசாற்றுகின்றது. எனவே புராதன காலத்து மக்கள் எழுத்தறிவு பெற்றுக் கொள் வதற்கு பெரிதும் முயற்சி எடுக்கவில்லை. காலப்போக்கில் துரித மக்கள் தொகைப் பெருக்கம், விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக மக்கள் அனைவரும் எழுத்தறிவுள்ளவர்களாகப் பிரகாசிப் பதற்கு புத்திஜீவிகள் பெரும் பங்களிப்பை நல்கினர்.

தற்பொழுது நமது நாட்டில் குழந்தைகளுக்கு எழுத்தறிவை உண்டாக் குவதற்கு பாலர் பாடசாலை காணப்படு கின்றது. அதேவேளை உயர்கல்வியை நிறைவு செய்துகொள்ள பல்கலைக்க ழகங்களும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினரால் நடத்தப்பட்டு வருகின்றமையையும் நாம் நன்கு அறி வோம். இதற்கு உயர்கல்வி அமைச்சு தனது பங்களிப்பை நல்கி வருகின்றது.

மொழியை உருவாக்கி அதனை அபிவிருத்தி செய்த பெருமை மனிதனுக் குரியதாகும். அதனை சீராக அமைத்து கருத்துவிளங்க உரையாற்றி வளர்ச்சி பெறச் செய்தவனும் மனிதனே ஆகும். இவை எல்லாம் எழுத்தறிவின் பரிணாம வளர்ச்சியை எடுத்துக்காட்டுகின்றன என்பது நிதர்சனமாகும்.

எழுத்தறிவானது மனிதனுக்குக் கிடைத் துள்ள பிறப்புரிமைகளிலொன்றாகும். மனிதன் சூழலை வெற்றிகொண்டு நுண் மதியாலும் [illegible] லும் ஏனைய [illegible] விட விரை வாக மொழித்திறன்களைப் பெற்றுள்ளான் என்பது யதார்த்தமாகும். (தொடரும்)

# சிவாஜி
## மறைந்தாலும் இன்றுவரை மக்கள் மனதில் வாழும் கலைஞர்



நடிகர் திலகம்
சிவாஜிகணேசனின்
11 ஆவது நினைவு
தினம் இன்று

■ யாழ்.மாவட்ட சிவாஜி ரசிகர்கள்

உலக வரலாற்றை நாம் பார்க்கும் போது சரித்திர நாயகர்கள், அவதார புருஷர்கள், மேதைகள் என பலர் தோன்றி மறைந்துள்ளனர். இவர்கள் பல்வேறு துறைகளில் ஒளிவீசியுள்ளனர். அரசியல், விஞ்ஞானம், சமூகத்தொண்டு, தேசத்தொண்டு, கல்வி, கலை எனப் பல்வகைத் துறைகளில் பிரகாசித்தனர்.

இவற்றில் கலைத்துறையில் அவதார புருஷர்களாக ஆண்டவன் அருள் பெற்றவர்களாக மிளிர்ந்தவர்களில் நமது நடிகர் மாமேதை சிவாஜிகணேசன் அவர்கள் முக்கியமாகக் குறிப்பிடத்தக்க ஒருவர். இவர் தமிழ் நாட்டில் தோன்றி தமிழ் நாட்டுத் தமிழர்களுக்கும் இந்தியாவில் மற்றைய மாநிலங்களில் வாழும் தமிழர்களுக்கும் உலகத் தமிழர்களுக்கும் அத்துடன் இந்தியர்கள் அனைவருக்கும் பெருமை தேடித்தரும் வகையில் தமிழ்க் கலை, கலாசாரங்களை வெளிப்படுத்தியும், இந்திய சுதந்திரப் போராட்ட வீரர்கள், சரித்திர நாயகர்கள், புராண இதிகாச புருஷர்கள் ஆகியோரை சிறப்பாக உருவகப்படுத்தி நம் கண்களுக்கு விருந்தாகவும், கருத்துக்களுக்கு பாடங்களாகப் படைத்தும் உலகப் பெரு நடிகனாகி கலைத்தாயின் முழு அனுக்கிரகம் பெற்ற அவதார புருஷனாகத் திகழ்கிறார்.

இவர் தோன்றி வாழ்ந்து கலைப்பணி செய்த காலம் கலைப்பற்றுள்ள உள்ளங்களுக்கும், முத்தமிழ் வித்தகர்களுக்கும் பெரு விருந்தாக அமைந்தது. அதுமட்டுமன்றி இன்னும் வாழும் அவரது காலத்தவர்களுக்கும் இன்னும் அடுத்த அடுத்த சந்ததியினருக்கும் அவரது நடிப்பில் வந்த திரைப்படங்கள் பல்கலைக்கழக விரிவுரை நூல்கள் போல் வாழ்க்கையின் யதார்த்தத்தை உணரவைக்கின்றன. சுதந்திரப் போராட்ட வீரரான விழுப்புரம் சின்னையா மன்றாயர், ராஜாமணி அம்மையார் தம்பதிகளுக்கு மகனாக 01.10.1928 இல் பிறந்து இளமையிலே பல கஷ்ட துன்பங்களுக்கு ஆள்பட்டு நடிப்புக் கலையில் கவரப்பட்டு நாடகக் கம்பனிகளில் சேர்ந்து நடித்து பல உலக அனுபவங்களைப் பெற்றார். அந்த அனுபவங்களைத் தனது கதாபாத்திரங்களில் பின்னர் பிரதிபலிக்கச் செய்தார். வி.சி.கணேசனாக இருந்தவர் திரைப்படத்தில் நடிக்க முன்னரே வீர சிவாஜியாக நாடகத்தில் நடித்து தந்தை பெரியாரினால் சிவாஜி கணேசன் எனப் பாராட்டி பெயர் சூட்டப் பெற்றார்.

1952 ஆம் ஆண்டில் இவரது திருமண வாழ்க்கையும் திரைப்பட வாழ்க்கையும் ஒன்றாகத் தொடங்கின. கலைஞரின் பலபக்க வசனங்களை அனைவரும் வியக்கும் வண்ணம் உணர்ச்சிபூர்வமாகப் பேசி நடித்த முதல் படமான 'பராசக்தி' அனைவரினதும் பாராட்டைப் பெற்று இந்தியாவிலும் இலங்கையிலும் 200 நாள்களுக்கு மேல் ஓடிப் பெரு வெற்றியைப் பெற்றது. புராண, இதிகாச, அரச வேடங்களில் சொந்தக் குரலில் பாடி நடித்த நடிகர்கள் வரவேற்புப் பெற்றிருந்த காலத்தில் 'பராசக்தி'யின் வருகையுடன் நிலைமை மாறியது. உணர்ச்சிகரமான பேச்சுத் தமிழை மக்கள் ஆவலுடன் ரசிக்கத் தொடங்கினார்கள். சிம்மக் குரலோனின் வெற்றிகள் தொடர்ந்தன. ஆனால் ஆரம்ப காலம் முதலே ஓடி, ஆடிப், பாடிக் காதல் புரியும் இளம் கதாநாயகனாக மட்டுமன்றி கதைக்கு முக்கியத்துவம் கொடுத்தும், தான் பலவகைப்பட்ட பாத்திரத்திலும் நடிக்க முடியும் என்றும்- இளவயதுத் தந்தையாகவும் வில்லத் தன்மையுள்ள கதாநாயகனாகவும் வில்லனா கவும் சுயகௌரவம் பார்க்காமல் நடித்துத் தன் திறமைகளை வெளிப்படுத்தினார்.

மேலும் கதைக்கு முக்கியத்துவம் கொடுத்து மற்றைய பிரபல நடிகர்களுடனும் சேர்ந்து அவர்களுடைய முக்கியத்துவத்தையும் எந்தவிதத்திலும் குறைக்காமல் நடித்துத் தானும் சிறப்புற்று அவர்களையும் சிறப்புற வைத்தார். அதேபோல் கதாநாயகி நடிகைகளுக்கும் கதையின் போக்குப்படி சரியான இடம் கொடுத்து நடிக்கவைத்து தன்னையும் அவர்களையும் சிறப்புற வைத்தார்.

இன்னும் இவரது வெற்றிப் பயணத்தில் பாடல்களே இன்றி வெளிவந்த படம்-'அந்தநாள்' வெற்றி பெற்றது. அதிக படங்கள் இரட்டை வேடத்தில் அமைந்தன. ஒரே நாளில் இரு படங்கள் வெளிவந்து இரண்டும் வெற்றிபெற்றன பலமுறை. தொழில் நுட்ப வளர்ச்சி குறைந்த காலத்தில் (1964 ஆம் ஆண்டு) 9 வேடங்களில் இவர் நடித்து வெளிவந்த 'நவராத்திரி' படம் பார்ப்போரை வியக்கவைத்து வெற்றிபெற்றது.

இவரது வெற்றிக்கு உறுதுணையாக பலரும் (டைரக்டர்கள்,இசையமைப் பாளர்கள், தயாரிப்பாளர்கள், கதாநாயகிகள், பின்னணிப் பாடகர்கள், பாடலாசிரியர் கள், சக நடிகர்கள்) இருந்தாலும் இவருடைய குரலுக்கு, பாவனைகளுக்கு மிகமிகப் பொருந்திய ரி.எம்.சௌந்தரராஜன் அவர்களின் தங்கக் குரலும், கண்ணதாசன் அவர்களுடைய பாடல்களும், ஜி.ராமநாதன், கே.வி.மகாதேவன், எம்.எஸ்.விஸ்வநாதன் ஆகியோரின் இசையமைப்புகளும் அதிக படங்களில் இவருடன் ஜோடி சேர்ந்த 'பத்மினி' யின் பங்களிப்பும் குறிப்பிடத்தக்கவை. மேலும் இவரது வெற்றிப் பயணத் தில் அதிக படங்கள் 100 நாள்களுக்கு மேலும், அதிக படங்கள் 175 நாள் (வெள்ளி விழா) ஓடியதும் இந்தியாவில் மட்டுமன்றி இலங்கையிலும் இவர் கொண்ட வெற்றிகளாகும்.

மொத்தத்தில் இவரால் தமிழ் சினிமா பெரிய வளர்ச்சி பெற்றது என்பதை அறிவுசார்ந்த அனைவரும் ஒப்புக்கொள்வர். கெய்ரோ படவிழாவில் 'வீரபாண்டிய கட்டபொம்மனுக்கு' சிறப்பு அமெரிக்காவின் நயாகரா நகரத்தின் ஒரு நாள் மேஜர் கௌரவம், 'ஆஸ்கார்' பரிசுத் தேர்வில் 'தெய்வமகன்' இடம்பெற்றமை, 'பிரான்ஸ்' நாட்டு 'செவாலியர்' விருது போன்ற வெளிநாட்டுக் கௌரவங்கள் கிடைத்தன.

ஆனால் இவரது கதாப்பாத்திரங்களும், நடிப்பும் கம்பீரமும் நல்ல ரசிக நெஞ்சங்களை விட்டு என்றும் நீங்காது என்பது நிதர்சனமான உண்மை. அவரது பல சிறந்த நல்ல படங்களைப் பார்த்து ரசித்துப் பண்படுவதே அவருக்குச் செய்யும் சிறந்த நினைவஞ்சலி என்பதை நினைவூட்டுகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைந்த நகரங்கள்



■ இணையவன்

**காவிரிப் பூம்பட்டினத்துச் சிறப்புக்களைச் சங்க இலக்கியங்களான எட்டுத் தொகை நூல்களுள் சில பாடல்களும், பத்துப்பாட்டில் பொருநர் ஆற்றுப்படையும், பட்டினப்பாலையும், ஐம்பெருங் காப்பியங்களுள் சிலப்பதிகாரமும், மணிமேகலையும் தெளிவாக விளக்குகின்றன.**

பழங்காலத்தில் நமது அன்னைத் தமிழகம், சேர, சோழ, பாண்டிய நாடு என முப்பெரும் பிரிவுகளாக விளங்கியது.

சேர நாட்டை ஆட்சி செய்தவர் சேரர் என்றும், சோழ நாட்டை ஆட்சி செய்தவர் சோழர் என்றும் பாண்டிய நாட்டை ஆட்சி செய்தவர் பாண்டியர் என்றும் குறிக்கப் பெற்றனர்.

பாண்டிய மன்னர்களின் தலைநகராக மாநகர் மதுரையும், சேர மன்னர்களின் தலைநகராக வஞ்சி மூதூரும், பூம்புகார் எனப்படும் காவிரிப்பூம்பட்டினம் சோழ மன்னர்களின் தலைநகராகவும் சிறப்போடு விளங்கின.

பொதுவாக ஆறு, கடலுடன் கலக்கும் பகுதியைப் புகார் என்பர். காவிரியாறு கடலுடன் கலக்கும் இடமும் புகார் என்றே வழங்கப் பெற்றது. பின்னர் இந்தப் புகார் நகரின் பொலிவின் காரணமாகவும் சிறப்பின் காரணமாகவும் பூம்புகார் என்று அழைக்கப்பெற்றது.

பிற்காலத்தில், பூம்புகார் என்னும் பெயர் மாறி, காவிரி புகும்பட்டினம் என்றாகி, நாளடைவில் காவிரிபூம்பட்டினம், காவிரிப்பட்டினம், காவேரிப்பட்டினம் என்று பலவாறாக பெயர் மாற்றம் பெற்றது.

காவிரிப் பூம்பட்டினத்துச் சிறப்புக்களைச் சங்க இலக்கியங்களான எட்டுத் தொகை நூல்களுள் சில பாடல்களும், பத்துப்பாட்டில் பொருநர் ஆற்றுப்படையும், பட்டினப்பாலையும், ஐம்பெருங் காப்பியங்களுள் சிலப்பதிகாரமும், மணிமேகலையும் தெளிவாக விளக்குகின்றன.

காவிரிப்பூம்பட்டினம் முப்பெரும் பிரிவுகளாக விளங்கியது. காவிரிப் பூம்பட்டினத்தில் கடற்கரையோரமாக அமைந்த பகுதி மருவூர்பாக்கம், நகராக அமைந்த பகுதி பட்டினப்பாக்கம். இவ்விரு பாக்கங்களுக்கு இடையே அமைந்த பகுதி நாளங்காடி.

மருவூர்ப்பாக்கத்தில் ஒளிநிலா முற்றங்களும், சிறப்புமிக்க பலவகை அணிகளால் அழகு செய்யப்பட்ட அறைகளும், மான் விழி போலமைந்த சாளரங்களும் கொண்ட மாளிகைகள் பலவாக அமைந்திருந்தன. பெரிய பண்டகசாலைகள் இருந்தன.

காவிரி கடலோடு கலக்கும் இடத்தில் யவனர் மாளிகைகள் விளங்கின. கடல் வாணிபத்தில் பொருள் குவித்த பிறநாட்டு வணிகர்களும் கடற்கரையோரமாகவே வாழ்ந்தனர். மருவூர்ப்பாக்கத்துத் துறைமுகத்தில் பல்வேறு நாட்டுக் கப்பல்களும் வந்து தங்கின.

அலைகளினால் அலைவுற்று நிற்கும் நாவாய்கள் பலவும் அங்கு அழகிய தோற்றத்தை எப்போதும் அளித்தன. சாந்து, மணிப்பொடி, குளிர்மணச் சந்தனம், பல்வகை மலர்கள், செந்தேன், பச்சிலை, கற்பூரம், அகில் முதலியவற்றை விற்பனை செய்யும் வணிகர்கள் நகர வீதிகளில் அங்குமிங்குமாகத் திரிந்தனர். பட்டு நூலாலும், பருத்தி நூலாலும், எலி மயிராலும், பல்வகை ஆடைகள் நெய்யும் தொழில்நுட்பம் வாய்ந்த நெசவாளர்களின் தனி இருக்கைகளும் நகர்த் தெருவில் அமைந்திருந்தன.

மாசறு பொன்னும் முத்தும், பல்வகை மணிகளும், இவ்வளவின என வரையறுத்துச் சொல்ல முடியாத அளவில் குவிந்து கிடக்கும் அகன்ற தெருக்கள் ஒருபுறம்; நெல், புல், வரகு, தினை, சாமை, இறுங்கி, தோரை, இராகி, எள், கொள், பயறு, உழுந்து, அவரை, துவரை, கடலை, மொச்சை, மூங்கில், காராமணி ஆகிய பதினெண்வகைக் கூலப்பொருள்கள் விற்கப்பட்ட தெருக்கள் - கள் விற்போர், மீன் விற்போர், ஏலம், இலவங்கம், சாதிக்காய், கற்பூரம், தக்கோலம் ஆகிய ஐவகை மணப்பொருள்களை விற்போரின் வாழ்விடங்கள் கொண்ட தெருக்கள் ஆகியவற்றோடு, கள் விற்கும் மகளிர், மீன் விற்கும் பரதவர், ஆடுகள் விற்போர் ஆகியோர் நிறைந்த புலால் கடைகளும் ஒருபுறம் இருந்தன.

கருமார், தச்சர், ஓவியர், சிற்ப வல்லுநர், தட்டார், தையல் தொழிலாளர், கம்மியர், செம்மார் முதலிய பல்வகைத் தொழிலாளர்களும் நகரின் ஒருபுறத்தே இருந்தனர்.

பிறிதொரு தெருவில், ஏழிசைப் பண்ணும் திறனும் அறிந்து பாடும் பாணர்களும், இசைவாணர்களும் வாழ்ந்தனர்.

✱

# புத்தகசாலை

## ஈழத்தமிழ் மனிதம்

'ஈழத் தமிழ் மனிதம்' என்ற தலைப்பிட்டு மருத்துவர் சி.யமுனானந்தா அவர்களால் வெளியிடப்பட்டுள்ள பல்துறை ஆய்வு சார்ந்த கட்டுரைகளின் தொகுப்பு நூல் கிடைக்கப்பெற்றோம்.

ஈழத்தமிழ் மனிதம் எனும் பதத்தை அரசியல், மருத்துவம் என்பவற்றினை அடிப்படையாகக் கொண்டு எமது தமிழ் நிலத்தின் இருப்பை உறுதி செய்யும் வகையில் தேர்ந்து எழுதப்பட்ட கட்டுரைகள் நூலில் உள்ளடக்கப்பட்டுள்ளன. மனிதன் தனது வாழ்க்கையை முன்னெடுத்துச் செல்ல ஆதாரமாக அமைகின்ற அனைத்து அம்சங்களும் மருத்துவம் சார்ந்து நோக்கப்பட்டிருப்பதை கட்டுரைகள் உணர்த்துகின்றன.

ஈழத் தமிழ் மனிதம் அடைந்த இன்ப துன்பங்கள் அனைத்தையும் அறிந்து ஆய்ந்து எழுதப்பட்டுள்ள ஒவ்வொரு கட்டுரையும் நூலின் ஓரிரு பக்கங்களில் நிறைவுறினும் அக் கட்டுரை ஒவ்வொன்றும் சொல்லி விளக்குகின்ற கனதியான விடயங்கள் எமது சிந்தனைக்குத் தெளிவு தருகின்றன.




தமிழிலில் 19 கட்டுரைகளும், ஆங்கிலத்தில் 5 கட்டுரைகளுமாக எழுதப்பட்டுள்ள கட்டுரைகளில் போரும் அது சூழ்ந்த காலமும் அதனால் வீழ்ந்தழிந்த எமது மக்களும் வாழ்க்கையும் மீண்டெழுந்து தம் இருப்பையும் செழிப்பையும், உறுதி செய்ய வேண்டும் என்ற அவல் தொனிக்கின்றன.

கடுகு சிறிதெனினும் காரம் பெரிதாகும்.

## சேவையை உயிராகக் கொண்ட உத்தமர் அமரர் தற்பரானந்தன்



நீத்தார் நயப்புரை

வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்தினுள் வைக்கப்பட்டவர்களில் அ.தற்பரானந்தனும் ஒருவராவார். தான் வாழும் ஊரில் சமூக ஒருமைப்பாட்டிற்காக உழைத்த உத்தமர். தன் மூதாதையரால் ஸ்தாபிக்கப்பட்ட பாடசாலையைப் பராமரிப்பதில் முன்னின்று உழைத்தவர்.

இந்தப் பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றி ஏழைச் சிறார்களின் அறிவுக் கண்களைத் திறந்தவர். அமரர் அ.தற்பரானந்தனை முதன் முதலாக வளவாளராக கொழும்பில் ஒரு செயலமர்வில் சந்தித்த ஞாபகமுண்டு. அன்றிலிருந்து நல்ல அறிவு கூறும் நண்பராக இருந்தார்.

உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிய காலத்தில் வலயம் II இல் கல்வி அபிவிருத்திக்காக உழைத்த பணிப்பாளர் க.கந்தசாமிக்கு வலது கரமாகச் செயற்பட்டவர். உடுவில் கோட்டப் பாடசாலைகளின் அபிவிருத்தியில் அமரரின் பணி அளப்பரியது. அவரது பணிகளுக்கு உறுதுணையாக இருந்தவர் அவரது துணைவியார்தான். நோய்வாய்ப்பட்ட காலத்திலும் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தினதும் வட இலங்கை சங்கீத சபையினதும் அபிவிருத்திக்கு முன்னின்று உழைத்தவர். வட இலங்கைச் சங்கீத சபைக்குச் சொந்தமாக நிலம் வாங்க வேண்டும் என்ற வேணவாவுடன் சிறப்பாக உழைத்த செம்மல் என்றால் மிகையாகாது.

வே.தி.செல்வரத்தினம்
ஓய்வுநிலை பிரதிச் செயலர், வடமாகாண கல்வி அமைச்சு



... நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் வேலணையூர் ...சரம் பாலசுப்பிரமணியம் சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொள்கிறார். (எ-50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்ணாவிரதம்

கந்தசஷ்டி விரத காலத்தில் நீங்கள் திருச்செந்தூருக்குச் சென்றால், ஒரு வேடிக்கையான காட்சியைப் பார்க்கலாம்.

உபவாசம், அதாவது பட்டினி இருந்து பரம்பொருளின் கருணையைப் பெறவேண்டும் என்கிற எண்ணத்தில் அதிகமான முருக பக்தர்கள், அந்தக்கோயிலில் ஆண்டுதோறும் ஒன்று கூடுவது வழக்கம்.

திருவிழா நடைபெறுகிற சமயத்தில், அங்கே உண்ணாநோன்பு இருக்கிற பலபேரோடு நீங்கள் பேசிப்பாருங்கள், உங்களுக்கு ஆச்சரியமான அனுபவங்கள் கிடைக்கும். சிறிதளவு வேடிக்கையான அனுபவங்களாகவும் அவை இருக்கும்

அங்கே கூடியிருப்பவர்கள் ஒருவருக்கு ஒருவர் இப்படிக் கேட்டுக் கொள்வார்கள். "நீங்கள் என்ன பச்சரிசியா?" என்று ஒருவர் கேட்பார். இல்லை, "நான் வெறும் வெல்லம்!" என்று ஒருவர் பதில் சொல்வார். "நீங்கள் இளநீரா?" "இல்லை இல்லை, நான் எலுமிச்சைப்பழம்" இப்படிப்பட்ட கேள்வி பதில்கள்தான் அங்கு மேலோங்கி இருக்கும் .

அதாவது வெறும் இளநீரை மட்டுமே சாப்பிட்டு நோன்பு இருக்கும் பக்தர் , "நான் இளநீர் " என்பார் எலுமிச்சைப்பழத்தை மட்டுமே சாப்பிட்டு விரதம் இருக்கும் பக்தர், "நான் எலுமிச்சைப் பழம் மட்டுமே" என்பார் .

வெறும் எலுமிச்சைப்பழச்சாறு , இளநீர் , தேன் அல்லது வெறும் பச்சரிசிச் சாதம் ஒரே ஒரு வேளை, வெறும் வெல்லம், தண்ணீர் தவிர வேறு எதுவுமே இல்லாத கொலைப்பட்டினி என்று ஒவ்வொருவரும், ஒவ்வொருவிதமாக அங்கு ஆறுநாள்கள் தொடர்ந்து உண்ணா நோன்பு மேற்கொள்வார்கள்.

அவர்கள் விரதம் இருக்கிற அந்தப்பகுதி வழியாக நீங்கள் சென்றால் , அங்கே உண்மையிலேயே தக தக வென்று ஒரு நெருப்பு எரிந்து கொண்டிருக்கிற ஓர் உணர்வு உங்களுக்கு ஏற்படும். காரணம், ஒவ்வொரு மனிதனுக்கு உள்ளேயும் ஓர் அக்கினி இருக்கிறது. 'ஜடராக்கினி' என்பது அதன் பெயர். அந்த அக்கினி நன்றாக எரிந்து கொண்டிருந்தால்தான் ஒருவர் ஆரோக்கியமாக இருக்க முடியும் ஆனால் நாம் என்ன செய்கிறோம்? ஓயாமல் உணவை உள்ளே தள்ளிக்கொண்டே இருக்கிறோம். இதனால் அந்த நெருப்பு அணைந்து பாழாகி விடுகிறது. எமக்கு நோய் உண்டாவதற்கான மூலகாரணம் இதுதான் .

கந்தசஷ்டியில் விரதம் இருந்தால் குழந்தை பிறக்கும் என்ற ஒரு நம்பிக்கை இருக்கிறது. இதெல்லாம் மூடநம்பிக்கை என்று பகுத்தறிவாளர்கள் பேசுவார்கள். இதைப் பற்றிக் கந்தசஷ்டி விரதம் இருப்பவர்களிடம் கேட்டுப்பாருங்கள், கதை கதையாகச் சொல்வார்கள் "எனக்கு நீண்ட நாள்களாகக் காது கேட்காமல் இருந்தது, கந்த சஷ்டி விரதம் தொடர்ந்து இருந்தால், இப்போது எனக்கு நன்றாகக் காது கேட்கிறது" "எனக்கு கண்பார்வைக் கோளாறு இருந்தது, கந்தன் அருளால் இப்போது என் பார்வை பளிச்சென்று இருக்கிறது" என்றெல்லாம், பலவிதமான விடயங்களைச் சொல்வார்கள்.

இவையெல்லாம் , இறைவனுடைய அனுக்கிரகமா அல்லது வெறும் மூடநம்பிக்கையா? என்பது ஒரு பெரிய சர்ச்சையாக இருக்கிறது. நான் இதற்கு ஒரு பெரிய விஞ்ஞான பூர்வமான விளக்கத்தை இப்போது சொல்ல விரும்புகிறேன். மனிதனுடைய உடம்பில், இரத்தத்தின் சுற்றோட்டம் இடைவிடாமல் தொடர்ந்து நடந்து கொண்டே இருக்க வேண்டும். அந்த இரத்த ஓட்டம் எங்கேயாவது அடைபட்டு நின்றுவிட்டால், அங்கு முதலில் வலி உண்டாகும். பிறகு நோய்க்கிருமிகள் அங்கு தங்க ஆரம்பிக்கும். கொஞ்சம் கொஞ்சமாக அந்தப் பகுதியை அந்தக் கிருமிகள் செயலிழக்க வைத்துவிடும்.

அதாவது, நம் ஒவ்வொருவர் வீட்டிலிருந்தும் நாள் தோறும் உருவாகும் கழிவுநீர் ஒரு குழாய் வழியாகச் சாக்கடையில் சேர்க்கப்படுகிறது . அந்தக் குழாயில் எங்காவது அடைபட்டு விட்டால் , கழிவுநீர் மேற் கொண்டு செல்ல முடியாமல், நம் வீட்டுக் கழிவறையிலேயே தேங்கி நிற்கத் தொடங்கிவிடும். அதன் பின்னர் என்ன நடக்கும்? துர்நாற்றம் வீசத் தொடங்கும். இந்தத் துர்நாற்றத் துக்குக் காரணம் என்ன? அழுகிய பொருள்கள் தேங்குவதால் , நோய்க்கிருமிகள் உற்பத்தியாகி நாற்றத்தை உண்டாக்கிறது .

சாக்கடைக்குழாய் அடைத்துக் கொண்டால், என்ன கொடூரம் நிகழ்கிறதோ, அதே கொடூரம்தான் எமது உடம்பின் இரத்தக்குழாய் களில் அடைப்பு ஏற்படும் போதும் உண்டாகிறது . ஐந்து புலன்களில் எதில் அடைப்பு ஏற்பட்டாலும் அந்தப் பகுதி ஓர் ஒழுங்கீனமான செயற்பாட்டிற்கு உள்ளாகிவிடுகிறது .

இந்துக்கள் மட்டுமல்லாமல், இந்த உலகத்தில் உள்ள எல்லா மதத்தினரிடையேயும் இந்த உண்ணாவிரதப்பழக்கம் இருக்கிறது .

ரம்ழான் மாதத்தில், உலகம் முழுவதும் உள்ள இஸ்லாமியர்கள் உண்ணா விரதம் இருப்பார்கள். அதாவது அந்த மாதம் முழுவதும் சூரியன் உதயமாவதிலிருந்து அஸ்தமனமாவது வரை, அவர்கள் எச்சிலைக் கூட விழுங்க மாட்டார்கள் .

இதேபோன்று, ஐயப்ப பக்தர்கள், கார்த்திகை மாதம், முதல் திகதியிலிருந்து ஒரு மண்டல காலம் , அதாவது 48 நாள்கள் விரதம் இருப்பார்கள் . விரதகாலத்தில் , அசைவ உணவு , மது , மாது போன்ற வற்றில் மிகுந்த கட்டுப்பாட்டோடு இருப்பார்கள். அப்போது அவர் கள் முட்டையைக் கூடத் தொடமாட்டார்கள்

கிறிஸ்த்தவர்களுக்கும் விரத காலங்கள் இருக்கின்றன. என்ன காரணம் ?

நாம் அன்றாடம் பயன்படுத் தும் வாகனங்களை, ஒரு குறிப் பிட்ட கிலோமீற்றர் தூரம் பய ணித்த பிறகு, சுத்தம் செய் கிறோம் அல்லவா ? அதைப் போலத்தான் உண்ணாவிரதம் என்பது, நம் குடலை சுத்தம் செய்கிறது.



சுகி.சிவம்

# வாசகர் திருமுகம்

## உள நலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவார்களா?

2006 ஆம் ஆண்டு இடம்பெற்ற போரி னால் உளநலப் பாதிப்புக்கு உள் ளாக்கப்பட்டு 2010 ஆம் ஆண்டு வரை தனியார் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வந்தேன். நோயின் தாக்கம் அதிகரித்ததால் உடனடியாக உளநலப் பிரிவில் சேர்க்கப் பட்டு இன்றுவரை தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றேன். என்னால் வேலைகள் செய்ய உடல் நிலை இடமளிக்காததால் மூலையிலே முடங்கிக் கிடக்கிறேன்.

எனக்கு மூன்று சிறு குழந்தைகள். இன்று என் போன்று உளநலப் பாதிப்பு மனநலப் பாதிப்பால் எத்தனையோ எமது உறவுகள் சிகிச்சை பெற்று வருகின்றனர். எவர் எமக்கு உதவ முன்வருவார்கள் என்று கண்ணீர் விடு பவர்களும் உண்டு. நாங்களும் இந்த மண் ணில் வாழப்பிறந்தோம். ஆனால் பல சந்தர்ப்பங் களில் உடல் உள மனநலம் பாதிக்கப்பட்டு இன்று வாழ வழி தெரியாது அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவிகளாவது எமக்கு கிடைக்காதா என்று எதிர்பார்த்திருக்கின்றோம்.

பெரியவர்களே, நாடாளுமன்ற உறுப்பி னர்களே, அமைச்சர்களே, சமூகசேவையா ளர்களே, கல்விமான்களே, நோயாளர்கள் மீது இரக்கம் கொண்ட தாயக உறவுகளே, எங்களுக்காக குரல் கொடுங்கள்.

மூச்சு நினைத்தால்தான் இந்த உயிரே வாழுது, இந்த மூச்சு எம்மை விட்டு பிரிவதற் கிடையில் இப்படிப்பட்ட ஏழை நோயா ளிகளுக்கு உதவுங்கள். நோயும் இறப்பும் மனிதனுக்கு எப்போது எந்த நேரம் வரும் என்பது எவருக்குமே தெரியாது.

உளநோயால் பாதிக்கப்பட்ட
ஓர் அன்பர், வரணி.

## இலக்கியம் என்ற பெயரில் வர்த்தகமா?

இலக்கியம் என்ற பெயரில் சிலர் வர்த்தகம் செய்கின்றனர் போலத் தெரிகிறது. தென்னி லங்கையிலிருந்து திடீர் திடீரென வந்து அவசர அவசரமாக புத்தக வெளியீடுகள் செய்யப்படு கின்றன. இவர்கள் யாருமல்லர் எம்மவர்கள் தான். ஓரிரு உரைவீச்சுக்களை எழுதிவிட்டு அதைப் புதுக்கவிதை என்றும், எங்கோ தழுவி எழுதிய கதைகளை சிறுகதைத் தொகுப்பென்றும் கூறி வெளியீட்டு விழாக்களை நடத்துகிறார்கள்.

அங்கிருந்து வரும்போது தமிழ் இலக்கியமே தெரியாத பிறமொழிப் பிரமுகர்களையும் கூட்டி வந்து தங்கள் படைப்புகளுக்கு ஆசியுரை வெளியீட்டுரை நிகழ்த்துகிறார்கள்.

இவர்கள் இங்கு வந்து ஏன் அரங்கேற்று கிறார்கள்? பம்பலப்பிட்டி கதிரேசன் மண்ட பத்திலும் மருதானை சரஸ்வதி மண்டபத்திலும் நிகழ்த்தலாம்தானே? அங்குள்ள மக்களுக்கு இவற்றில் பங்குபற்ற நேரமில்லையா என்ன? இவர்களின் இச் செயற்பாடுகள் மறைமுக மான பணச் சடங்குகள்தானே (INDIRECT MONEY MAKING CERE MONIES) நிகழ்வுகள் முடிந்ததும் ஆள்களைக் காணக் கிடைக்காது. வாரிச் சுருட்டிக்கொண்டு கொழும்புக்கு ஓடி விடுவார்கள். மீண்டும் ஒன்றிரண்டு வருடங்களின் பின்பு இங்கு வந்து கடைவிரிப்பார்கள். இப்படியும் ஒரு வயிற்றுப்பிழைப்பு வேண்டுமா? எங்கள் உண்மையான படைப்பாளிகள் விழிப்ப டையும் வரை இவர்கள் ஓயமாட்டார்கள்.

வாசகன்

## தவிட்டுப் பாணை பேக்கரிகாரர் மறுபடியும் உற்பத்தி செய்வார்களா?

[illegible] பேக்கரிகளில் செய்யும் பாண் கோதுமை மாவை மட்டும் பயன்படுத்தி தயார் செய்து விற்பனை செய் யப்படுவதால் நோய்வாய்ப்பட்டுள்ள பலர் பாண்களை உட்கொள்ள முடியா தவர்களாக உள்ளனர்.

ஆரம்பகாலங்களில் நோயாளர்களுக்கு ஏற்றாற்போல் தவிட்டுப் பாணை பேக் கரிகள் விற்பனை செய்தன. அதனை தற்போது நடைமுறைப்படுத்தி விற்பனை செய்தால் அதிகளவானோர் பயன்பெறு வர்.

ஏனெனில் சிறுவர்கள் முதல் பெரிய வர்கள் வரை. காலநிலைக்கு ஏற்றாற்போல் நோயாளர்களாகவே மாற்றமடைந்துள் ளனர். இதனால் அவசர தேவைக்கு உணவினை தயார் செய்ய முடியாத வறிய மக்கள் பயன்பெறக் கூடிய வகையில் பேக்கரிகளில் விற்பனை செய்யப்படும் பாணே கை கொடுக்கிறது.

இந்த நிலையில் ஆரம்பகாலத் தவிட்டுப் பாணும் விற்பனை செய்யப்பட்டால் பலர் நன்மையடைவர். தற்போது விற்பனை செய்யப்படும் பாணுக்கு கோதுமை மா, மாஜரீன் போன்றவையே கலவையாக பயன்படுத்தப்படுகின்றன. இது சலரோ கம், பிரசர், அல்சர் நோயாளிகளுக்கு நோயினை அதிகரிக்கும் ஒன்றாகவே அமைந்துவிடுகிறது. எனவே நோயாளர் களின் நலன் கருதி மறுபடியும் தவிட்டுப் பாணை பேக்கரிகளில் விற்பனை செய் வதற்கு பேக்கரிச் சங்கங்கள் நடவடிக் கையை மேற்கொள்வார்களா?

இளையதம்பி, கோப்பாய்

## தபால் சேவையை சிரமமின்றிப் பெற வழியினை ஏற்படுத்திக் கொடுப்பார்களா?

கிளிநொச்சி நகரில் தபால் நிலையங்கள் தொலை தூரங்களில் இருப்பதுடன், தற்போது இயங்கிக் கொண்டிருக்கும் தபால் நிலை யங்களுக்கும் பொது மக்களுக்கு தெரியக் கூடிய வகையில் பெயர் பலகைகள் பொருத் தப்படாத காரணத்தால் இது தபால் நிலையமா? எனச் சந்தேகத்தை ஏற்படுத்தும் வகையில் உள்ளன. நீண்ட தூரம் கடந்து சென்று தபால் அனுப்ப வேண்டிய சிரமமும் ஏற்பட்டுள்ளது.

கிளிநொச்சியில் தொடர்பாடல் சாத னங்கள் பாவிப்போர் மிகக் குறைவானவர் களாக இருப்பதால், அதிகமான மக்கள் தபால் சேவையினையே தொடர்பாடலாக வைத் துள்ளனர். இந்த நிலையில் தபால் சேவை யைப் பெற வேண்டிய மக்கள் தபால் நிலை யங்களைத் தேடி அலைந்து திரிகின்றனர்.

குறிப்பாக வயது முதிர்ந்தோர் தமது முதியோருக்கான உதவிப் பணத்தை தபால் நிலையங்களிலேயே பெற வேண்டிய நிலை யில் தபால் நிலையங்களுக்குச் சென்று வரு வதால் பல சிரமங்களை எதிர் கொண்டுள்ளனர்.

எனவே பொதுமக்களின் நலன் கருதி தற்போது இயங்கிக் கொண்டிருக்கும் தபால் நிலையங்களையாவது மக்கள் அறியக் கூடிய வகையில் பெயர்ப் பலகைகளைப் பொருத்தி அடையாளப்படுத்தினால் தபால் சேவையைப் பெற்றுக் கொள்ளும் மக்களுக்கு உதவியாக இருக்கும்.

வெளி மாவட்டங்களுக்கான தொடர் பினை பெற வன்னி மாவட்ட மக்களுக்கு இந்தத் தபால் சேவை சாதகமாக இருக்கும் நிலையில் அவையும் சரிவரக் கிடைக்கப் பெறாவிட்டால் தொடர்பாடல் இன்றி அலைந்து திரிந்து தமது தேவைகளை நிறைவேற்ற வேண்டிய நிலைக்கு தள்ளப்படுவார்கள் என்பதையும் தெரியப்படுத்துகிறேன்.

எனவே மக்களின் சிரமங்களை நிவர்த்தி செய்வதற்கு தபால் சேவையைப் பெற்றுத் தருமாறு கிளிநொச்சி வாழ் மக்கள் சார்பாக கேட்டுக் கொள்கிறேன்.

கே.தமிழ்குரல்
கிளிநொச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணெய்ப் பசை சருமத்துக்கு

வெயில் காலத்தில் வெளியில் போவதென்பது கடினமான ஒன்றாகத்தான் இருக்கும். உங்களுக்கு எண்ணெய்ப் பசைச் சருமமாக இருந்தால் கொளுத்தும் வெயில் உங்கள் எண்ணெய்ப் பசையை மேலும் அதிகரிக்கச் செய்து உங்கள் முக அழகைக் கெடுத்துவிடும்.

கவலையை விட்டுத் தள்ளுங்கள். எண்ணெய்ப் பசையை நீங்கி அழகாக காட்சியளிக்க இதோ சில டிப்ஸ்



வெள்ளரிக்காயை, தினமும் காலையில் முகத்தில் தேய்த்து வர முகத்தில் அதிகமாக எண்ணெய் வழிவதை தவிர்க்கலாம். வெள்ளரிச் சாற்றுடன், பால் பவுடர் கலந்து தடவினாலும், எண்ணெய் வழியாமல் முகம் பிரகாசமாக காணப்படும் இதைத் தொடர்ந்து ஒரு மாத காலமாவது பின்பற்ற வேண்டும்.

தக்காளிப் பழத்தை நன்கு பிழிந்து சாறாக எடுத்து முகத்தில் தடவி காய்ந்த பின், கழுவினால் எண்ணெய் வழிவது கட்டுப்படும். தக்காளியுடன், வெள்ளரிப் பழம் அல்லது ஓட்ஸ் சேர்த்து அரைத்து முகத்தில் பூசி 20 நிமிடங்கள் கழித்தும் கழுவலாம்.

பால் மற்றும் முட்டையின் வெள்ளைக் கருவுடன், கரட் துருவலை கலந்து முகத்தில் தடவினால், அதிகமாக எண்ணெய் வழிவது குறையும்.

எண்ணெய்ப் பசை சருமத்தினர், அடிக்கடி குளிர்ந்த தண்ணீரில் முகம் கழுவ வேண்டும். முகத்துக்கு சோப்புக்குப் பதில் கடலை மாவை பயன்படுத்தலாம். இதனால், எண்ணெய் வழிவது குறைவதோடு, முகமும் பளபளப்பாக இருக்கும்.

எண்ணெய்ப் பசை சருமம் உள்ளவர்கள் மோரை முகத்தில் தடவி சிறிது நேரம் கழித்து கழுவினால், எண்ணெய் வழிவது குறையும். வெள்ளரிக்காய்ச் சாறு, எலுமிச்சம் பழச்சாறு, சந்தனத் தூள், பாதாம் பவுடர், தயிர், உருளைக் கிழங்கு சாறு ஆகியவற்றை சம அளவில் எடுத்து அவற்றை முகத்தில் தடவி சிறிது நேரம் கழித்து கழுவவேண்டும். இவ்வாறு தொடர்ந்து செய்து வந்தால், எண்ணெய் வழிவது குறையும்.

சோளத்தை நன்கு பவுடர் செய்து, தயிர் மற்றும் எலுமிச்சை சாறு கலந்து முகத்தில் பூசி சிறிது நேரம் கழித்து கழுவினால், முகத்தின் எண்ணெய்ப் பசை நீங்கும். எண்ணெய்ப் பசை சருமத்தினர், வெயிலில் சென்றுவிட்டு வீட்டிற்கு வந்ததும், சிறிது தயிர், கடலைமாவு மற்றும் எலுமிச்சைச் சாறு கலந்து முகத்தில் பூசி சிறிது நேரம் கழித்து கழுவினால் அதிகப்படியாக எண்ணெய் வழிவது குறைந்து முகம் பளபளக்கும்.

எலுமிச்சைச் சாறு, முட்டையின் வெள்ளைக்கரு, திராட்சை சாறு ஆகியவற்றை சம அளவு எடுத்துக் கொண்டு அவற்றை நன்றாக கலக்கி, முகத்தில் பூச வேண்டும். சிறிது நேரம் கழித்து முகத்தை தண்ணீரால் கழுவவேண்டும். பப்பாளிக் கூழ், முல்தானி மட்டி, வேப்பிலை பொடி ஆகியவற்றை நன்றாகப் பசை போல் குழைத்து முகத்தில் பூசி சிறிது நேரம் கழித்து வெதுவெதுப்பான தண்ணீரில் கழுவ வேண்டும். இவ்வாறு வாரம் இரண்டு முறை செய்தால், முகத்தில் வழியும் அதிகப்படியான எண்ணெய்த் தன்மை குறையும்.



# ஆப்பிள் பெண்ணே நீதானோ

✱ சருமத்தின் பளபளப்பை அதிகரிக்க, 2 மேசைக்கரண்டி ஆப்பிள் விழுது, 1/2 கரண்டி பால் பவுடர், 1/2 கரண்டி பார்லி பவுடர் பால் கலந்து முகத்தில் தேய்க்கவும்.

✱ ஆப்பிள் விழுது, தக்காளி விழுது, தர்பூசணி விழுது மூன்றையும் சம அளவு எடுத்து, பஞ்சில் தோய்த்து முகத்தில் ஒற்றி எடுத்தால் முகம் நல்ல பிரகாசமாகவும் குளுமையாகவும் இருக்கும்.

✱ ஆப்பிள் சாறு, வெந்தயத் தூள், சீயக்காய்த்தூள் ஆகியவற்றை வெந்நீரில் கலந்து தலைக்கு தேய்த்து அலசினால் முடி பிசுபிசுப்பு நீங்கிவிடும்.

✱ ஆப்பிள் இலைகளை காய வைத்து அதனை பொடியாக்கி ஷாம்பு அல்லது சீயக்காய்த் தூளுடன் கலந்து தலைக்கு தேய்த்து குளித்தால் கூந்தல் மென்மையாகும்.

## அழகைத் தக்க வைக்க...

✱ ஒரு நாளைக்கு 3 லீற்றர் தண்ணீராவது அருந்த வேண்டும்.

✱ மலச்சிக்கல் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

✱ அதிக குளிரூட்டிய பானங்கள், உணவுப் பொருள்கள், எண்ணெயில் பொரிக்கப்பட்ட உணவுகள், கொழுப்புச் சத்து அதிகம் உள்ள பொருள்கள் போன்றவற்றை தவிர்ப்பது மிகவும் நல்லது.

✱ மென்மையான உணவுகளை அதிகம் சாப்பிட வேண்டும். பழங்கள் அதிகம் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

✱ தினமும் இரு முறை குளிக்க வேண்டும். சோப்புகளை அடிக்கடி மாற்றக் கூடாது. இவை உடலில் அலர்ஜியை ஏற்படுத்தும்.

✱ கோபம், மன அழுத்தம் இவற்றைக் குறைத்துக் கொள்ள வேண்டும். யோகா தியானம் செய்தால் உடலின் இரத்த ஓட்டம் சீராகி அனைத்து உறுப்புகளும் பலம் பெறும். இதனால் தோல் பளபளப்புடன் இருக்கும்.



# கைகளையும் கவனியுங்கள்



மென்மையான மற்றும் மிருதுவான சருமத்தை விரும்பாதவர்கள் யாரும் இருக்க முடியாது. உடலில் மிகவும் அழகான பகுதி கைகள் என்றே கூறலாம். ஆனால், கைகள் பராமரிப்பற்கு அவ்வளவாக யாரும் முக்கியத்துவம் கொடுப்பதில்லை. பாத்திரங்கள் கழுவுதல், துணி துவைத்தல் உட்பட பல வேலைகளுக்கு கைகளையே பயன் படுத்துகிறோம்.

இந்த செயல்களுக்கு இரசாயனங்கள் கலந்த பொருள்களைப் பயன்படுத்திய பின்னர் சன்ஸ்கிரீம் போன்றவற்றை உபயோகிக்கத் தவறி விடுகிறோம். இதன் விளைவாக, கைகளில் வறட்சி, அரிப்பு, வெடிப்பு, இரத்தம் கசிதல் மற்றும் வலி ஆகியவை ஏற்படுகின்றன. எனினும், கைகளைப் பராமரிக்க போதிய கவனம் செலுத்தினால், இவற்றை தவிர்க்க முடியும். அதற்காக சில டிப்ஸ்கள்...

### கைகள் பராமரிப்பு

முகத்தில் காணப்படும் தோலைப் போலவே, கைகளின் பின்புறம் காணப்படும் தோலும் மிகவும் மென்மையானது. எனவே, முகத்தைப் போலவே, கைகளுக்கும் அதிக கவனம் செலுத்தி பராமரிக்க வேண்டும்.

குறிப்பாக, கைகளில் ஏற்படும் ஈரப்பதம் இழப்பை ஈடு செய்ய, மாய்சரைசர் கிரீம் போன்றவற்றை பயன்படுத்துவதோடு, இரசாயனங்கள் நேரடியாக கைகளில் படுவதையும் தவிர்க்க வேண்டும்.

ஒவ்வொரு வாரத்தின் இறுதியிலும், வெதுவெதுப்பான நீரில் சிறிதளவு உப்புக் கலந்து அதில் கைகளை மூழ்குமாறு, 15 நிமிடங்கள் வைத்திருக்க வேண்டும். அதன் பின் கைகளை நன்றாக துடைத்துவிட்டு, கைகளுக்கான கிரீம் தடவ வேண்டும். இது கைகளின் தோலுக்கு ஊட்டமளிக்கும். கிரீம்கள் தடவிய பின், அவற்றின் மேலே கையுறைகள் அணிந்து கொள்வது நல்லது.

கைகளின் தோல் மிகவும் வறட்சியாக உடையவர்கள், மேலே சொன்ன படி கைகளை கழுவிய பின், ஹேண்ட் கிரீமை அடர்த்தியாகத் தடவ வேண்டும். பின், அதன் மேல் மெல்லிய துணியை போர்த்தி, சூடான பாரபன் மெழுகை ஊற்ற வேண்டும். பாரபின் மெழுகின் சூட்டால், இரத்த ஓட்டம் அதிகரித்து, தோலில் காணப்படும் துளைகள் விரிந்து ஹேண்ட் கிரீம் சிறப்பாக உறிஞ்சப்படும்.

கைகளில், இறந்த செல்களை நீக்க கரகரப்பான கிரீம்கள் தடவி அவற்றை நன்கு தேய்க்க வேண்டும். பின், சிறிது நேரம் கழித்து அவற்றை கழுவிய பின், மிதமான ஹேண்ட் வாஷ் தடவ வேண்டும்.

அவற்றை மிதமான தண்ணீரால் கழுவ வேண்டும். இதனால் கைகளில் இரத்த ஓட்டம் சீராகும். மிருதுவான துணியால் கைகளைத் துடைத்த பின், ஹேண்ட் லோஷன் தடவ வேண்டும். கைகளை சிறந்த முறையில் பராமரிக்க வாரத்துக்கு ஒரு முறையாவது இவ்வாறு செய்தால், நல்ல பலன் கிடைக்கும்.

# கரு நீள கூந்தலை விரும்பாதோரும் உண்டோ...?

கரு நீள கூந்தலை விரும்பாத பெண்ணும், வழுக்கைத் தலையை விரும்பும் ஆணும் இந்த உலகத்தில் இருப்பது சாத்தியமா? கூந்தல் நீளமாக... அடர்த்தியாக... கருமையாக வளர தவம் கிடக்கும் பெண்களுக்காக...



✱ விற்றமின் 'பி' குறைபாட்டால் விரைவில் தலைமுடி வெளுக்க ஆரம்பிக்கும். ஊட்டம் மிக்க உணவு இந்த குறைபாட்டை நீக்கும்.

✱ நெல்லிக் காயையும், ஊற வைத்த வெந்தயத்தையும் நன்றாக அரைத்து அந்த விழுதைத் தலையில் தடவி ஊற வைப்பது குளிர்ச்சியைத் தரும். கண் எரிச்சலைப் போக்கும்.

✱ அழுகின தேங்காயைத் தூக்கி எறியாமல் சிறிது சுடு நீருடன் அரைத்துத் தலையில் தடவி ஊறவைக்கவும். பிறகு நன்றாக 'மசாஜ்' செய்யவும். மயிர்க் கால்கள் வலுப்பெற சரியான வழி இது.

✱ இரண்டு கரண்டி வினிகருடன் கடலை மாவைக் குழைத்துக் கால்மணி நேரம் ஊறவைக்கவும். இதை நன்றாக மயிர் கால்களில் படும்படி தடவி அரைமணி நேரம் ஊறிய பின்னர் அலசி விடவும். பொடுகுத் தொல்லை போயே போய்விடும்.

✱ நீங்கள் உபயோகிக்கும் ஷாம்பூவுடன் சில துளிகள் கிளிசரின் சேர்த்துக் கொண்டால் முடி அறுந்து போகாது.

✱ தேங்காயைத் தண்ணீர் சேர்க்காமல் அரைத்துப் பால் எடுத்து இதை காய்ச்சி எண்ணெய் எடுத்து அந்த எண்ணெயைத் தலையில் தடவி ஊறிய பின் சீயக்காய் அல்லது கடலை மாவு தேய்த்து அலசவும். தொடர்ந்து இவ்வாறு செய்த வந்தால் பலன் கிட்டும். எண்ணையைச் சேமித்து வைத்துக் கொள்ளலாம்.

✱ விளக்கெண்ணையைப் போல் குளிர்ச்சி தருவது வேறு எதுவுமே இல்லை. விளக்கெண்ணெய் இரண்டு கரண்டி, தேங்காய் எண்ணைய் ஒரு கரண்டி எடுத்து இலேசாகச் சூடவைத்து மயிர்க் கால்களில் நன்றாகப் படும்படி தடவி விடவும். ஒரு பழைய துணியை வெந்நீரில் நனைத்து பிழிந்து, தலையின் மீது சுற்றவும். அந்தச் சூடு உள்ளே இறங்கும். சற்று ஆறியதும் மீண்டும் அவ்வாறு செய்யவும். பிறகு தலையைஷாம்பூபோட்டுஅலசிவிடவும். முடி உதிராமல் இருக்க முத்தான வழி இது.

✱ கூந்தல் வறண்டு இருந்தால ஒரு கிண்ணத்தில் மருதாணிப் பொடி, தேங்காய்ப் பால், தேங்காய் எண்ணெ சேர்த்து குழைத்து தலையில் மசாஜ் ... கழித்துத் தலைக்குக் குளிக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org